Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 20

# ஈழநாடு

சுதந்திர வார இதழ்

மலர் 1. யாழ்ப்பாணம், விகாரி, ஆடி 16-ஆம் நாள். (1-8-59) சனிக்கிழமை இதழ் 26.

உங்களுக்குத் தேவையான எல்லாவித சாய்ப்புச் சாமான்களுக்கும், சூட்கேஸ், சப்பாத்து வகைகளுக்கும்

கணேசன் ஸ்ரோர்ஸ்

78, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

# வெகு விரைவில் இலங்கைக்குப் புதிய கவர்னர் - ஜெனரல்

## சேர் ஸிரில் டி' சொய்ஸா நியமனம்?

## கொழும்பு வீதிகளில் டட்லியின் தேர்தல் விளம்பரப் படங்கள்

— நமது கொழும்பு நிருபர் —

**இலங்கையின் புதிய கவர்னர் ஜெனரலாக செனேட்சபைத் தலைவரான 'சேர் ஸிரில் டி' சொய்ஸா வெகு சீக்கிரத்தில் நியமிக்கப்படலாமென்று கூறப்படுகிறது.**

நாவலப்பிட்டி எம். பி. யான ஆர். ஈ. ஜயதிலகாவின் 25 வருட அரசியல் சேவையைப் பாராட்டு முகமாக, சேர் ஸிரிலின் தலைமையில் நடைபெற்ற விருந்தில் சேர் ஸிரிலைப் பிரதமர் வெகுவாகப் பாராட்டிவிட்டு, "இந்த இங்கிதமான கனவானை, மிகப் பெரிய பொறுப்புள்ள பதவிக்கு உயர்த்த நாங்கள் தீவிரமாக யோசித்து வருகிறோம்" என்று அறிவித்தார்.

இப்போதுள்ள கவர்னர் ஜெனரல் சேர் ஒலிவரின் பதவி காலம், சென்ற ஜூன் மாதத்தின் முடிந்ததாயும், மகாராணியார் அப்பதவி காலத்தை மூன்று மாதங்களுக்கு நீடித்திருப்பதாயும் தெரிகிறது. அதாவது செப்டம்பர் மாதத்துக்கு சேர் ஒலிவர் ஓய்வுபெற வேண்டியிருக்கும்.

அவருக்கு அடுத்தபடியாக யாரை நியமிப்பது என்ற கேள்வி எழுந்தது. சேர்ஜோன் கொத்தலாவலையின் பெயரும் இவ்விஷயமாக அடிபட்டது. சேர் ஸிரில் சொய்ஸா ஒரு கத்தோலிக்கர். அவரை கவர்னர் ஜெனரல் பதவிக்கு நியமிப்பது பற்றிப் பலத்த ஆட்சேபங்கள் எழக்கூடும். என்றாலும், "குறுகிய கட்சி வாதங்களை விட்டுத் தேசிய நன்மையையே முக்கியமாகக் கருதவேண்டும்" என்று பிரதமர் மதித்து, சேர் ஸிரிலுக்கு அப்பதவி அளிக்கத் தீர்மானித்து விட்டார் போலும்.

இதுபற்றி ஆட்சேபங்கள் எழுந்தால், இது தற்காலிகமான ஏற்பாடே என்றும், புதிய அரசியல் திட்டத்தின்படி, இலங்கை குடியரசு ஆகிய பின், புதிய தலைவரைத் தெரிவு செய்ய வேண்டியிருக்குமென்றும் பிரதமர் சமாதானம் கூறக்கூடும். எப்படியும் வெகு சீக்கிரத்தில் சேர் ஒலிவர் விலகி அப்பதவிக்கு சேர் ஸிரில் நியமிக்கப் படலாமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

### கொழும்புத் தெருக்களில் டட்லியின் படங்கள்

கொழும்பின் முக்கிய வீதிகளில் யு. என். பி. கட்சித் தலைவரான டட்லி சேனநாயக்காவின் படத்துடன் கூடிய தேர்தல் விளம்பர அட்டைகள் வர்த்தக விளம்பரம் போல் வைக்கப்பட்டுள்ளன. "அவரை அன்றும் நம்பினோம்" என்று மேலேயும், மத்தியில் டட்லியின் படம் போட்டு கீழே, "இன்றும் அவரை நம்புகிறோம்" என்றும் சிங்களம், தமிழ், ஆங்கிலம் இம்மூன்று மொழிகளிலும் வர்ண அச்சடித்து கவர்ச்சியாக வைத்துள்ளனர்.

(9ஆம் பக்கம் பார்க்க)

# ஆளும் கட்சியில் நம்பிக்கையில்லை!

## மாற்றத்தை விரும்புகிறார்கள் மக்கள்

## யாழ்ப்பாணத்தில் சமசமாஜிகள் விளக்கம்

யாழ்ப்பாணம்

"யு. என். பி., ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி, தமிழரசுக் கட்சி இவை போன்ற வகுப்புவாதக் கட்சிகளினால் ஒருபோதும் இந்நாட்டின் பிரச்சினைகள் தீர்க்கப்பட மாட்டா! அவை நாட்டைப் பிளவுபடுத்தி நெருக்கடியான நிலைமையை நீடிக்கவே உதவும்". இவ்வாறு லங்கா சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த திருமதி. விவியன் குணவர்த்தன, எம். பி. கூறினார். சென்ற ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் புதிய பஸ் நிலையத்தில் நடைபெற்ற லங்கா சமசமாஜக் கட்சியின் தருமகுலசிங்கம் ஞாபகார்த்தக் கூட்டத்திற் பேசும் பொழுதே அவர் இவ்விதம் குறிப்பிட்டார். மேலும் அவர் தொடர்ந்து பேசியதாவது:

இன்று ஆட்சிபுரியும் அரசாங்கத்தின்மீது மக்களுக்கு நம்பிக்கையில்லையென்பதும், அவர்கள் வேறொரு அரசாங்கத்தை நாடுகிறார்களென்பதும் வெளிப்படை. லங்கா சமசமாஜக் கட்சி தான் இந்த அரசாங்கம் என்பதைத் தொழிலாள மக்கள் உணர்ந்திருந்த போதிலும், துரதிர்ஷ்டவசமாக மத்தியதர வகுப்பினரும், விவசாய மக்களும் வகுப்புவாதம் என்ற போதையில் மயங்கிக் கிடக்கின்றனர். இதற்குக் காரணம் நாட்டிலுள்ள வகுப்புவாதக் கட்சிகளும், லங்கா சமசமாஜக் கட்சிக்கு எதிராகப் பலவிதங்களிலும் பிரசாரம் செய்யும் அரசாங்கமுமே.


இன்றைய பொருள் விலை ஏற்றம் லங்கா சமசமாஜிகள் நடாத்திய வேலை நிறுத்தங்களின் பயனாகவே ஏற்பட்டுள்ளது என்ற வீண் குற்றத்தை அரசாங்கம் எம்மேல் சுமத்துகிறது. வகுப்புவாதத்தையே நம்பியிருக்கும் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கத்துக்கு வேறு என்ன தான் சொல்ல முடியும்?

இப்பொதுக் கூட்டத்திற்குத் தலைமை வகித்த திரு. ஏ. விஸ்வநாதன், திரு. தர்மகுலசிங்கத்தின் தியாக சேவையை அங்கிருந்தோருக்கு ஞாபகப்படுத்தினார்.

திரு. அனில் முனசிங்க, எம். பி. தமிழ் மக்களை வகுப்புவாதப் பாதையை விட்டு விலகி, முன்னேற்றமான பாதையில் அடி எடுத்து வைக்கும்படி வேண்டிக் கொண்டார்.

திருவாளர்கள் எஸ். நாகலிங்கம், தர்மலிங்கம் ஆகியோரும் பேசினர்.

ஒரு ரூபாவுக்கு மிகுதியான மைல்கள்




பிரிட்ஜ்ஸ்டோன் டையர்கள்

Distributors:

TUCKERS AUTODROME

ஏகவினியோகஸ்தர்கள் :

ஓட்டோஸ் லிமிடெட்

யாழ்ப்பாணம்

போன்: 496 தந்தி: "ஓட்டோஸ்"

# மலைநாட்டில் இரண்டு லட்சம் தமிழருக்கு மேல் வேலையில்லை

## வடக்கு, கிழக்கு மாகாணங்களில் குடியேற்றப் புதிய யோசனை

## தமிழ் எம். பிக்கள் அதிக சிரத்தை காட்ட முன் வருவார்களா?

— நமது அரசியல் நிருபர் —

இலங்கை மலைநாட்டிலே இரண்டுலட்சம் தமிழருக்கு மேல் வேலையின்றித் தவிக்கிறார்கள். நாடற்றவர்கள் என்ற காரணத்தால் இவர்களுக்கு எங்கும் எந்த வேலையும் கிடைக்க வழியில்லை. இவர்களின் எண்ணிக்கை வரவர அதிகரித்து வருகின்றது.

இதே சமயம் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலே புதிதாகச் சாகுபடி செய்ய வேண்டியுள்ள நிலம் அதிகமுண்டு. உழைப்பதற்கு அங்கு ஆட்கள் கிடைக்கவில்லை. மலை நாட்டில் வேலையில்லாமல் இருக்கும் தமிழர்களில் சில ஆயிரம் பேர்களையாவது அவ்விரு மாகாணங்களிலும் குடியேறச் செய்து புதிய நிலங்களைத் திருத்திச் சாகுபடி செய்ய, கிழக்கு மாகாண தமிழ் எம். பி. ஒருவர் மிகவும் ஆவல் காட்டுகின்றார்.

### நல்ல யோசனை

மலைநாட்டுத் தமிழ்த்தலைவர் ஒருவரை இவ்விஷயமாகக் கேட்டதற்கு வேறு இடங்களில் சென்று குடியேறி சாகுபடி செய்ய, மலைநாட்டுத் தமிழர் தயாரென்றார், ஆனால் அவர்கள் யாருக்கும் அடிமைகளாக இல்லாமல், சொந்த நிலத்தில் உழைக்கவே விரும்புவதாயும், தக்க வசதிகள் செய்து கொடுத்தால் பல்லாயிரம் தமிழ்க் குடும்பங்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் குடியேறி, உணவு உற்பத்தியைப் பெருக்கி, அம்மாகாணங்களைச் செழிக்கச் செய்வாரென்றும் தெரிவித்தார்.

சமீபத்தில் நாவலப்பிட்டி எம். பி. யான ஆர். ஈ. ஜயதிலகா இதே விஷயமாக ஒரு யோசனை கூறினார். மலைநாட்டிலுள்ள தமிழர்களில் 50 ஆயிரம் பேர்களுக்கு நிலம் கொடுத்து வடக்கு கிழக்கு மாகாணங்களில் குடியேற்றலாமென்றார். அவ்விரு மாகாணத் தமிழர்களும் இந்த யோசனையைப் பெரிதும் வரவேற்கவே செய்கிறார்கள்.

### பிரதமர் செவிசாய்த்தால்

ஆனால் அரசாங்கத்தின் கருத்து என்ன என்று தெரியவில்லை. இலங்கை இந்தியர் பிரச்சினையை மனிதாபிமானத்துடன் தீர்க்கப்போவதாகத் தெரிவித்த பிரதமர் பண்டாரநாயக்கா, இந்த யோசனைக்குச் செவி சாய்த்தால், இப்பிரச்சினை ஓரளவாவது தீருவதுடன், நாட்டின் உணவு உற்பத்தி பெருகவும், நமது செல்வம் வீணாக வெளியேறாதபடி தடுக்கவும் கூடும்.

இவ்விஷயத்தில் தாம் எது செய்தாலும் அதைத் தமது அரசியல்எதிரிகள் கண்டித்துக் கிளர்ச்சி செய்யக்கூடுமென்று பிரதமர்அஞ்சக் காரணமுண்டு. ஆனால் சம்பந்தப்பட்ட கண்டி நாட்டுச் சிங்கள எம். பிக்களும், வடக்கு, கிழக்கு மாகாணத் தமிழ் எம். பிக்களும், இலங்கை இந்தியத் தலைவர்களும் பரஸ்பர ஒற்றுமைக்கான முறையில் கலந்துபேசி, ஒரு திருப்திகரமான முடிவைச் செய்து, பிரதமரை அணுகினால், பிரதமர் இதற்குச்செவிசாய்த்து நடைமுறைக்குக் கொண்டுவர முற்படலாம்.

### முக்கிய கேள்வி

இதில் யார் முதல் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பதே கேள்வி. இது முக்கியமாகத் தமிழரைப்பற்றிய விஷயம். தமிழர் தான் முனையவேண்டும். கோப்பாய்ப் பிரதிநிதி வன்னியசிங்கம், யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் ஒரு கூட்டத்தில் பேசுகையில், தமிழர் விஷயத்தில் அநுதாபம் காட்டும் சிங்களவருடன் ஒத்துழைக்க வேண்டுமென்று பகிரங்கமாகக் கூறினார். அவரது இப்

(9 ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்


## குகன் அச்சகம்

தெல்லிப்பழை.

8 - 7 - 59 இல் ஆரம்பிக்கப்பட்டது.

சகல விதமான அச்சுவேலைகளும் சிறந்த முறையில் குறிக்கப்பட்ட தினத்தில் செய்து கொடுக்கப்படும்.

பூண்டுலோயாவிலிருந்து வெளிவந்த **“வெற்றிமணி”** ஆவணி தொடக்கம் எங்கள் அச்சகத்திலிருந்து வெளிவரும்.

தனிப்பிரதி: **20 சதம்**
வருட சந்தா: **ரூபா 2-50**

**விற்பனைக்கு**

தரத்தில் சிறந்தது - **வீனஸ் சோப்.** வீனஸ் சோப் தொழிற்சாலை, கே. கே. எஸ். ரூேட், யாழ்ப்பாணம்.

உடைகள் வெண்மையாக வேண்டுமானால் **வீனஸ் சோப்.** வீனஸ் சோப் தொழிற்சாலை, கே. கே. எஸ். ரூேட், யாழ்ப்பாணம்.

அதிக நுரை தந்து உடைகளை விரைவில் வெண்மையாக்குவது **வீனஸ் சோப்.** வீனஸ் சோப் தொழிற்சாலை, கே. கே. எஸ். ரூேட், யாழ்ப்பாணம்.

உங்களுக்குத் தேவையான எல்லாவித சாய்ப்புச் சாமான்களுக்கும் **M. A. டோசாஜி அன் கோ.,** ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

எல்லாவித பலசரக்குச் சாமான்களுக்கும், குழந்தைப் பால் உணவுகளுக்கும் ஞாபகமிருக்கட்டும் **M. A. டோசாஜி அன் கோ.,** ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்.

உங்களுக்குச் சில்லறையாகவும், மொத்தமாகவும் சாய்ப்புச் சாமான்களோ அல்லது பலசரக்குச் சாமான்களோ வேண்டுமானால் **M. A. டோசாஜி அன் கோ.,** ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

இலங்கையில் தயார் செய்யும் சோப்புகள், தேயிலை மற்றும் இதர சாமான்களுக்கும் விற்பனை ஏஜண்டாக இருக்க விரும்புகிறேன். ஏஜன்ஸி தருவோர் விபரமான கடிதமும் சாம்பிளுடன் எழுதவும்.

**K. துளசிராம்**
29, மேலப்பாண்டியன் தெரு, மதுரை.

**அறிவித்தல்**

தற்பொழுது எல்லோரையும் ஆதரிப்பதற்காக மாதாந்தம் ரூபா 5-, 10-, 15-, 20- முதலிய கட்டணங்களை ஏற்றுக் கொள்கிறோம். ஊழியர்கள் விண்ணப்பிக்கவும்.

**ஸ்ரீ லங்கா கஷ்டநிவாரண சங்கம்**
ஆபரண மாளிகை பில்டிங் 76/3, 78/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

புற்று நோயைத் தமிழ் மருந்தால் தடையின்றி மாற்றலாம். உலகினிலே கொடிய ரோகம் புற்று நோய் என்பது எல்லோரும் ஒப்புக்கொள்ளும் உண்மை. இந்நோய் சத்திரசிகிச்சை, ஒளிசிகிச்சை மூலமே குணப்படலாமே தவிர தமிழ் மருந்தினலல்ல என்ற அபிப்பிராயம் இனி நிலவ இடமில்லை. மீட்க முடியாதெனக் கைவிடப்பட்ட அநேகர் **யோகீஸ்வர ரசம்** என்ற பெயருடைய தமிழ்மருந்தினல் குணமடைந்துள்ளனர். இம்மருந்திற்கு அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. புற்று நோயைப் பற்றி என்னுடன் ஆலோசியுங்கள்.

**பொ. செல்லையா**
ஆயுள்வேத வைத்தியர்
**கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**


## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. *2360*

குருநாதர் நாகனதி கைம் பெண் சிவகாமிப்பிள்ளை புங்குடுதீவு மேற்கு.

வழக்காளி

எதிராக

கந்தையா ஆறுமுகம் 4-ம் வட்டாரம் புங்குடுதீவு மேற்கு.

தற்போது காலஞ்சென்ற அவரின் மனைவி ஆச்சிக்குட்டியின் ஆதனத்தின் முறையான பிரதிநிதி.

எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் MB 2360-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் 3 துண்டுக் காணிகள் 1959-ம் ஞூ ஆவணி மீ 31 ௳ திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத்தொகை:-** முதல் வட்டி ரூபாய் 800/-ம் 30-7-58 தொடக்கம் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 231/62.

### ஆதன விபரம்

1. “வடமாகாணம் யாழ்ப்பாணம் தீவுப்பகுதி புங்குடுதீவு கோவிற் பற்று புங்குடுதீவு கிழக்கிறை” பொருக்குமண்காடு, நிலப்பரப்பு 40 எல்லை கிழக்கு நாகமுத்துவுக்கும் மறுபேருக்குமுரியவாதனம் வடக்கு பசுபதிப்பிள்ளை கதிரவேலுவுக்கும் பங்காளருக்கு முறைவாதனம் மேற்கு, சுவாமிநாதர் வினசித்தம்பியினு தனம் தெற்கு, கடற்கரை இதில் முழுவதில் சொரியலாய் மூன்றிலொன்று 1/3 பங்கு.

2. ஷெ இறை. வல்லன்பொருக்கு, நிலப்பரப்பு 42 இதில் கிழக்குப்புறமாக நிலப்பரப்பு 21 வான்பயிர், வீடு, எல்லை கிழக்கு, சேதர் கணவதிப்பிள்ளையின் உரிமைக் காரருக்குரியவாதனம் வடக்கு கதிரவேலன் மகன் சின்னப்பிள்ளையினுதனம் மேற்கு, கந்தையா கைம் பெண் வியாலாட்சிக்குரியவாதனம் தெற்கு கந்தப்பு கைம் பெண் பெரியநாச்சிக்குரியவாதனம் இதிற் சொரியலாய் நிலப்பரப்பு 4 1/2 யும் அதற்குரியவைகளும்.

3. ஷெ புங்குடுதீவு மேற்கிறை பெரியகரந்தலி நிலப்பரப்பு 44, வான்பயிர் எல்லை கிழக்கு, ஆறுமுகம் இராமநாதனுக்கும், பங்காளருக்குமுரிய ஆதனம். ஆறுமுகம் சின்னையாவினுதனம் மேற்கு சுப்பையா பெண் தங்கம்மாவினுதனம் தெற்கு விரையாநிலம் இதின் சொரியலாய் 5 பரப்பு அல்லது 544 பங்கு.

ஆ. ச. இராசேந்திரம்
ஒப்பம்
**கொமிஷனர்& விலை மதிப்பாளர்**

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. *2164*

பிரான்சிஸ் கைம் பெண் ஆரோக்கியம் யாழ்ப்பாணம்.

வழக்காளி

எதிராக

வைத்தியாம்பிள்ளை சவிரிமுத்து சூசைப்பிள்ளை நாரந்தனை.

எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B 2164-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி, 1959-ம் ஞூ ஆவணி மீ 22 ௳ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத்தொகை:-** முதல் வட்டி ரூபாய் 985/- ம் 15-4-58 தொடக்கம் 9-9-58 வரைக்கும் ரூபாய் 500/- க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 106/40.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் தீவுப்பகுதி ஊர்காவற்றுறை. கரம்பன் வடக்குக் கொக்கிளாய் மண்டை. நிலை, 30-தும் அதற்குரியவைகளும் எல்லை கிழக்கு, V. சுவானி கைம் பெண் சவிரியாச்சியின் ஆதனம். வடக்கு பேதுறுப்பிள்ளை பெண் அந்தோனியாப்பிள்ளையின் ஆதனம். மேற்கு வாய்க்கால் தெற்கு மரியான் பெண் அந்தோனியாப்பிள்ளையினுதனம்.

ஆ. ச. இராசேந்திரம்
ஒப்பம்
**கொமிஷனர் & விலை மதிப்பாளர்.**

கிழக்குத் தபால் : : நமது நிருபர்

# விவசாயத்தில் இளைஞர் ஆர்வம்

## அமைதியைக் குலைத்த ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு

மட்டக்களப்புப் பகுதியிலுள்ள இளைஞர் விவசாயக் கழகங்கள் சென்ற். மேரிஸ் பாடசாலையில் தங்கள் வருடாந்த விழாவை நடாத்தினர்கள். அங்கு இளம் விவசாயிகளால் தயாரிக்கப்பட்ட உணவுப் பொருள்கள், தையற்பொருள்கள், விவசாய சம்பந்தமான மாதிரி உருவங்கள், கால்நடைகள், கோழிகள் என்பன காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. அத்துடன் கதம்ப நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. அங்கு நடைபெற்ற பல வகைப்போட்டிகளிலும் வெற்றிபெற்றவர்களுக்குத் திருமதி க. திருநாவுக்கரசு பரிசுகளை வழங்கினர். அதிகமான போட்டிகளில் வெற்றியீட்டிய இராஜாஜி இளைஞர் விவசாயக் கழகத்திற்கு முதற் பரிசாகிய வெள்ளிக்கிண்ணம் ஒன்று வழங்கப்பட்டது.

இளைஞர்கள் துணிவுடன் விவசாயத்திலிறங்கினல் நாட்டின் எதிர்காலம் வளமுள்ளதாக அமையுமென்பதை இக்காட்சி எடுத்துக் காட்டியது.

### ஓர் ஆர்ப்பாட்டம்

மத்திய கல்லூரி விளையாட்டுப் போட்டி, முற்றவெளியில் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் ஒரு சலசலப்பு ஏற்பட்டது. விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட நிதியமைச்சரின் பாராளுமன்றக் காரியதரிசி ஜனுப் எம். எம். முஸ்தபா மாணவர்களின் அணிவகுப்பைப் பார்வையிடச் செல்லும் வேளையில் திரு. எம். மாணிக்கம், திரு. எஸ். இராசதுரை எம். பி. ஆகியோரும் கூடவந்த சிலரும் ‘வெட்கம்’ ‘வெட்கம்’ என்று ஆர்ப்பாட்டம் செய்தனர். உடனே பொலிசார் அவர்களை வெளியேற்றி அமைதியை நிலைநாட்டினர்கள். விளையாட்டு தொடர்ந்து நடந்தது. கைது செய்யப்பட்டவர் சில மணி நேரங்களின் பின்பே விடுதலையாயினர்.

இவ்வார்ப்பாட்டங்கள் நடந்தும் அவற்றை மதியாது, தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவரான நகர சபைத் தலைவர் திரு. ஏ. எஸ். ரி. கனகசபை ஜனுப் முஸ்தபாவுடன் மாணவர்களின் வணக்கத்தை ஏற்றுக்கொண்டது குறிப்பிடற்குரியது.

### கலைக் கட்டட நிதி

இந்து மகளிர் மன்றத்தினர் ஒரு கலைக் கட்டடத்தை நிறுவுதற்காக நடாத்திய இசை, நடன நிகழ்ச்சிகள் அனைவரின் பாராட்டுதல்களையும் பெற்றுக் கொண்டன. திருமதி சசிலேகா பாலச்சந்திரனின் ‘ஜலதரங்கம்’ அனைவரின் உள்ளத்தையும்கொள்ளைகொண்டுவிட்டது. மன்றத்தினரின் நடனவகுப்பு மாணவிகள் தமது கலைத்திறனை நன்கு எடுத்துக்காட்டினர்கள். இந்த நடனங்களைத் தயாரித்த நாட்டிய ஆசிரியர் திரு. மா. கயிலாயபிள்ளை அனைவராலும் பாராட்டப்பட்டதுடன், மன்றத் தலைவியினலும் கௌரவிக்கப்பட்டார்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில்

# இரு நாடகங்கள்

இலங்கையில் ஆங்கில மொழிக்குச் சமாதி கட்டப்படுகின்றதெனக் கண்ணீர் விடுவோர் சென்ற சனிக்கிழமை இரவு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவர்கள் திறந்த வெளி அரங்கில் நடித்த ஆங்கில நாடகத்தைப் பார்த்திருப்பார்களாயின் ஆங்கில மொழி இன்றும் அரியாசனத்தில் இருந்துதான் வருகின்றதென்பதை அறிந்து மகிழ்ந்திருப்பார்கள்.

அனரோல் பிரான்ஸ் எழுதிய இந்நாடகம் பத்தொன்பதாம் நூற்றுண்டுக்குச் சபையோரை அழைத்துச் சென்று பாரிஸ் நகரிலுள்ள நீதிபதி பொற்றல் என்பவர் தமது ஊமை மனைவியுடன் வாழ்க்கை நடாத்தியதையும், சத்திர சிகிச்சையின் பின் அவரின் மனைவி பேசும் சக்தி பெற்று சதா அளந்துகொட்டி நீதிபதிக்குத் தலைவலியை உண்டாக்கியதையும் சுவைபட எடுத்துக் காட்டுவதாகும். ஈற்றில் நீதிபதி செவிடனுக இருந்துவிட்டால் நல்லதென எண்ணிக் காதுகளுக்குள் மருந்துத் தூளைத் தூவச் செய்து செவிடாகிவிடுகின்ருர். இது ஒரே நகைச்சுவையூட்டும் நாடகமாக இருந்தாலும் சில சமயங்களில் இரக்கத்தை உண்டாக்கி விடுகின்றது.

நீதிபதியாக நடித்த மக்கின்ரயரும், அவருடைய மனைவியாக நடித்த ஆம்ஸ்ரோங்கும் தமது பாத்திரங்களை நன்குணர்ந்து நடித்ததுமன்றிச் சபையோரை வயிறு குலுங்கச் சிரிக்கவும் செய்தனர். ஏனைய பாத்திரங்களைத் தாங்கி நடித்த நவரத்னம், இராஜு இராசையா, இராஜன் சிற்றம்பலம், மனோ தர்மராஜா, ஜயசீலன், கருணுராஜா, ஜெகநாதன், எஸ். சிற்றம்பலம் ஆகியோரும் தமது நடிப்பின் மூலம் சபையோரை மகிழ்வித்தனர். அப்போதிக்கரியாக நடித்தவர் இன்னும் செம்மையாக நடித்திருக்கலாம். ஒப்பனையும் (மேக்கப்) உடையலங்காரமும் மேடை அமைப்பும் ஏற்றமுறையில் விளங்கின. மத்திய கல்லூரிக்குப் பெருமை ஈட்டிக் கொடுத்துள்ளது இந்த ஆங்கில நாடகம்.

### உலோபி உலகநாதர்

மொலியர் எழுதிய ஆங்கில நாடகமாகிய ‘மைசர்’ (Miser) என்ற நாடகத்தைத் தழுவி உலோபி உலக நாதர் என்ற பெயருடன் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் திறந்தவெளி அரங்கில் நடிக்கப்பெற்ற இந்நாடகம் கல்லூரி மாணவர்களுக்கு நாடகத்துறையில் உள்ள ஆர்வத்தை நன்கு எடுத்துக் காட்டுகின்றது. பணமே சகலதும் என்று எண்ணி அதனைப் புதைத்து வைத்து இன்பம் அனுபவித்து வரும் உலோபி உலகநாதர் வாழ்க்கைப் புயலில் எற்றுண்டுங் கூட அத்தள்ளாடும் வயதிலும் தமது மக்களின் காதலுக்கு இடையூருக நிற்கின்ருர். ஈற்றில் அல்லியை அவருடைய மகன் மணிவண்ணனும், மகள் நந்தினியை அவருடைய சேவகனுகப் பணியாற்றிய உதயணனும் மணஞ்செய்து கொள்ளுகின்றனர். நடிகர்கள் கூடுமானவரை தங்கள் பாகங்களைச் சிறப்பாக நடிக்க முயன்றுள்ளனர். செல்வர்கள் தெட்சணமூர்த்தி, செல்வரத்தினம், சந்திரராசா, நடராசா இராசதுரை, இரகுநாதன், கீதபொங்கலன், நரேந்திரநாதன், கணேஷ், செல்வராசா, ஸ்ரீஸ்கந்தராசா, தயானந்தா, ஆகியோர் முறையே உலகநாதர், மணிவண்ணன், உதயணன், இரத்தினம், முத்து, அப்துல், திருமலை, திருப்பதி, விசாரணை உத்தியோகஸ்தர், சதாசுகர், நந்தினி, அல்லி ஆகிய பாத்திரங்களை ஏற்று நடித்தனர்.

ஆங்கில நாடகத்தைப் பார்த்து அனுபவித்த பின்னர் தமிழ் நாடகம் அவ்வளவாக சோபிக்கவில்லை. எனினும் பொழுதுபோக்குக்கு ஏற்ற ஒரு நாடகமாக அமைந்திருந்தது.

இந்நாடகங்கள் சிறப்புற அமைவதற்கு உதவியாக இருந்த அனைவருக்கும் கல்லூரி பதில் அதிபர் திரு. ஏ. ஈ. தம்பர் நன்றி கூறினர். இவ்வைபவம் மேயர் திரு. அல்பிரட் துரையப்பாவின் ஆதரவில் நடைபெற்றது.

இலங்கையில் பொருள் விருத்தி: 2

# தொழில் விருத்திக்கான அறிகுறிகள்

## மூலப் பொருள்களைப் பயன்படுத்தும் சொந்தத் தொழிற்சாலைகள் வேண்டும்

## பனை, தென்னை தரும் நன்மை

— கு. க. சே. —

யப்பானிய முறைப் பயிர்ச்செய்கையை அரசாங்கம் இங்கு வரவேற்று ஊக்குவிக்கின்றது. இலங்கையிலே அரிசியைத்தவிரசோளம்முதலியவற்றையும் பயிரிட ஏற்ற சுவாத்தியம் உண்டு என்பதையறிந்து, அரசாங்கம் ஆவன செய்தல் மூலம் சிறு தானியச் செய்கையை ஊக்குவிக்கலாம். யாழ்ப்பாணக் கமக்காரன், எள்ளு, பயறு, வரகு, சாமை போன்றனவற்றைச் சிறுபோகப் பயிர்களாகப் பயிரிடுகின்றான். மாற்றுப் பயிர்ச்செய்கை, நிலத்துக்குச் சிறிது ஓய்வு அளிப்பதுடன் அதன் பசளை வீணுகாமலும் தடுக்கின்றது.

கடலாற் சூழப்பட்ட நமது இலங்கைத் தீவு தனக்குத் தேவையான மீனைப் பிறநாடுகளினின்றும் பெறுதல் விரும்பத்தக்கதல்ல. இலங்கைக்குத் தேவையான மீனின் ஒரு சிறு பகுதிதான் இலங்கையிற் பெறப்படுகின்றது. இதற்காக இலங்கையின் கடற்கரைகளில் மீனில்லை என்று கூறி விடமுடியாது. இப்போது கையாளப்படும் பழைய முறைகள் காலம் கடந்தவை. நவீன முறைகள் கையாளப்படவேண்டும். கரைகளில் மாத்திரமன்றி கடலின் மத்தியிலும் சென்று மீன்பிடிப்பதற்கு ஆவனசெய்யவேண்டும். அத்துடன் பிடித்த மீனை நாட்டின் பலபாகங்கட்குமனுப்பத்தக்க ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும். "டின்"களிலடைத்தல் கருவாடாக்கல் என்பன ஊக்குவிக்கப்பட வேண்டும். இன்று இவை மிகச்சிறிய அளவிலேயே செய்யப்படுகின்றன. இன்னும் இடமிருப்பதனல் இதை விரிவாகச் செய்ய ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.

### பனை, தென்னை

அதிக வருமானம் அளிக்கக்கூடிய உப்புச் செய்கை இன்று குறிப்பிடத்தக்க அளவு விருத்தியடைந்துள்ளது. உணவுக்கு மாத்திரமன்றி "கோஸ்டிக் சோடா", செயற்கை உரம் என்பனவும், மக்களுக்கு இன்றியமையாத பிறவும் செய்ய, உப்பு உபயோகப்படுதலால் உப்பின் மதிப்பு விளங்கும். மேலும் இன்று உப்புத் தொழில் அரசாங்கத்தின் ஏகபோக உரிமையாக இருப்பதும் கவனிக்கத் தக்கதே.

யாழ்ப்பாணத்தவன் பனை மரம், தென்னை மரம் இவற்றினுல் பல நன்மைகள் பெறுகின்ருனெனில் அது மிகையாகாது. பனையினின்று சர்க்கரை, பதநீர், வெல்லம் என்பன பெறவும், தென்னையினின்று மதுபானம் தயார் செய்யவும் வழிகளுண்டு. சிங்கள நாட்டிற் காணப்படும் "கித்துளு"ம் கருப்பட்டி உண்டாக்க உதவுகின்றது. இலங்கையின் வடமத்திய கீழ் மாகாணங்களிற் கரும்புச் செய்கை பண்ணமுடியுமாதலினல், இலங்கையின் பெருந் தேவைகளிலொன்ருகிய சீனித் தேவையைப் பூர்த்தி செய்ய முடியும்.

கால்நடை வளர்ப்பு, கோழிப் பண்ணை என்பன இலங்கையின் செல்வ விருத்தியைக் காட்டுவதுடன் மக்களின் சுகாதார விருத்திக்கும் ஆவன செய்யுமாதலினல், அவை ஊக்குவிக்கப்படல் வேண்டும்.

இதுவரை இலங்கையிலே உணவுச் செய்கையின் அபிவிருத்திக்கான வழிவகைகளைக் கண்டோம். இனிப்பொருள்வள அபிவிருத்தியின் மற்ருெரு பகுதியான கைத்தொழில் அபிவிருத்திக்காக என்ன செய்யலாம் என நோக்குவோம்.

### ரப்பரின் பயன்

ஆங்கிலேயர் வருகை எமக்குத் தந்த பலன்களில், ரப்பரை இலங்கையில் உண்டாக்கியதும் ஒன்ருகும். நாம் ரப்பரை இங்கு பெற்று, அதன் பாலைப் பதப்படுத்தி, அதை வேறு நாடுகட்கு அனுப்புகின்ருேம். அங்கிருந்து பல பொருள்களை நாம் பெறுகின்ருேம். உதாரணமாக 'டயர்' போன்றனவற்றை நாம் இங்கிலாந்து போன்ற நாடுகளினின்றும் பெறுகின்ருேம். இதற்காக எமது ரப்பரை நாம் 3000 மைல் தூரத்துக்கு அப்பால் அனுப்புகின்ருேம். செய்யப்பட்ட பொருளாகிய ரப்பரின் விலை ஏற்றுமதி, இறக்குமதித் தீர்வைகளாலும், மற்றும் செய்கூலி என்பனவற்ருலும் அதிகரிக்கின்றது. எனவே எமக்கென டயர்த் தொழிற்சாலையொன்றை நாம் ஏற்படுத்திக் கொண்டால் வீண்பண விரயத்தை நாம் தடுக்கலாமல்லவா?

தென்னம் பிரயோசனங்களிலொன்ருகிய தும்பைக் கொண்டு நாம் பல பொருள்களைச் செய்யலாம். எமது தும்பைப் பல இடங்கட்கனுப்புகின்ருேமே ஒழிய, நாமாகச் சில பொருள்களைச் செய்வதில்லை. துடைப்பம் முதல் பல பொருள்களை நாம் செய்ய முடியுமானுல், எமது தும்பை வெளிநாடுகட்கு விற்பது ஏற்றதல்ல; பிரயோசனமுடைத்து மன்று. எனவே, இதைச் செய்ய நாம் முயல்வது நன்மை பயக்கும். அத்துடன் எமது பொருளாதாரத்தை உயர் நிலைக்குக் கொண்டுவர, நாம் பணி புரிவோம்.

### பருத்திச் செய்கை

எமது நாட்டிலேயே பருத்தி விளைவிக்க முடியும். பட்டுப் பூச்சிகளையும் வளர்க்க முடியுமெனப் பலர் அபிப்பிராயப் படுகின்ருர்கள். எமது முக்கிய உடையாகிய பருத்தியையும் பட்டையும் நாம் இங்கேயே பெற முடியுமாயின், நாமாகவே எமது உடைகளுக்கான புடைவையைத் தயாரிக்கலாம். பருத்திச் செடியும், பட்டுப்பருத்திக்கான முசுட்டைச் செடியும் இங்கு பெறக்கூடியவை. பருத்தி உஷ்ணப் பிரதேசங்களிலும், பட்டுப்பூச்சி தும்பருப் பள்ளத்தாக்கிலும் வளரக்கூடிய அறிகுறிகள் உண்டு. எனவே மூலப் பொருள்கள் உண்டு. ஆலைகள்தான் வேண்டும். இன்று வெள்ளவத்தையில் மாத்திரம் ஒரு நெசவாலை உண்டு. மேலும் ஆலைகள் நிறுவப்படவேண்டும். இதனல் வெளிநாடுகட்கு, உடைக்காகச் செல்லும் பொருள் சேமிக்கப்படுமல்லவா?

### பீங்கான் வகை

எமது நாட்டில் பீங்கான், சட்டிபானை என்பன செய்வதற்கேற்ற களி இருக்கிறது. இவை எமது நாட்டில் பிரதான தேவைகளாக இருந்து வருகின்றன. இவற்றை அபிவிருத்தி செய்து, தொழிற்சாலைத் தொழில்களாக மாற்றலாம். அறிவு மறுமலர்ச்சி கடதாசித் தேவையை அதிகமாக்கியிருப்பதனல், வாளைச்சேனையிலுள்ள கடதாசித் தொழிற்சாலை எமது கடதாசித் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாததாக இருக்கிறது. அயல்நாடுகளினின்றும் கடதாசி இறக்குமதியாவதைத் தடுப்பதற்கு இங்கு போதியளவு கடதாசியை உற்பத்தி செய்ய வேண்டும். அதன் தரத்தையும் உயர்த்தவேண்டும்.

தோரியம் இலங்கைக்குச் செல்வங்களைக் கொண்டுவரத்தக்க ஒரு தாது. இது போர்க்காலத்தில் பெரு மதிப்பைப் பெற்றிருந்ததனல், இலங்கைக்கு அதிக வருவாயைத் தேடித் தந்தது. தோரியம் போன்றவையும் திருக்கோணமலையிற் காணப்படும் இலனைமைட்டும் இலங்கைக்கு அதிக வருவாயைக் கொண்டுவரத்தக்கன. இரும்புத் தாதும் சிறிய அளவிலுண்டு. மேலும் மணிகளும் வருமானந் தரத்தக்கன.

குடிசைக் கைத்தொழில் இலங்கையிலேபன்னெடுங்காலமாக உள்ளது. பெட்டி, பாய், கடகம் முதலியன செய்தலும், பானை சட்டி வனைதலும், நூல் நூற்றலும் குடிசைக் கைத்தொழிலுள் அடங்கும். இப்போது யந்திரங்களின் வருகையினுல் குடிசைக் கைத்தொழில் அருகி வருகிறது. ஆனல் இதை மீண்டும் புத்துயிர்பெறச் செய்வது எமது கடமை.

### தொழிலாளர் தேவை

தொழில் அபிவிருத்திக்கு, முதலும், சக்தியும், மூலப் பொருள்களும் இருந்தால் மட்டும் போதா. அவற்றைப் பயன்படுத்தக்கூடிய தொழிலாளரும் தேவை. தொழிலாளரின் திறமையின் முழுப் பிரயோசனத்தையும் நாம் பெற, அவர்களின் தேவைகளையும் பூர்த்திசெய்ய வேண்டும்.

அரசாங்கம் தொழில்களை யேற்ருல், தொழிலாளரின் திறமை குன்றும். அவர்கள் சம்பளத்துக்கு வேலை செய்வார்களே ஒழியத் தமது திறமையைக் காட்டமாட்டாரென ஒரு சாராரும், அரசாங்கம் தொழில்களைக் கையேற்ருல் தொழில்கள் திறமையாக நடைபெறுமென வேருர் சாராரும் கூறுவர். இப்போது அரசாங்கம் கையேற்ற தொழில்களின் தோல்விக்குத் தொழிலாளரின் பராமுகமே காரணம் என முன்னையவர்கள் கூற, பின்னையவர்கள் அது பழைய நிர்வாகத்தின் பிழையேயென்று கூறுவார்கள்.

### விருத்திக்கான அறிகுறிகள்

அரசாங்கம் தொழில்களை யேற்று நடாத்தினுல், நிபுணர்களை வெளிநாட்டினின்றும் பெறவும், எமது மாணவர்களை வெளிநாடுகட்கனுப்பிப் பயிற்றுவிக்கவும், இலகுவாகும். 'லைசென்ஸ்' பெறவும் வருமான வரி செலுத்தவும் வேண்டியதில்லை. இப்போது மேற்கூறப்பட்ட வரிகளே அரசாங்க வருமானத்தின் பெரும் பங்காக

( 6 ஆம் பக்கம் பார்க்க)

# சிங்களவருக்கும் தமிழருக்கும் பொருளாதாரப் பிரச்சினை பொதுவானது

## உழைப்பின் மூலமே நாடு விருத்தியுறும்

## மாணவர் விழாவில் திரு. தேவராஜன் தெரிவித்த கருத்து

கல்லூரிப் பரிசளிப்பு விழாக்களிலும், மாணவர் சங்கங்களின் வருடாந்த விருந்து வைபவங்களிலும் இந்நாட்களில் விரிவுரைகள் ஆற்றும் பிரமுகர்கள், மாணவரின் எதிர்காலத்தைப் பற்றிப் பேசும் போதெல்லாம் நாட்டின் பொருளாதாரச் சீர்கேடுகளைப் பற்றிக் குறிப்பிடத் தவறுவதேயில்லை. சமீபத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற உயர்தர மாணவர் சங்க ஆண்டுவிழாவிற் பங்குபற்றிய அரசாங்க விற்பனைப் பகுதி அதிகாரி திரு. பி. ஆர். தேவராஜன் பேசும் போதும் நாட்டின் பொருளாதாரச்சிக்கலைப்பற்றிக் குறிப்பிட்டிருந்தார். அவர் கூறியதாவது:

"அரசியல் பிரச்சினை ஒருவாறு நீங்கினுலும் பொருளாதாரப் பிரச்சினை இப்போதைக்கு நீங்கப் போவதில்லை. இது சிங்களவருக்கும் தமிழருக்கும் பொதுவான பிரச்சினையாகும். கல்வி கற்றவர்கள் யாவரும் காரியாலயங்களில் உயர்தர உத்தியோகங்களையே நாடிச் செல்கின்றனர். இன்றைய நிலையில், காரியாலயங்களில் உயர்தர உத்தியோகங்களுக்கு இடமில்லை."

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பழைய மாணவனுகிய திரு. தேவராஜன் இவ்விழாவிற்குப்பிரதான விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார். கல்லூரி அதிபர் திரு. க. முத்துவேற்பிள்ளை விருந்தினரை வரவேற்ருர். மாணவன் திரு. ரி. ஜெயக்குமார் தலைமை வகித்தார். திரு. தேவராஜன் தொடர்ந்து பேசியதாவது:

"தந்தையின் உத்தியோகத்தை மகன்தொடர்ந்துபார்த்தகாலம் போய்விட்டது. வருங்காலத்தில் கடும் உழைப்பினுலேயே சீவியம் நடாத்தும் நிலைக்கு வந்து விட்டோம். எங்கள் காரியாலயத்தில் உள்ள புள்ளி விபரங்களிலிருந்து 10 கறுத்தக் கொழும்பான் மாமரங்கள் வைத்திருப்பவனின் ஊதியம் ஒரு குமாஸ்தா வேலை செய்பவரின் ஊதியத்திற்குச் சமமென்றும், அரை ஏக்கர் நிலத்தில் தக்காளிவகை செய்ய வல்லமை உடையவன் எஸ். எஸ். ஸி. சித்தியடைந்தமைக்குச் சரி என்றும் கண்டுள்ளோம். இவ்விரண்டு பயிர்களும் யாழ்ப்பாணத்தில் நன்ருக வளரும் என்பது யாவரும் அறிந்ததே. எனவே, நீங்கள் அனைவரும் இவைபோன்ற பயிர்ச்செய்கையிலும் தச்சு வேலை போன்ற கைத்தொழிலிலும் அதிகமாக ஈடுபட வேண்டும்.

யாழ்ப்பாண மின்சார எஞ்சினியர் திரு. எம். கார்த்திகேயன் பேசியதாவது:

இன்றைய இளைஞர்கள் நமது மூதாதையர் போன்று கடுமையான வேலைகளைச் செய்யத் தயங்குகின்றனர். சோம்பேறிகளாக நாம் இனி இருக்க முடியாது. காணி அபிவிருத்தித் திட்டங்களில் நிலம் பெற்று விவசாயத்தில் ஈடுபட வேண்டும். அப்போதுதான் நமது பொருளாதாரம் வளமுற்று நாடு சிறப்படையும் எனத் துணிந்து கூறுவேன்.

டாக்டர் வேலும்மயிலும் பேசிய பின்னர் மாணவர்களின் கதம்ப நிகழ்ச்சி நடைபெற்றது.

'ஹென்றலி'
உடை அலங்காரத்தின்
உன்னத அடையாளமாகும்

ஹென்றலி

★ சேட்
★ காற்சட்டை
★ ஷோட்ஸ்

ஹென்றலி சேட், காற்சட்டை, ஷோட்ஸ் ஆகியவற்றை அணியும் ஆடவரும், இளைஞரும் சௌகரியத்தை அனுபவிப்பதுடன் வசீகரமான தோற்றத்தையும் பெற்று அழகுடன் விளங்குகின்றனர்.

ஹென்றலி உடைவகையில் நீங்கள் எதைத் தெரிந்தெடுத்து வாங்கினுலும், அது கொடுத்த பணத்திற்கு நிறைந்த பெறுமதியாகும்.

ஹென்றலி (காமெண்ட்ஸ்) லிமிடெட்,
பழைய விமான நிலைய வீதி,
(Old Air Port Road)
இரத்மலானை.

# அன்புக்கரம் தாரீர்!

'மயில்வாகனன்'

என்னை உங்களுக்குத்தெரிய வேண்டிய அவசியமில்லை. அப்படித்தான் ஒரு வேளை தெரிந்திருந்தாலும், நீங்கள் பின்னும் அந்த அறிமுகத்தை நினைவுகூர விரும்பமாட்டீர்கள். ஆனல், உங்கள் எல்லோரையும் எனக்குத் தெரியும். எப்படி என்று என்னைக் கேட்டால் எனக்குச் சிரிப்புத்தான் வரும். அத்துடன் கேட்பவர் என் கண்ணில் அறிவிலிகளாகவே தோன்றுவர். நீங்கள் கேட்க வேண்டாம். நீங்களே என்னிடம் என்ருே ஒருநாள் வந்து அகப்பட்டுக் கொள்வீர்கள்.

எனக்கு வீடில்லை; வாசலில்லை. குடும்பம் இல்லை; மனதில் குழப்பமுமில்லை. தன்னந்தனியவன் நான். எல்லோரும் என் இனத்தவர். எல்லோரும் என் அகத்தவர். எனக்கு எல்லோரிடமும் அன்பு உண்டு. ஆனல், உங்களிற் பலருக்கு என்னிடம் அன்பு இல்லை. சில நேரங்களில் கண்டும் காணுத மாதிரிப்போய் விடுகிறீர்கள். தெரிந்தும் தெரியாதமாதிரி முகத்தை மறுபக்கம் திருப்பி எனக்கு அன்புசெலுத்தமறுத்து விடுகிறீர்கள்.

என் அருகால் நீங்கள் எல்லோரும் ஒரு நாள் இல்லாவிட்டாலும் இன்னெரு நாள் சென்று தான் இருப்பீர்கள். துள்ளியோடும் குழந்தை, தன் நண்பருடன் ஓடிச் சென்றிருக்கும். காதலர்கள் இரகசியமாக அன்பு வார்த்தைகளை ஒருவருக்கொருவர் பேசியபடியே என்னைத்தாண்டிப் போயிருக்கிருர்கள். வயது சென்றவர், வாலிபர், அழகு நங்கையர், அறிவு மிகுந்த ஞானிகள், சிந்தனைச் செல்வர், கவிதை பாடும் கவிஞர் எல்லோரும் என் பக்கலில் ஊசலாடியிருக்கின்றனர். இவர்களில் பலர் என்னைப்பார்த்திருக்கின்றனர். சிலர் என்னிடம் அன்புடன் பேசியுமிருக்கின்றனர்.

'இவர்களெல்லாரையும் தனித்தனியாக, இன்னர், இன்னர் என உனக்குத் தெரியுமா?' என்று தானே கேட்கிறீர்கள்? அதெப்படி எனக்குத் தெரியவரும்? தனித்தனியாக எனக்கு அவர்களைத் தெரிந்து கொள்வதற்குச் சந்தர்ப்பமுமில்லை. அவசியமுமில்லை. 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்று ஒரு முதுமொழி உண்டு. அதன்படியே, முகத்தளவில் அவர்களைப் பார்த்து அவர்களுடைய அகத்தளவை அறிந்து கொள்பவன் நான். ஆனலும், எனக்கு அவர்களுடைய முகத்திலும் பார்க்க அவசியம் வேண்டியது அவர்களுடைய கை தான். அது தான் எனக்கு மிகவும் பிரியமானது. அதுவும் சும்மாவா? உங்களுக்கு எப்படி உங்கள் தொழிலில் விருப்பம் உண்டோ, அவ்வளவு விருப்பமும் அக்கறையும் எனக்கு, அவர்கள் கரங்களில். ஆனல், அக் கரங்கள் அழகான, நீண்ட, நெளிந்த கரங்களாக இருந்தாலும் சரி, அழகற்ற, கட்டை, மொட்டைக் கரங்களானலும் சரி, அவைகள் எல்லாமே என் அகத்தில் அழியாத இடம் பெறும் பொருள்கள். சுருக்கமாகக் கூறப் போனல், அவை எனக்கு வாழ்வளிக்கும் தெய்வங்கள். என் ஜீவநாடி. என் உயிரைப் பேணி வளர்க்க உதவும் அன்புக் கரங்கள்.

'இவ்வளவு மனிதர்களையும் தெரிந்த இப் பெரிய மனிதன் யார்? என்று கேட்கிறீர்களா? சரி. இனியும் நான் உண்மையை மறைக்கக் கூடாது. ஆனல், ஒன்று மாத்திரம் முதலிலேயே கூறிவிடுகிறேன். என்னை யாரென்று நீங்கள் அறிந்ததும், எனக்குத் தெரிந்தவர்களிற் சிலர் போல உங்கள் முகத்தை மறுபக்கம் திருப்ப மாட்டீர்களே? தயவு செய்து அப்படிச் செய்யர்தீர்கள். அப்படிச் செய்தால் என் உள்ளம் நோகும். என் வாழ்வு சிதைந்து விடும். உங்கள் அன்பை நாடி நிற்கும் என்னைக் கைவிட்டு விடாதீர்கள். இதோ, சொல்லப் போகின்றேன். உங்களிடம் இருக்கும் அன்புச் சக்தியையெல்லாம் திரட்டி வைத்துக் கொண்டு, கருணை உள்ளத்துடன் என்னைப் பற்றிய உண்மையைக் கேளுங்கள். நான் வேறுயாருமல்ல, ஒரு பிச்சைக்காரன்!


## உங்கள் எதிர்கால வாழ்க்கை சலனமற்றதாகக் காட்சியளிக்க வேண்டுமா ?

அப்படியானல் அந்தப் பொறுப்பை எங்களிடம் ஒப்படையுங்கள்.

உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக விசேஷ சேமிப்புத் திட்டங்கள் ஏற்படுத்தியுள்ளோம்.

★ ஆயுள் மோட்டார் இன்சூரன்ஸ்
★ விவாக அந்தியகால சேமலாப நிதிகள் – விசேஷ கடன் வசதிகள்
★ கூட்டமைப்பு (Group Schemes)
★ விபத்து
★ மாதத்தவணைக் கட்டணங்கள் (Monthly recurring Deposits)

இவை போன்று இன்னும் பல விசேஷ அம்சங்கள் ஏற்படுத்தியுள்ளோம்.

முழு விபரங்கட்கு:

**இன்ரநாஷனல் இன்சூரன்ஸ் கம்பனி லிமிட்டெட்**

280, இரண்டாம் மாடி, பெரியகடை. போன்: 526.

இராசா பில்டிங் யாழ்ப்பாணம். தந்தி: "இனிக்கோ"


## செம்மையான வழியில் கல்விப் போதனை

ஒரு பாடசாலை தகுந்த அமைப்பு முறையின் கீழ் இல்லாது சொந்த வாழ்க்கை முறையைக் கடைப்பிடிக்க வேண்டுமானல் அதன் நலன்களைக் கவனிப்பதற்கான ஒரு தனிச் சபை இருந்தேயாக வேண்டும். நாட்டிலே குற்றங்கள் மலிந்து வரும் இந்நாட்களில் மாணவர்களுக்குச் செம்மையான வழியிலே போதனை அளிப்பது பள்ளிக்கூடங்களின் கடமையாகும். இதனை நாம் சரியான முறையில் ஆரம்பிக்கத் தவறுவோமாயின் இது வரை இருந்துவந்த பாடசாலை ஒழுங்கும் சீர் குலைந்துவிடும். இவ்வாறு இளவாலை சென். ஹென்றி கல்லூரிப் பரிசளிப்பு விழாவின்போது அதிபர் வண. பிதா எல். ஏ. சிங்கராயர் தமது அறிக்கையிற் குறிப்பிட்டிருந்தார்.

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி திரு. பி. ஸ்ரீஸ்கந்தராசா தலைமைவகித்தார். திருமதி ஸ்ரீஸ்கந்தராசா பரிசில்களை வழங்கினர்.

# பாதுகாப்பு விவகாரம்

க. கணேசலிங்கம்

சில திருமணங்களில் மணமகனுக்கு மணமகள் மணவறையில் அமர்ந்தவாறே பாலும் பழமும் ஊட்டுவாள். இவ் வைபவத்தை மற்றவர் பார்க்கக் கூடாதென்பதற்காகத் திரையிடுவார்கள். ஆனல் பொதுவாக எல்லோருமே இந்த நிகழ்ச்சியை நன்ருகப் பார்த்து விடுவார்கள். இப்பொழுது இந்த வழக்கம் அருகி வருகிறது. எனினும் இதனை ஒரு வழக்கத்திற்காகச் செய்வதே அன்றி மறைக்க வேண்டும் என்ற எண்ணத்தினலல்ல என்பது முற்றிலும் உண்மையே.

இம்மாதிரியே இலங்கையிலும் சில தடைகள் சட்டம் மூலம் இருக்கும். ஆனல் நடைமுறையில் அவற்றை அரசாங்கமே கவனிப்பதில்லை. தாங்களே கடைப்பிடிக்கக் கஷ்டப்படும் பொழுது மக்கள் என்ன செய்வது என்ற விரிந்த மனப்பான்மை காரணமாக மக்கள் இச் சட்டங்களைப் பேணி நடக்கின்ருர்களா என்று பார்ப்பதில் அதிக கவன மெடுப்பதில்லை. மேலும் இங்கு உண்டாக்கும் சட்டங்கள் சரியா, தவரு, என்பதைப்பற்றிச் சிறிதேனும் யோசியாமல் ஏற்படுத்தப்படுவனவே.

'இது தடை செய்யப்பட்டது' என்று விளம்பரப்படுத்துவார்கள். ஆனல் நடைமுறையில் தடை செய்யப்பட்டும் காரியம் நடை பெற்றுக்கொண்டேயிருக்கும். சினிமாவிலிருந்து சிகரட் பிடிப்பது வரை இப்படித் தடை மீறியே நம் நாட்டில் நடை பெறுகின்றன.

இதில் விசித்திரமென்னவெனில் ஒரு மந்திரி தடை செய்ய வேண்டுமென்பதை மற்ற மந்திரி உடைத்தெறிய வேண்டுமென்பார். இதற்காகச் சட்டம் ஏற்படுத்தும் பொழுது அதை ஏமாற்றக் கூடிய சட்டத்தைச் சமைக்கக் கூடிய வகையில்தான் இங்கு சட்டம் அமைக்கின்ருர்கள்.

நமது மந்திரிமார் முன் போல் இப்பொழுது ஊர் சுற்றித் திரிவதில்லை, ஆகவே அவர்கள் உல்லாசமாக நேரத்தைப் போக்குவதற்காகச் சினிமாவுக்குப் போகின்ருர்கள். அங்கு படம் பார்த்து விட்டு இதைச் சட்டத்தின் மூலம் தடைசெய்ய வேண்டும் என்று கூறுவதுடன், தாம் முன் பார்த்த படத்தின் மீதுள்ள தடையை நீக்கவேண்டும் என்றும் வாதாடுவார்கள்.

இப்பொழுதெல்லாம் பாராளுமன்றத்தில் மக்கள் கூட்டம் குறைந்து வருகிறதாம். ஆகவே மந்திரிகள் தமது விவாதங்களைச் சினிமாக் கொட்டகைகளில் வைத்தாலென்ன என்று எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. அங்கு சினிமாப்பார்க்க மக்கள் வருவார்களல்லவா? மேலும் அவ்விவாதம் பகல் காட்சி வேளையில் இருப்பது நல்லது. ஏனெனில் மந்திரிமார் நிறுத்துக் கொட்டாமல் இருக்கலாம் அல்லவா?

பெண்கள் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளக் கூடாது என்று ஒரு சட்டம் ஏற்படுத்த வேண்டும் என்று ஒரு மந்திரியார் முன் கூறிவந்தார். இப்பொழுது அவரே இவ் விளையாட்டு வைபவங்களில் கலந்து கொள்ளவேண்டி நேரிடுவதால் அந்தச் சட்டத்தைப் பற்றி இப்பொழுது ஒன்றும் கூறுவதில்லை. பிறர் தயவால் தாம் அளித்துவரும் மத்தியான போசனம் (பணிஸ்) சமிபாட்டிற் போவதற்கு இப்படி விளையாட்டுகளில் ஈடுபடவேண்டு மென்பதை அவர் அறிவார்.

குடியும் சூதும் லஞ்சமும் வளர்ந்து வருவதை அறியாத கலாசார மந்திரியார் கலுகலை நமது கலாச்சாரத்தைக் காப்பாற்ற அவதிப்படுகின்ருர். நாட்டின் கலாச்சாரத்திற்குப் புறம்பான செயல்களைச் செய்யும் கிளப்புகளின் பெயரை மாற்றினல் ஒரு வேளை சரியாகமாறி விடுமோஎன அவர் யோசிக்கிருர். நல்ல பாம்பென்றழைப்பதால் பாம்பு விஷமில்லாமலா இருக்கிறது?

நமது நாகரிகம், கலை கலாசாரம் இன்னும் இங்கு பாதுகாக்கப்படுகிறது என்பதற்கு வேடர் நிலையிலுள்ள பலர் உதாரணமாக விளங்குகின்ருர்களே. வெளி நாட்டார் இங்கு வந்து இவர்களிடம் வில்வித்தையைக்கற்றுப் போக வேண்டும்!

## கூட்டுறவு இயக்கம் உலகத் தீமைகளை அகற்றவல்லது

சர்வதேச கூட்டுறவாளர் தினத்தையொட்டி அண்மையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற விழா சிறப்பாக அமைந்திருந்தது. கூட்டுறவுவிருத்தி இயக்கத்தின் உதவி அதிகாரி திரு. வி. கனகசபை பேசும்போது உலகத்திலுள்ள எல்லாத் தீமைகளையும் கூட்டுறவு இயக்கத்தின்மூலம் அகற்ற முடியுமெனக் கூறினர். 'மற்ற எந்த இயக்கத்திலும் பார்க்கக் கூட்டுறவு இயக்கத்திலேயே உண்மையும், நேர்மையும் அவசியமான தேவைகளாகின்றன. கூட்டுறவுச் சங்கங்கள், மற்றைய வர்த்தக, வியாபார சங்கங்களைப் போலல்லாமல், ஒரு சுயவிருப்பச் சங்கமாகும். ஆதலால், கூட்டுறவு இயக்கத்தின் வெற்றி அதனுடைய அங்கத்தவரின் ஆதரவிலும், ஆர்வத்திலுமே தங்கியுள்ளது. இவ்வாறு திரு. கனகசபை தமது பேச்சிற் குறிப்பிட்டார். இக் கூட்டத்திற்குத் தலைமைவகித்த யாழ்ப்பாணம் அரசாங்க உதவி அதிபரான திரு. ஏ. தெட்சணமூர்த்தி சர்வதேச கூட்டுறவாளர் தினத்தின் மாண்புபற்றி விளக்கினர். அத்துடன் கூட்டுறவுச்சங்கங்கள் கூட்டுறவு இயக்கத்தின் நோக்கங்களுக்கிணங்கக் கடமையாற்றுவது மிக அவசியமானதெனவும் அவர் வேண்டிக்கொண்டார்.

## சாவகச்சேரியில் இளம் விவசாயிகள் சங்கம்

நுணுவில் மேற்கு இளம் விவசாயிகள் சங்கத்தின் முதலாவது கூட்டத்தில் பின்வருவோர் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டனர்: போஷகர்கள்: திருவாளர்கள் வி.என்.நவரத்தினம், கே. கந்தையா, கே. பரமநாதர், எஸ்.ஏ. முத்தையா, எஸ். தம்பிப்பிள்ளை. தலைவர்: திரு. வி. கதிர்காமநாதன். உபதலைவர்: திரு. பி. படைவீரசிங்கம். காரியதரிசி: திரு. எஸ். நடேசபிள்ளை. உதவிக் காரியதரிசி: திரு. கே. பாலசிங்கம். பொருளாளர்: திரு. ஆர். குமாரசுவாமி.

## நூறுண்டு வாழ்க்கை!

மன்னரில் சென்ற சனிக்கிழமையன்று திருமதி மேரியா லூயிஸா கந்தையா என்பவர் காலமானர். அவருடைய வயது 110.

கிறித்தவத் திருமணம்: 4

# இல்லற வாழ்வின் சிக்கலை நீக்க அன்பு கலந்த பொறுமை அவசியம்

— பேராசிரியர் மு. சு. அருள்சாமி —

[தமிழ்த் துறைத் தலைவர், இலோயலாக் கல்லூரி, சென்னை]

பெண்களது நேரத்தின் பெரும்பகுதி பின்னல், பூச்சூடல், பூசுதல், உடுத்துதல் முதலான ஒப்பனைகள் செய்வதிலேயே கழிகின்றது. புற ஒப்பனைக்குச் செலவிடும் நேரத்தில் பத்தில் ஒருஅளவுகூட அகத்தை அழகுபடுத்துவதற்குச் செலவழிக்கமாட்டார்கள். பெண்களுக்குநாம் அளிக்கும்பாராட்டெல்லாம் பொன்னணி, பட்டுடை, சுண்ணம், சாயம் முதலியவைகளுக்குத் தரும் பாராட்டாகவே முடிகிறது. பெண்கள் புற ஒப்பனையினைவிட அக ஒப்பனை மீதே அதிக அக்கறை செலுத்தவேண்டுமென்பதாகத் திருநூலிற் காணப்படுகிறது. "சடை பின்னுதல், பொன்னுபரணங்களை அணிதல், உயர்ந்த ஆடைகளை உடுத்தல் ஆகிய வெளி ஒப்பனை உங்களுக்கு ஒப்பனையாயிருத்தலாகாது சாந்தமும் அமைதலுமாகிய ஆவியாகிய அழியாத ஒப்பனையை உங்கள் இருதயத்தில் உள்ள அந்தரங்க ஆன்மா தரித்திருக்கக்கடவது. அதுவே கடவுள் பார்வையில் விலையுயர்ந்தது. 1ஆம் புனி. இராயப்பர் 3: 3–4" வீட்டில் மனைவிக்கு வெளிமயக்கு வேண்டும்; இல்லையேல் வெளியே செல்லும் கணவன் வழிதவறிக் கெட்டுப் போக நேரிடும் என்பார்கள். கலைஞன் கோவலன் கெட்டழிந்த கதையைச் சுட்டுவார்கள். ஆனல் அவர்கள் மறந்துவிட்ட ஒன்றை நினைப்பூட்டுகிறேன். வெளியேறிய கோவலன் மறுபடி வீடுதேடி வரக் காரணமாய் இருந்தது எது என்பதை மறந்துவிட்டோம். கண்ணகியின் கற்பல்லோ கணவனைத் திருந்திய கோவலனுய் வீடு திரும்பச்செய்தது. மதி மயங்கி நெறி நீங்கிய கணவர் அறிவு தெளிந்து கற்புடைய துணைவியரை நோக்கி அச்சத்துடன் ஓடிவரும் கதைகளைப் பண்டைத் தமிழ் இலக்கிய ஏடுகளில் காண்கிறோம். பெண்களின் அக அழகே ஆடவரை அறநெறியில் இயக்குவதற்குப் பெருந் துணையாய் இருக்கிறது என்பதைத் திருநூல் கூறுகிறது. "அப்பொழுது அவர்களில் (கணவர்களில்) யாராவது திரு வசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாய் இருந்தாலும் பயபக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடத்தையை அவர்கள் கண்டு, தங்கள் மனைவிகளின் நடத்தையினுலேயே, பேச்சின்றி ஆதாயப்படுத்திக் கொள்வார்கள். (1 புனி. இராயப்பர் 3: 1–2)" இல் வாழ்வை ஏற்றுக்கொண்ட மகளிர், புற ஒப்பனையினும் அக ஒப்பனையே உயர்ந்ததென்பதைத் தெரிந்து பெண்மை நலங்களெல்லாம் பொருந்தி வாழவேண்டும்.

### வாழ்க்கை ஒப்பந்தம்

திருமணத்தை வாழ்க்கை ஒப்பந்தமென்று கூறுகிறார்கள். வாழ்க்கை ஒப்பந்தம் என்றால் வாழ்க்கை முடியும் வரையில் உறுதியுடன் கைக்கொள்ள வேண்டிய ஒப்பந்தம் என்ற பொருளில் வழங்குவதில்லை. மனம்போல் நடக்கும் வாழ்க்கைக்கு ஏற்ற ஒப்பந்தம் என்பதாகக் கொள்கிறார்கள். வாணிப ஒப்பந்தம் போன்றதாகக் கருதுகிறார்கள். கூட்டு வாணிபம் செய்ய இருவர் கூடி ஒப்பந்தம் செய்கிறார்கள். கூட்டாளி தகுதியற்றவன் என்றெண்ணும்போது விலக்கத் தயங்குவதில்லை. நல்ல கூட்டாளி வர இசைகிறான் என்றால் மகிழ்ந்து வரவேற்பார்கள். மனைவி பலமற்றவளாகிவிட்டால் விலக்குகிறான் கணவன். மயக்கும் பெண் எதிர்ப்பட்டால் மறுநாளே அவளை மணக்கின்றான். இல்வாழ்க்கை இல்லறமாக இல்லை. இல் வாணிபமாக மாறிவருகிறது. இதற்கு இடம் தருகிறது மணமுறிவுச்சட்டம். இதில்தான் உரிமை இருக்கிறது. உண்மை இன்பத்துக்கு வழியும் இருக்கிறது என்பதாக மக்கள் அறியாமையால் பிதற்றுகிறார்கள்.

### மண முறிவு கூடாது

இயேசு பெருமானே மணமுறிவு கூடாது என்கிறார். இறைவனால் இணைக்கப்பட்டவரைப் பிரித்தல்அறமாகாதுஎன்கிறார். மணமுறிவுபெற்று மறுமணம் செய்து வாழும் வாழ்க்கை பரத்தமை வாழ்வு என்று இகழ்கிறார். "கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கக்கடவன்............ஆகையாலும் எவனாகிலும் பரத்தமையினாலேயன்றித் தன் மனைவியைத் தள்ளிவிட்டு வேறொருத்தியை மணம் செய்தால் அவன் பரத்தமை பண்ணுகிறான். புனி. மத்தேயு 19: 3-12" "எவனாகிலும் தன் மனைவியைத் தள்ளிவிட்டு வேறொருத்தியை மணம் செய்தால்அவன் மனைவிக்குத்துரோகியாகிப்பரத்தமை செய்கிறான். மனைவியும் தன் கணவனைத் தள்ளிவிட்டு வேறொருவனை மணம் செய்தால் அவள் பரத்தமை செய்கிறாள் என்றார்...—(புனி. மார்க்கு 10: 11-12)" இல்லற வாழ்க்கையிலே சில சிக்கல்கள் எழுதல் இயல்பு. இணைந்தநாள் போன்று மணமக்களின் வாழ்க்கை எந்நாளும் இருப்பதில்லை. இடையே புயல் மோதும். ஆனல் இருவரும் அன்பு கலந்த பொறுமையை மேற்கொள்ளவேண்டும். தவறான நெறியில் செல்லும் மனைவியைத் திருத்த முயல்வது ஆண்மகன் கடனாகும். வழி தவறிச் செல்லும் மணாளனைத் திருத்தி அவனுடன் வாழ்வது பெண்ணின் கடமையாகும். மணமுறிவு பெறுதற்கு யாருக்கும் உரிமை இல்லை. மறுமண வாழ்வு திருமணவாழ்வாய்க் கருதப்படாது; சிற்றின்ப வாழ்வாக எண்ணப்படும். பொல்லாப் பழியாம் பரத்தமை காரணமாகப் பொருந்தி வாழ இசையாது பிரிந்து உறைந்தாலும் மறுமணம் செய்யும் உரிமை இல்லை.

### வசைமொழி

மனைவி இறந்து விடுகிறாள். எடுத்துச் சென்று அடக்கம் செய்து முடித்த அக்கணமே அவனுக்குப் பெண் பார்க்கிறார்கள். கணவனை இழந்த கைம்பெண் நிலையோ கவலைக்குரியது. ஆரம்பத்தில் அவள் கொண்டு வந்தது அவ்வளவு தான் என்று கூறி ஆறுதல் அடைகிறார்கள். பின்னர் அவளை நோக்கி மெல்ல மெல்லப் பெரிய பெரிய வசைக் கணைகளைச் செலுத்துகிறார்கள். "அறுதலி, முண்டச்சி, எதிர்ப்படும் சனியன், குறுக்கிடும் கோட்டான்," போன்ற பட்டங்களைச் சலிப்பின்றி வழங்குகிறார்கள். கைம்பெண் பற்றித் திருநூல் கூறும் பொருளுரைகள் மக்களால் போற்றற்குரியன. பிள்ளை இருந்தால் அதைப் பேணுவதில் தன் வாழ்நாளைப் போக்கலாம் கைம்பெண். கணவனை நினைத்தும் கடவுளை வேண்டிக் காலமெல்லாம் கைம்பெண் நோன்பு நோற்கலாம். இத்தகைய பெண்டிர் பிறரால் பெரிதும் போற்றற் குரியவர்.

### இன்ப வாழ்வு ஏற்புடையது

கணவன் இறந்தபின் தனி உரிமை எய்துகிறாள். தன் மனம் போல் நல் வாழ்வை வகுத்துக் கொள்ளத் தன்னுரிமை பெறுகிறாள். காமத்தால் வெம்பிக் கெட்டழிந்து போகாமல் கணவனைத் தேர்ந்து மறுமலர்ச்சி பெற்று இன்பவாழ்வு நடத்துதல் ஏற்புடையது. பேரறிஞர் புனி. சின்னப்பா (பால்) கூறிய பொன் மொழிகள் இக் கருத்துக்களைப் பொதிந்துள்ளன. "(மணமில்லாதவர்களுக்கும்) கைம்பெண்களுக்கும் நான் சொல்லுகிறதாவது நான் இருக்கிறது போலவே அவர்களும் இருந்து விட்டால் அவர்களுக்கு நல்லது தான். ஆயினும் விரக்தராயிருக்க முடியாதிருந்தால் அவர்கள் திருமணம் செய்து கொள்ள வேண்டும். காமத்தால் எரிகிறதை விடத் திருமணம் செய்து கொள்ளுகிறது நலம். (1 கொரிந்தியர் 7: 8-9)" "கணவன் உயிரோடிருக்குமளவும் மனைவி கட்டுப் பட்டிருக்கிறாள். கணவன் இறந்து போனாலோ தனக்கு விருப்பமானவனைத் திருமணம் செய்து கொள்ள விடுதலையாகிறாள். ஆயினும் ஆண்டவருக்குள்ளேயே திருமணம் செய்து கொள்ள வேண்டும். எனினும் அவள் அப்படியே இருந்துவிட்டால் அதிகப் (பாக்கியவதி), பேறு பெற்றவள் என்பது என் கருத்து. நானும் கடவுளின் ஆவியை உடையவனென்று எண்ணுகிறேன். 1 கொரிந்தியர் 7:39- 40" கைம்மையால் வெம்பி வாடும் காரிகையருக்கு இக் கருத்துக்கள் அணையாக் கைவிளக்காய் ஒளிர்ந்து உதவுகின்றன.

### செம்மைநெறி

செந்தாமரை சேர் தெண்ணீர்ச் சிறுகுளம் திருமண வாழ்வு வழியே இறங்கி முறையே நீந்தினல் நித்தம் நித்தம் புத்தின்பம் பெறலாம் ஆயினும் பலர் சிறு குளத்துள் பாய்ந்து கலக்கிச் சேருக்கும் எருமை போலாகின்றனர். திருமண வாழ்வைப் பெருந்துன் பச்சேருக்குகின்றனர். திருமண நெறிகளைத் தூற்றுகின்றனர். இறைவனைப் பழிக்கின்றனர். இயேசு பெருமான் அருளிய திருமண நெறிகள் உலகோர் யாவரும் கைக்கொண்டு உயர்வடையத் துணை செய்யும் செம்மையான நெறிகள். இவற்றை மக்கள் கடைப்பிடித்தால் இம்மையில் நல்வாழ்வு பெற்று இன்பம் அடைவதோடு மறுமையிலும் நிலைத்த பேரின்பம் அடைவது உறுதி.

# தொழில் நுட்பக் கல்வி தமிழில் போதிக்கவேண்டும்

## கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் தீர்மானம்

வெள்ளவத்தை சைவ மங்கையர் கழக மண்டபந்தில் 25-7-59 இல் நடைபெற்ற கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் 17 ஆவது ஆண்டுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு.

### தொழில்நுட்பக் கல்லூரி

1. கொழும்புத்தொழில்நுட்பக் கல்லூரியில் போதனை சிங்கள மொழியில் மட்டும் இருக்குமெனில்அத்தொழில்நுட்பக் கல்லூரியைப்போன்றதொரு தொழில் நுட்பக் கல்லூரியை யாழ்ப்பாணத்திலமைத்துத் தமிழ்மொழியிற் கல்வி கற்கும் மாணவர்கள்தொழில்நுட்பக்கல்வியைத் தமிழிலே கற்பதற்கு வாய்ப்பளிக்குமாறு கொழும்புத் தமிழ்ச் சங்கப் பொதுக் கூட்டம் கல்வி அமைச்சரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

### கமத்தொழிற் கல்லூரி

2. மாறகம அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலே சிங்களம் போதனமொழியானவுடன் தமிழ் வாயிலாகக் கற்பித்தற்குப் பலாலியிலே அரசாங்கம் ஓர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியை அமைத்திருப்பது போல், பேராதனையிலுள்ள சிரேட்ட கமத்தொழிற் பாடசாலையில் சிங்களம் போதனமொழியாகிவிட்டமையால் தமிழ் மாணவர்கள் தமிழ் மூலம் கற்பதற்குத் தமிழ்ப் பகுதியில் ஒரு சிரேட்ட கமத்தொழிற் பாடசாலையை உடனே நிறுவ வேண்டும் எனக் கமத்தொழில் நிலப்பகுதி அமைச்சரைக் கொழும்புத் தமிழ்ச் சங்கம் கேட்டுக்கொள்ளுகிறது.

### இலண்டன் தமிழ்ச்சங்கம்

3. இலண்டனிலுள்ள தமிழ்ச் சங்கத்தினர் தம் சங்கத்துக்கு ஒரு மாளிகை கட்ட முயல்வது உலகெலாம் வாழும் தமிழ்மக்களுக்கு மகிழ்ச்சியளிக்குஞ் செயலாயிருப்பதால் இம்முயற்சியிலீடுபட்டுள்ள இலண்டன் தமிழ்ச் சங்கத்துக்குக் கொழும்புத் தமிழ்ச் சங்கம் தன் ஆதரவையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்ளுகின்றது.

### நுண்கலைக் கல்லூரி

கொழும்பிலுள்ள நுண்கலைக் கல்லூரியில் நுண்கலைகள் சிங்களத்தில் மட்டும் போதிக்கப் பட்டுவருவதால், தமிழர்களும் வாய்ப்புப் பெறத் தமிழர் வாழும் (தமிழ்ப் பகுதியில்) பகுதியில் தமிழ் நுண்கலைகளைப் போதிக்கும் கல்லூரியை நிறுவித் தருமாறு கலாசார அமைச்சரைத் தமிழ்ச் சங்கப் பொதுக்கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது.

VENUS
SOAP
வீனஸ் சோப்

தரத்தில் சிறந்தது, உடைகளை வெண்மையாக்குவது,
அதிக நுரையைத் தருவது
வீனஸ் சோப்
வீனஸ் சோப் தொழிற்சாலை
269, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

# சுதந்திர மலாயாவில் தேர்தல் பரபரப்பு

## மக்களைத் திணற வைக்கும் கட்சிக்காரர்: 104 ஸ்தானங்களுக்கு 258 அபேட்சகர் போட்டி

**மலாயாவுக்கும் ஈழ நாட்டிற்கும் உள்ள தொடர்பு இன்று நேற்றல்ல. பாரதத்துக்கும் ஈழத்துக்கும் எத்தனை காலமாகத் தொடர்பு இருந்து வருகிறதோ அதைப் போன்றதெனத் துணிவுடன் கூறலாம்!**

**ஏதோ, சந்தர்ப்பக் கோளாறுகளால், புஜபலம் பெற்றவர்களால், ராஜ்யங்களிலே, கூடு விட்டுக் கூடு பாயும் தன்மை தலைநீட்டியது. அதன் பயனாக, மக்கள் அடிமையை மேற்கொண்டு வாளாவிருந்தனர். எனினும், மக்கள் விழிப்புறும் காலம் வந்தது. சர்வாதிகாரம் சரிந்தது. ஒவ்வொரு நாடும் சுதந்திரம் பெற்றது! விட்டுப்போன தத்தம் பழைய உறவைப் புதுப்பிக்க முற்பட்டது. இன்று, ஒன்று மற்றொரு நாட்டுடன் தன் பந்தத்துவத்தைக் காட்டி, நட்பை வளர்த்து வருகிறது.**

**மலாயாக் கடிதம்**
★
நமது நிருபர்

**கோலாலம்பூர்,**

மலாயா, ஓர் அழகு நாடு; அன்பு நாடு; அறம் நிறைந்த நாடு; வளமான வாழ்க்கைக்கு உகந்த நாடு; விரிவான வர்த்தகத்திற்குக் கேந்திர நாடு; ரப்பரை மடை திறந்து பாய்ச்சும் நாடு; ஈயத்தை, டன் கணக்கில் தோண்டித் தரும் நாடு; இன்பப் பழம் அன்னாசியைத் தரையெல்லாம் விளைய வைக்கும் நாடு; பெருவாரியான நதிகளை காடுமேடெல்லாம் செல்லவைக்கும் நாடு; பச்சைப்பசேலென்ற புல் வெளிகளையும், உயர்ந்த மலைகளையும் பஞ்சமின்றிப் பெற்றிருக்கும் நாடு; உலக நாடுகள் அத்தனையும் அதன தன் பார்வையைப் பௌவ்யமாய்ப் பாய்ச்ச வைக்கும் நாடு; கீழை-மேலை நாடுகளின் அரசியல், பொருளாதார, விஞ்ஞான, கலாச்சார முதல்தர நிபுணர்களை வரவழைத்து கௌரவிக்கும் நாடு; சுருக்கமாகச் சொல்லப்போனால். எல்லாம் நிறைந்த நாடு மலைத் திருநாடு.

### பதினொரு மாகாணங்கள்

இத்தனை வளத்தினைப் பெற்றிருக்கும் மலாயா, அகல விசால நாடல்ல வானளாவ வாய் வீச்சு வீசும் வல்லரசுகளைப் போல. அதன் விஸ்தீரணம் 50,497 சதுர மைல், அவ்வளவுதான். மொத்த மக்கள் தொகை 6, 278, 763. இதில், 3, 126, 706 (மலாய்க்காரர்களும் இந்தோனேஷியர்களும்) மலேஷியர்கள்; 2, 332, 936 சீனர்கள்; 6, 98, 501 இந்தியர்கள்; 123, 136 பேரில் பூர்வக்குடிகள், யூரேஷியர்கள், இலங்கையர் ஆகியோர் அடங்குவர்.

மலாயா, பதினொரு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது: ஜோகூர், பாஹாங், நெகிரி—செம்பிலான், சிலாங்கூர், பேரா, கெடா, பெர்லிஸ், திரங்கானு, கிளந்தான், பினங்கு, மலாக்கா ஆகியவைதாம் அவை.

இந்தப் பதினொரு மாகாணங்களிலும், கடந்த மே, ஜூன் மாத இறுதிவரை மாகாண சட்டசபைத் தேர்தல் நடைபெற்றது. இதில், அம்னோ என்றழைக்கப்படும் ஐக்கிய மலாய் தேசிய ஸ்தாபனம், மலாயா சீனர் சங்கம், மலாயா இந்தியர் காங்கிரஸ் ஆகிய மூன்றும் சேர்ந்தகூட்டணி (ஆளும்கட்சி); மலாயா ரயத் கட்சியும் (ரயத்-பிரஜை); தொழிற் கட்சியும் சேர்ந்த சோஷலிஸ முன்னணிக் கட்சி; அகில மலாயா இஸ்லாமிய கட்சி; மக்கள் முற்போக்குக் கட்சி; நகரா கட்சி; மலாயன் கட்சி ஆகியவற்றுடன் சுயேச்சையாளர்களும் போட்டியிட்டார்கள்.

ஆளும் கட்சியான கூட்டணி, கெடா—பெர்லிஸ், பினங்கு, மலாக்கா, பேரா, பாஹாங், சிலாங்கூர், நெகிரி செம்பிலான் மாகாணங்களில் அபார வெற்றி பெற்று, கிளந்தான், திரங்கானு ஆகிய இரண்டே மாகாணங்களில் அகில மலாயா இஸ்லாமிய கட்சியாற் தோற்கடிக்கப்பட்டு விட்டது.

இந்த இரண்டு மாகாணங்களில் தோல்வி அடைந்ததற்குக் காரணம், மலாய்க்காரர்கள் நிறைந்துள்ளதால், இஸ்லாமிய கட்சியின் வகுப்புவாத பிரச்சாரம்தான் என்று கூட்டணித் தலைவர் துங்கு அப்துல் ரஹ்மான் அவர்களே கூறிவிட்டார்.

### ஆகஸ்டில் தேர்தல்

ஜூன் மாத இறுதியோடு மாகாணத் தேர்தல் ஜுரம், தணிந்ததும் தணியாததுமாக, எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 19ந் தேதி நடைபெறவிருக்கும் பாராளுமன்றத் தேர்தலுக்கு, அபேட்சகர்கள், ஜூலை மாதம் 15ம் தேதியே மனுக்களைத் தாக்கல் செய்துவிட்டனர்.

நூற்று நான்கு ஸ்தானங்களுக்கு 258 அபேட்சகர்கள் போட்டியிடுகிறார்கள். அவர்களில், மூன்று கூட்டணி அபேட்சகர்கள் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப் பெற்றுவிட்டபடியால், மீதியுள்ள 101 ஸ்தானங்களுக்கு 255 பேர், சிலர் நேர்முகப் போட்டி, இன்னும் சிலர் முக்கோணப் போட்டி, வேறு பலர் நான்கு கோணப் போட்டியிட வேண்டிய நிலையிலிருக்கின்றனர்.

ஆளும் கட்சியான கூட்டணி, 104 தொகுதிகளிலும் அதன் அபேட்சகர்களை நிறுத்தியிருக்கிறது. அகில மலாயா இஸ்லாமிய கட்சி 58; சோஷலிஸ முன்னணி 37; மக்கள் முற்போக்குக் கட்சி 19; நகரா கட்சி 9; மலாயன் கட்சி இரண்டு அபேட்சகர்களை நிறுத்தியுள்ளது. பற்றுக்குறைக்கு 17 சுயேச்சையாளர்களும் போட்டியில் இறங்கியிருக்கிறார்கள். இந்தச் சிறிய நாட்டில், இத்தனை கட்சிகள் முளைத்திருக்கும் போது, சுயேச்சையாளர்கள் பெருமளவில் போட்டியிடுவது, வாசகர்களுக்கு வியப்பைத் தரலாம், அல்லவா? அதற்குக் காரணம் இல்லாமலில்லை.

### பகிரங்கமிரட்டல்

பங்காளிகள் மூன்று பேர் சேர்ந்துள்ள கூட்டணியில், ஸ்தானம்ஒதுக்குவதில்பிணக்கு ஏற்பட்டது. கூட்டணியின் தலைவர் துங்கு அப்துல் ரஹ்மான், அம்னோவுக்கு 69; ம. சீ. சங்கத்திற்கு 31; ம. இ. காசுக்கு 4 ஸ்தானங்களாகப் பங்கீடு செய்து கொடுத்தார். ஜனத்தொகைக் கணக்குப்படி, சீனர்கள் கூடுதலாகவிருப்பதால், ம. சீ. சங்கத்தாருக்கு 38 ஸ்தானங்கள்வரை கோரினர். இது வெளிப்படையான காரணம். ஆனால், தேசியக் கல்வித்திட்டமான “ரஸாக் கல்வித்திட்டம்” சீனக் கல்வியை அபிவிருத்தி அடையச் செய்யாது என்பது மறைமுகக் காரணம். இந்த மறைமுகக் காரணம், பகிரங்க மிரட்டலாக மாறி, அபேட்சகர்கள் மனுக்களைச் சமர்ப்பிக்கும் முதல் நாள் நாட்டையே ஒரு குலுக்குக் குலுக்கிவிட்டது.

ஆனால், தேசியத் தலைவரான துங்குஅப்துல்ரஹ்மான், கூட்டணியில் சீனர்களில் யார் யாருக்கு இருக்க விருப்பமோ இருக்கலாம்; விலக விரும்புகின்றவர்களைக் கட்டிப்பிடித்து இழுக்கத் தயாராயில்லை என அறுதியிட்டுக் கூறிவிட்டார். துங்கு அவர்களின் விருப்பத்திற்கு இசையாது பிரிந்து போனவர்கள் தான் சுயேச்சையாளர்களின் தொகையைப் பெருக்கினர்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து, ம. சீ. சங்கப் பெருந் தலைவர்கள் பலர் ஒருவர் பின் ஒருவராக இராஜினாமாச்செய்து கொண்டிருந்தார்கள் சிலதினங்கள். இதை அறிந்த ம. சீ. சங்கத் தலைவர் டாக்டர் லிம்-சொங்-யூ, கடந்தவற்றை மறந்து, முழுமூச்சுடன் தேர்தல் வேலையில் இறங்கவேண்டும் என அறைகூவல் விடுத்துக் கொண்டிருக்கிறார்.

கூட்டணியின் சரிதை இவ்வாறிருக்க, இது நாள்வரை சோஷலிஸ முன்னணியும், மக்கள் முற்போக்குக் கட்சியும் ஒரே இலையில் விருந்துண்டவர்கள் போல் பாவனை காட்டி வந்து, பாராளுமன்றத் தேர்தலின்போது, ஒன்றுக்கொன்று தடலடிப்பிரச்சாரங்கள் செய்து கொண்டிருக்கின்றன.

மாகாணத் தேர்தலில் இரண்டே மாகாணங்களைக் கைப்பற்றிய அகில மலாயா இஸ்லாமியக் கட்சி, தூரப்புறக் கிராமங்களுக்குச் சென்று, தங்களுக்கு வாக்களிக்காவிட்டால் மதச் சடங்குகளை நிறைவேற்றி வைக்க வரமாட்டோம் என்று வகுப்புவாதப் பிரசாரம் செய்து வருவதாகச் சொல்லப்படுகிறது.

(10ஆம் பக்கம் பார்க்க)

---

# இலங்கையில் பொருள் விருத்தி

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கின்றன. எனவே இவை இரண்டும் சமம் என ஒரு சாரார் வாதாடுவர். அரசாங்கமே தொழில்களை ஏற்று நடாத்துவதால்கிடைக்கும் வருமானத்தில் தொழிலாளர் நிலையை உயர்த்த ஒரு பகுதியும், பொதுமக்களின் நன்மைக்கு மறுபகுதியுமாகப் பணம் செலவழிக்கப்படும். இதனால் ஒருசிலர் பணத்தை மூட்டை கட்டி வைத்துக் கொள்ள இயலாது.

இலங்கையிலே பொருள்வள அபிவிருத்திக்கான அறிகுறிகள் தென்படுகின்றன என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. மேற்கூறப்பட்ட முறையில் பொருள் வளம் அபிவிருத்தி செய்யப்படுமானால் இலங்கை தன் உணவுக்கும் ஏனைத்தேவைகட்கும் அயல் நாடுகளை எதிர்பாராமல் தன் கால்களிலேயே நிற்கத்தக்க வசதி ஏற்படும். அத்துடன் தற்போதுள்ள நிலையற்ற பொருளாதாரம் மாறி, நிலையான பொருளாதாரம் ஏற்படவும் வழிபிறக்கும். அத்துடன் இங்குள்ள இன மொழி வேறுபாடுகள் மறைந்து, எல்லோரும் இலங்கையர் இனம் என்ற தேசிய இன உணர்ச்சி ஏற்பட வழிபிறக்கும். இவை நிறைவேற்றப்பட அரசாங்க முயற்சியும் பொது ஒத்துழைப்பும் அவசியம்.

இலங்கையை நோக்கியுள்ள பொருளாதார வீழ்ச்சியை நோக்கியாவது அரசாங்கமும் மக்களும், தமது வேற்றுமைகளை மறந்து ஒத்துழைத்து ஆவன செய்வார்களென எதிர்பார்க்கலாம். இலங்கைக்கு ஒளிமிகுந்த எதிர்காலம் உண்டென்பது இத்தாற் புலப்படும்.

---

**கண்ணோட்டம் 10**

# கல்வியின் தரம் !

இன்றைய மாணவரே நாட்டின் நாளைய தலைவர்கள். பொறுப்புணர்ச்சியும், நற்குண, நற்செய்கைகளும் மாணவர்களுக்கு இன்றியமையாதன. ஆனால், நம் நாட்டில், பள்ளிக்கூட மாணவர்களிடையே இவ்வித குணங்கள் வரவரக் குறைந்து வருவதும், அவற்றிற்குப் பதிலாக ஒழுங்கீனமும், முரட்டுச் சுபாவமும் வளர்ந்து வருவதும்வருத்தத்துக்குரியன.

அண்மையில் இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் ஒரு குத்துச் சண்டைப் போட்டி நடைபெற்றது. இதில் இரு நாட்டுப் பள்ளிக்கூட மாணவர்களும் பங்கு பற்றினர். இப்போட்டிக்கு விஜயஞ் செய்திருந்த பிரதம மந்திரி பண்டாரநாயக்காவையும், கல்வி மந்திரி தஹநாயக்காவையும் இலங்கைப் பள்ளிக்கூட மாணவர்கள் அவமரியாதை செய்தனராம். கூக்குரலிட்டார்களாம்; ஏசினார்களாம்; கேலி செய்தார்களாம். இது நமது பள்ளிக்கூடங்களுக்கே ஒரு பெரும் இழுக்காகும். அப்போட்டிக்கு வந்திருந்த இந்தியப் பள்ளிக்கூட மாணவரும், மற்றும் அந்நிய தூதுவ நிலையத்தவரும் நமது மாணவரைப்பற்றி என்னதான் யோசித்திருப்பார்கள் என்பது சொல்லாமலே விளங்கும்.

இப்படி மாணவர் நடப்பதற்குக் காரணமென்ன? மாணவர்களின் செய்கைகள் நல்லதோ அல்லது கெட்டதோ வென்பது, அவர்கள் பெற்றோர்கள், அவர்கள் வாழும் சுற்றுடல், அவர்கள் பள்ளிக்கூடம் என்பவற்றைப் பொறுத்தே உள்ளது. மாணவர்களை மாத்திரம் நாம் குறைகூறிவிட முடியாது. அத்துடன் மாணவர்கள் இப்படிக் கட்டுமீறி நடப்பதற்கு இலங்கையில் இன்று நிலவிவரும் சூழ்நிலையும் காரணமாகும். அரசியற் தலைவர்களும், பொறுப்பு வாய்ந்த சில பெரிய மனிதரும் கட்டுப்பாடின்றி நடந்து கொள்ளும்போது, இளங்கன்றுகளான மாணவர் எவ்விதம் சும்மா இருப்பார்கள்!

ஆனாலும், மாணவரின் ஒழுங்கீனம் ஒன்றே ஒன்றைத்தான் முக்கியமாகக் குறிக்கின்றது. இதற்கு அவர்கள் பள்ளிக்கூடங்களில் பெற்றுவரும் கல்வியின் தரமும் ஒரு காரணமாகும்.

எமது கல்வி முறை வெறும் புத்தகப் படிப்பையே நம் மாணவருக்குப் புகட்டுகின்றது. இதனாற் பிரயோசனம் எதுவுமில்லை. அறமும் அன்பும் வாழ்க்கையில் முக்கியமானவை என்பதை மாணவருக்கு அறிவுறுத்தக்கூடிய கல்வியே பயனுள்ள கல்வியாகும். அத்துடன் தொழிற் கல்வியும் பயிற்றப்படல் வேண்டும். ஏனெனில், தொழிற் கல்வி மாணவர்களுக்குத் தொழிற் துறையில் பயிற்சி அளிப்பதுடன், அவர்களுக்கு வாழ்க்கையில் உற்சாகத்தையும் நம்பிக்கையையும் ஊட்டவும் உதவும்.

ஆகவே, நம் நாட்டு இளைஞர்களை நல்வழிப்படுத்தும் ஒரு திட்டமிடப்பட்ட கல்வி முறை அவசியமாகின்றது. நிலைமையை நாம் கவனிக்காது விடுவோமாயின், அது அத்து மீறிவிடும் என்பதில் சந்தேகமேயில்லை. படித்தும் வேலையற்றுத்திரியும் தொகையினருடன், பள்ளிக்கூடங்களில் பயின்று கொண்டே பகுத்தறிவின்றி நடக்கும் மாணவரும் சேர்ந்து கொண்டால், இலங்கையில் அபாயகரமானவொரு நிலை ஏற்படக்கூடும். எனவே, அரசியல் தலைவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் அனைவரும் ஒன்றுகூடி மாணவர்களிடையே அன்போடும் அறத்தோடும் கூடிய ஒழுங்கையும், கட்டுப்பாட்டையும் நிலைநாட்ட வேண்டியவர்களாகின்றனர்.

---


உங்கள் கட்டடங்களுக்கு வேண்டிய சகலவிதமான

**இரும்புச் சாமான்களுக்கு**

எங்களிடம் விசாரியுங்கள்

★ கேடர் வகைகள் எல்லாச் சைஸ்களும்
★ உருண்டைக் கம்பிகள் ,,
★ கொங்கிறீற் வலைகள் எல்லா வகைகளும்
★ சிமெந்து (காங்கேசன்), (யப்பான்)
★ தீந்தை, வார்னிஸ்வகைகள்
★ டிஸ்ரெம்பர் எல்லா நிறங்களிலும்
★ பித்தளைப் பூட்டு, பிணைச்சல் வகைகளும்

எங்களிடம் மிகவும் குறைந்த விலைக்குப் பெறலாம்.

இலங்கையில் தயார்செய்யப்பட்ட
அஸ்பெஸ்ரஸ் கூரைத்தகடுகள் சீலிங் சீற்களும்
எங்களிடம் விற்பனைக்கு ஏராளமாயிருக்கின்றன.

**சண்முகம் ஸ்ரோர்ஸ்**

உரிமையாளர் : ஆ. சண்முகராசா

**222, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

போன் : **697**

## பூஜ்யம் தபால்

கடவுள்,
c/o. மாஸ்கோ ரேடியோ,
ருஷியா.

கடவுளே!

மாஸ்கோ ரேடியோ தங்களுக்கு ஒரு புதிய சவால் விடுத்துள்ள சமாச்சாரம் தங்களுக்குத் தெரியுமோ? எல்லாம் அறிந்த தங்களுக்கு இது தெரியாதிருக்க முடியாதுதான்.

“கடவுள் என்பவர் உண்மையில் இருந்தால், ஏன் அவர் குறைந்தது ஓர் அற்புதமாவது செய்து, அவர் இருப்பது பற்றி யாரும் சந்தேகிக்க முடியாதபடி செய்து விடக்கூடாது?” என்று கேட்டுள்ளது.

இந்தச் சவாலைக் கேட்டதும் இங்கே “டைம்ஸ்” பத்திரிகையில் பலர் பலவித கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள்.

எங்கள் கம்யூனிஸ்ட் தலைவர் பீட்டர் கெனமன், “இது நேர்மையான கேள்வி” என்று கூறிவிட்டார். அவர் பெரிய அறிவாளி.

மற்றோர் அறிவாளியும் சமசமாஜப் பிரதிநிதியுமான பெர்னாட் சொய்ஸா, “இலங்கை அரசாங்கம் இன்னும் நீடித்து இருப்பதே ஒரு அற்புதம். இதைக்கண்டு மக்கள் திகைக்கின்றார்கள். ஆகவே எங்கள் அரசாங்கம் தினசரி அற்புதங்கள் செய்துவருவதால், இதைப்பற்றி விவாதிப்பதில் புண்ணியமில்லை” என்று குத்தல் விடுகிறார்.

இன்னும் எவ்வளவோ அறிவாளிகள், தாங்கள் இருப்பதற்குச் சாதகமாகவும், சிலர் பாதகமாகவும், சிலர் மையமாகவும் பதில் கூறியிருக்கிறார்கள். படித்த மூளை குழம்புகிறது!

தாங்கள் புதிய அற்புதம் ஏதும் செய்து, மாஸ்கோ ரேடியோக்காரரிடம் நற்சாட்சிப் பத்திரம் பெற உத்தேசம் உண்டா? இல்லாவிடில் நீடித்து தங்களைப் பற்றி இவ்வித வாக்குவாதங்கள் நடக்க விட்டுவிட்டு வழக்கம் போல் வேடிக்கை பார்க்கப் போகிறீர்களா?

இப்படிக்கு
பூஜ்யம்.

குறிப்பு:-

என்னைப் பொறுத்தவரை தங்களைப் பற்றி யார் என்ன சொன்னாலும் அது குறித்து கவலையில்லை. ஆனால் இவர்கள் ஒருவருக்கொருவர் அடித்துக் கொண்டு எங்கள் மேல் வந்து பிடுங்காமல் இருந்தால் அதுவே போதும். ஆனால் மாஸ்கோ ரேடியோ பேசுவதும் என் பேனா எழுதுவதும், ஓர் அளவு அசைவதும் எல்லாம் தங்களாலேயே என்று நம்பும் எனக்கு, இவர்கள் எங்கள் மேல் வந்து பிடுங்கினாலும் அதுவும் தங்கள் செயல் தானே! கவலையில்லை.

“பூஜ்யம்”

# கொம்யூனிஸ்ட் ஆட்சியைக் கவிழ்ப்போம்

## கேரளக் காங்கிரஸ் தலைவர் திரு. சங்கரன் முழக்கம்

கேரளத்தில் நிலைமை தொடர்ந்து மோசமடைந்து வருவதால் இந்தியமத்திய அரசாங்கம் தலையிடவேண்டிய கட்டம் நெருங்கி வந்துகொண்டிருக்கின்றது. இந்திய காங்கிரஸ் தலைவர் ஸ்ரீமதி இந்திரா காந்தியும், இந்திய காங்கிரசின் செயலாளர் ஸ்ரீமதி சுசேதா கிருபளானியும் மத்திய அரசாங்கம் தலையிடுவது அரசியல் திட்டத்திற்கு முரணான செயலாக இருக்கமுடியாது எனக் கூறியிருக்கின்றனர். ஸ்ரீமதி இந்திரா காந்தி ஜனாதிபதி டாக்டர் இராஜேந்திர பிரசாத்தை 25-7-59 இல் சந்தித்து மத்திய அரசாங்கம் கேரளத்தில் தலையிட வேண்டும் என வற்புறுத்தியதாகச் செய்திகள் கூறுகின்றன.

மத்திய அரசாங்கம் குறுக்கிட்டாலும் சரி குறுக்கிடாவிட்டாலும் சரி கேரளமக்கள் கொம்யூனிஸ்ட்அரசாங்கத்தைக் கவிழ்த்தே தீருவார்கள் என்று கேரளக் காங்கிரஸ் தலைவர் திரு. சங்கரன் கூறியிருக்கிறார். இந்தியாவில் சில பொதுக் கூட்டங்களில் கேரள நிலைமை குறித்து கேரள அரசாங்கத்துக்குச் சாதகமாகவும் பாதகமாகவும் பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

### நஷ்டஈடு

பொலீசாரின் துப்பாக்கிப் பிரயோகத்தால் கேரளத்தில் இதுவரை உயிர்நீத்த 15 பேரின் குடும்பத்தவருக்கு ரூபாய் 3,000 வீதம் நஷ்ட ஈடு வழங்கப் போவதாக கேரள அரசாங்கம் அறிவித்துள்ளது. இந் நஷ்டஈட்டை சம்பந்தப்பட்ட குடும்பத்தவர்கள் ஏற்க மறுத்திருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன.

எதிர்ப்பு இயக்கத்தில் கலந்துகொள்ளும் கேரளப் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்தவண்ணம் இருக்கின்றது. சில நியாயவாதிகளும் மறுப்புச் செய்ததற்காகக் கைதாகியிருக்கின்றனர்.

புதுடில்லியில் ஜனாதிபதி, பிரதமர் நேரு, உள்நாட்டு மந்திரி வல்லப பந்த் நிதி மந்திரி மோரார்ஜி தேசாய்ஆகியோர் கேரள நிலைமை குறித்து ஆலோசனைகள் நடத்திவருகின்றனர்.

கேரளத்தின் முதலமைச்சர் நம்பூதிரிப்பாத், மத்திய அரசாங்கம் கேரள அரசாங்கத்துக்குப் போதிய பாதுகாப்பு அளிக்க வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தியுள்ளார்.

இந்திய அரசியல் திட்டத்தின் இருபிரிவுகளின்படி ஜனாதிபதி கேரள இராச்சியத்தில் குறுக்கிட முடியும்.

1. ஓர் இராச்சியத்தில் அல்லது அதன் ஒரு பகுதியில் உள்நாட்டுக் கலவரங்களால் அல்லது வெளிநாட்டு ஆக்கிரமிப்பால் பாதுகாப்பு சீர்குலைவதாக ஜனாதிபதி கருதினால்

## இந்தியா

அவர் தலையிடலாம்.

2. ஓர் இராச்சியத்தின் அரசாங்கம் அரசியல் அமைப்பு விதிகளுக்கு முரணாக இயங்குவதாக ஜனாதிபதி கருதினால் அவர் அந்த இராச்சியத்தின் அரசியல்திட்டத்தைத் தற்காலிகமாக நிறுத்திவைத்து இராச்சியத்தின் நிருவாகப் பொறுப்பையும் சட்டமியற்றும் அதிகாரங்களையும் ஏற்றுக் கொள்ளலாம்.

இவ்விதிகளில்எதைப் பிரகடனப்படுத்த வேண்டும் என மத்திய மந்திரிசபை ஜனாதிபதிக்கு ஆலோசனை கூறவேண்டும். இதை இவ்வாரத்தில் மந்திரி சபை தீர்மானிக்குமா? அடுத்த வாரத்தில் இந்திய பாராளுமன்றம் தீர்மானிக்குமா?

### சுதந்திரக் கட்சி

சுதந்திரக் கட்சியின் முதலாவது மாநாடு பம்பாய் நகரத்தில் ஆகஸ்ட் 1-ம் 2-ம் திகதிகளில் கூடி கட்சியின் கொள்கைகளையும் அமைப்பு முறைகளையும் ஆராயும். இடைக்கால நிருவாகக்குழுவும் தெரிவு செய்யப்படும். கட்சியின் அமைப்பு விதிகள் மார்கழி 1959 க்குமுன் இன்னொரு மகாநாட்டினால் அங்கீகரிக்கப்பட வேண்டும். இவ் விபரங்களைக்கட்சியின் அமைப்புக்குழுத் தலைவர் திரு. எம். ஆர்.மசானிவெளியிட்டிருக்கிறார்.

# இளைஞர்களும் எழுத்தும்

— அஜன் —

ஜேர்மனியிலுள்ள பிராங் பேட் என்ற இடத்தில் உலக எழுத்தாளர்சங்கத்தின்(பென்) முப்பதாவது மாநாடு சமீபத்தில் நடைபெற்றது. அம் மாநாட்டிற் பேசிய டாக்டர் இராதா கிருஷ்ணன் உலகத்துக்கே ஓர் எச்சரிக்கை செய்திருந்தார். தாமே இறைவனின் பிரதிநிதிகள் என்று சொல்லிக்கொண்டு எந்த ஒரு நாடோ அல்லது ஓர் இனமோ தமது கலாசாரத்தைப் பிறர் மீது திணிக்க முற்படுகின்றதோ அவர்கள் தமக்குத்தாமே அழிவைத் தேடிக் கொள்ளுகின்றனர் என அவர் கூறியிருந்தார்.

சென்ற திங்கட்கிழமை மாலை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி இளம் எழுத்தாளர் சங்கத்தின் ஓராண்டு நிறைவு விழாவிற் கலைப்புலவர் க. நவரத்தினம் ‘எழுத்தும் பண்பும்’ என்பது பற்றித் தத்துவார்த்தக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு சிக்கல் எதுவுமின்றி மிகவிளக்கமாகப் பேசியபோது டக்டர் இராதாகிருஷ்ணனின் இந்த எச்சரிக்கைதான் நினைவு வந்தது. ஒவ்வொரு நாட்டுக்கும் அதற்குரித்தான ஒரு பண்பாடு உண்டு; அந்நாட்டு மக்கள் அதனைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும்; அதே வேளையில் அதனைப் பிற நாட்டினர் மீது திணிப்பது தவறு. இந்த அடிப்படையில்தான் கலைப்புலவர் தமது கருத்துக்களைத் தெரிவித்து, எழுத்தாளர்கள் சமூகத்தின் பிரதிநிதிகளான படியால் அவர்களின் எழுத்துக்களில் சொந்தப் பண்பாடும் பழக்கவழக்கங்களும் செறிந்திருக்க வேண்டுமென்பதை அழுத்தந் திருத்தமாகக் கூறினார். ஒருவரின் உள்ளத்திற் சிந்தையின் நிறைவு ஏற்படும் போதுதான் அது பொங்கித் ததும்பிப் பூரணத்துவம் பெறுகின்றதென்பதை அவர் விளக்கினார். அவ்வாறே, ஓர் எழுத்தாளனும் பக்குவமான நிலையை எய்தியபின்னர்தான் தனது கருத்துக்களுக்கு உருவங் கொடுக்க முடியுமென்றார். அப்படியின்றி மனம் போனவாறு எழுதுவதெல்லாம் வெள்ளைக் கடதாசியைக் கறுப்பு மயமாக்கும் செயலேயாகும் என அவர் தெரிவித்தார்.

சிந்தனைச் செல்வர் திரு. எஸ். எச். பேரின்பநாயகன் தனது உள்ளத்திற் சரியெனத் தோன்றுவதை மிக நாசூக்காகக் கூறுவதிற் சமர்த்தர். தமது கருத்தைப் பிறர்மீது திணிக்காமலே தாம் கூற விரும்புவதை நாகரிகமாகச் சொல்லித் தமது கட்சியை நிரூபித்து விடுவார். அன்று ‘எழுத்தும் வாழ்க்கையும்’ பற்றிப் பேசிய கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் திரு. பேரின்பநாயகன் கலைப்புலவர் நவரத்தினம் அவர்களின் தத்துவார்த்தக் கருத்துக்களை ஏற்கத் தயங்காதவிடத்தும் நாளாந்த வாழ்க்கைப் பிரச்சினை ஒன்று இருக்கின்றது, எழுத்தாளனை அது தாக்கவும் செய்கின்றதென்பதைத் தமக்குரித்தான காருண்ய சிந்தையுடன் எடுத்துரைத்தார். இப்போதெல்லாம் ஆங்கிலம் தரத்திற் குறைந்து வருகின்றதே யென மாரடிப்பவர்கள் அந்தக் காலத்தில் தமிழ் குற்றுயிராய்

(9 ஆம் பக்கம் பார்க்க)


பயிர் பூச்சிகளாலும் பயிர் பீடைகளாலும் எவ்வளவு சேதம் ஏற்படுகிறதென்று உங்களுக்குத் தெரியுமா?

ஜெர்மனியாரின் பயிர் பீடை நாசினிகளையும், தெளி கருவிகளையும் பாவித்துப் பயிர்களைப் பாதுகாருங்கள்

**பொலிடோல்:** பிரசித்திவாய்ந்த ஒரு பூச்சி நாசினி திரவம் ஆகவும், தூள் முறையாகவும் பாவித்துக்கொள்ளலாம்.

**டிப்தெரெக்ஸ்:** நெற்பயிர் பீடைகளுக்குச் சிறந்த சக்தி வாய்ந்த ஒரு நாசினி திரவமாகவும், நீர்கலந்த தூளாகவும், தனித்தூளாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**குப்பிரவிற்று:** கமத்தொழிற் பகுதியாலும் தேயிலை ஆராய்ச்சித் தாபனத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட செம்பு பொதிந்த பங்கசு கொல்லி, தேயிலை, வெற்றிலை, புகையிலை பயிர்களின் பங்கசு நோய்களை அடக்க வல்லது.

**சிரீசையன்:** நெல்விதை மற்றும் விதைகளை தோற்று விதை பங்கஸ் நோய்களை நீக்கலாம்.

**நைகரகாபமேற்று:** பயிர் நோய்களைத் தடுக்கக்கூடிய ஓர் பங்கஸ் கொல்லி.

**ஹெடோனல்:** களைநாசினி, களைப்பூண்டுகளை அழிப்பதால் நெற் பயிருக்கு சிறந்த வளர்ச்சியைக் கொடுக்கும்.

**தூக்கோன்இரை:** ஈ, கரப்பான் பூச்சி ஆகியவற்றை அடக்க வாய்ந்த பூச்சி கொல்லி.

**சீலியோ நச்சுப்பசை:** எலிகளையும், அகழான்களையும் பரிநாசஞ் செய்யும் அரிக்கும் விலங்கு கொல்லி.

**பிலாட்சி உபகரணங்கள்:** உகந்த தெளி கருவிகளும், தூவிகளும் குறைந்த விலைக்கு எடுத்துக்கொள்ளுக.

மேற்கூறியவை யாவும் M. P. C. சங்க மூலமாயும் எங்கள் பிரதிகருத்தர்
K. S. செல்லையா, ரோயல் டிஸ்பென்சரி, யாழ்ப்பாணம்.
சிவசக்தி ஸ்டோர்ஸ், வவுனியா.
C. A. வயித்திலிங்கம், 5, டமறில் ஒழுங்கை, மட்டக்களப்பு.
K. V. சோமசுந்தரம், மன்னன் குளம், அக்கரைப்பற்று.
ஸ்ரீ சுப்பிரமணிய ஸ்டோர்ஸ், வெலிமடை.
சரஸ்வதி ஸ்டோர்ஸ், வெலிமடை.
அனுலா சீற் ஸ்ரோர்ஸ், வெலிமடை. மூலமாயும் வேண்டிக்கொள்க.
தேவையான விபரங்களுக்கு எழுதுக.

விலாசம்:

**சதாம் ஹவுஸ் லிமிட்டெட்**
தபால் பெட்டி இல. 743.
கொழும்பு 8.



**மட்டக்களப்பு, திருக்கோணமலைப் பகுதிகளில்**

**ஈழநாடு**

விற்பனை செய்வோர்.

1. கலாநிதி புத்தகசாலை,
23, மெயின் வீதி, மட்டக்களப்பு.
2. சக்தி நூல் நிலையம்,
25, திருக்கோணமலை வீதி, மட்டக்களப்பு.
3. திரு. கே. குமாரசுவாமி,
குமரன் ஸ்டோர்ஸ்,
27, திருக்கோணமலை வீதி, மட்டக்களப்பு.
4. ஈஸ்ட் லங்கா புத்தகசாலை,
மெயின் வீதி, திருக்கோணமலை.

# ஈழநாடு

யாழ்ப்பாணம், விகாரி ஆண்டு ஆடி மீ 16உ (1-8-59)


## அமெரிக்க-ருஷிய நல்லுறவு?

அமெரிக்காவுக்கும் ருஷியாவுக்கும் அரசியல் வேற்றுமைகள் அதிகமுண்டு. இவை காரணமாக மூன்ருவது உலக யுத்தம் மூளுமோ என்று உலக மக்கள் அஞ்சி வருகையில், இவ்வேற்றுமைகளை யுத்தகளத்தில் அல்லாது, பரஸ்பரம் பேச்சு வார்த்தைகள் நடத்தித் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று இருதேசத் தலைவர்களிடையும் கருத்து ஒற்றுமை ஏற்பட்டிருப்பதாக, ருஷியாவுக்கு விஜயம் செய்துள்ள அமெரிக்க உப ஜனாதிபதி நிக்ஸன் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தை அமெரிக்காவோ, ருஷியாவோ அல்லது வேறு எந்த நாடுமோ விரும்பவில்லை. அணுக்குண்டுசகாப்தத்தில் யுத்தம் மூளுமாயின், எல்லாருக்கும் சர்வநாசம்தான். இதை உணர்ந்துதான், வேற்றுமைகளை யுத்தமூலமின்றி, சமாதான முறையிலே தீர்த்துக்கொள்ள வேண்டுமென்ற நிதானபுத்தி வல்லரசுகளுக்கு ஏற்பட்டுள்ளது.

ஆனல் இதே சமயம் வல்லரசுகள் மட்டுமன்றி எல்லா நாடுகளுமே ஆயுத உற்பத்திக்காகவும் இராணுவத்துக்காகவும் ஏராளமான பணம் செலவழித்துவருகின்றன. மக்களின் கஷ்ட நிவாரணத்துக்கும் முன்னேற்றத்துக்கும் பயன்படவேண்டிய பணம், நாசகார ஆயுதங்களுக்காக அதிகம் வீணக்கப்படுகின்றது. காரணமென்ன? பரஸ்பர பீதிதான். பேச்சு வார்த்தைகள் மூலம் வேற்றுமைகளை உண்மையில் தீர்த்துக்கொள்ள முடியுமாயின், அணுக் குண்டுகளையும், பறக்கும் குண்டுகளையும் மலைமலையாய்த் தயாரிக்க வேண்டிய அவசியமில்லை.

ஆகவே பரஸ்பர பீதிகளையும் சந்தேகங்களையும் நீக்க வேண்டியது சமாதானத்துக்கு அவசியமாகும். இவை நீங்குவதற்குப் பல வழிகளுண்டு. அதில் முக்கியமானது, எதிராளிகள் நேரில் சந்தித்துப் பேசுவதாகும். நேரில் சந்தித்துப் பேசுவதால், ஒருவர் உள்ளத்தை மற்றவர் அறியவும் வீண் தப்பெண்ணங்கள் நீங்கவும் வழி ஏற்படும். இந்த வகையில், அமெரிக்க உப ஜனாதிபதி நிக்ஸன் ருஷியாவுக்கு செய்துள்ள விஜயமும், சில வாரங்களுக்கு முன் ருஷிய உப பிரதமர் மிக்கோயன் அமெரிக்காவுக்கு விஜயம் செய்ததும் நல்லதே.

அமெரிக்க ஜனாதிபதியான ஐஸனோவரை, ருஷிய பிரதமர் குருசேவ் வெகுவாகப் பாராட்டி, அவரைருஷியாவுக்கு வருமாறு பகிரங்கமாக அழைத்திருக்கின்ருர். பீதிகளும், சந்தேகங்களும் அதிகமாக இருக்கும் நிலையில் இந்த அழைப்பை ஐஸனோவர் ஏற்பது சுலபமல்ல. என்ருலும், இவ்வழைப்பை அலட்சியம் செய்யாமல், கூடியசீக்கிரத்தில் ஏற்பதால், பீதியும், வேற்றுமையும் குறைய அதுவே வழிசெய்யலாம். இதற்கிடையே குருஷேவுக்கும் அமெரிக்கா அழைப்பு அனுப்புவது இராஜ தந்திர மரியாதையுமாகும்.

கம்யூனிஸத்துக்கும் ஜனநாயகத்துக்கும் கொள்கையில் அடிப்படையான வேற்றுமைகளுண்டென்றும், இரண்டும் சேர்ந்திருக்க முடியாதென்றும் சில வட்டாரங்கள் கருதுகின்றன. இரண்டுக்கும் கொள்கை வேற்றுமை என்ன இருப்பினும் சரி, உலக சமாதானமும், மக்கள் நன்மையும் வேண்டுமென்ற நோக்கங்கள் பொதுவாகுமாயின் இரு சார்பினரும் பரஸ்பரம் விட்டுக்கொடுத்து ஒத்துழைக்க எவ்வளவோ இடமுண்டு. கொள்கையில், இரு தரப்பாளரும் மெதுவாக மாறுதல்கள் செய்து கொண்டு நெருங்கி வருகின்ருர்கள். முட்டிக்கொள்வது நாசமாகுமென்றும், ஒத்துழைப்பது தான் விமோசனத்துக்கு வழி செய்யுமென்றும் இரு தரப்பினரும் அதிகமாக உணர்ந்து வருவதால், பெரிய தலைவர்கள் கூடிப் பேச இனியும் தயங்க முடியாது.

இதனை எழுதுகையில் ஜெனிவாவில் நான்கு வெளிநாட்டு மந்திரிகளின் பேச்சிலே முட்டுக்கட்டை நீங்கி வருவதாக ஒரு செய்தி கூறுகின்றது. இரு வல்லரசு கோஷ்டிகளும் ஒத்துப்போகுமாயின், புதிதாக விடுதலை அடைந்த ஆசிய, ஆபிரிக்க நாடுகளுக்கு அதிக உதவி கிடைக்கவும் அவற்றுக்கிடையேயுள்ள வேற்றுமைகளும் சமாதான முறையில் தீர்ந்து முன்னேறவும் வழி பிறக்கும். ஆகவே இந்தியா, இலங்கை போன்ற நாடுகள், இவ்வல்லரசுகளுக்கிடையே வேற்றுமைகளை நீக்கி, ஒத்துழைப்பு பலப்படக் கூடுமான உதவிகளைச் செய்வது, உலக சமாதானத்துக்கு மட்டுமன்றி, தங்கள் முன்னேற்றத்துக்கும் வழி செய்து கொள்வதாகும்.

## தோட்டத் தொழிலாளர் சேமலாபநிதி

தோட்டத் தொழிலாளரை தேசிய சேமலாப (பிராவிடென்ட்) நிதியில் சேர்த்துக் கொள்ள எவ்வித நிபந்தனையுமில்லை என்றும், இனியும் நிபந்தனை விதிக்கப்பட மாட்டாதென்றும் தொழில் மந்திரி காரியாலயம் அறிக்கை வெளியிட்டு, இதுபற்றி நிலவிய சந்தேகத்தை அதிகாரபூர்வமாக நீக்கியுள்ளது வரவேற்கத் தக்கதாகும்.

இந்திய வம்சாவளியினரான தோட்டத் தொழிலாளரை, இந்த நிதியில் சேர்க்கப்படாதென்று சில புண்ணியவான்கள் குறுக்கே நின்றனர். இப்போதும் சிலர் எதிர்க்கவே செய்கின்றனர். என்ருலும் அதைப் பொருட் படுத்தாமல் இத்தொழிலாளரையும், இந்த சமூக சேவைத் திட்டத்தில் சேர்த்து, நிபந்தனை எதுவுமின்றி அவர்களையும் மற்றவர்களைப்போல் சரிசமமாக அரசாங்கம் மதிக்க முற்பட்டதைப் பாராட்டுகின்ருேம்.

ஆயிரம் ஏக்கர் விஸ்தீரணமுள்ள தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளருக்கு மட்டுமே, வருகிற செப்டம்பர் மாதம் முதல் இத் திட்டம் நடைமுறைக்கு வருமென்று அறிவிக்கப்படுகிறது. நிர்வாக சம்பந்தமான ஏற்பாடுகள் பல செய்ய வேண்டுமாதலால், இதில் தாமதம் ஏற்படுவது இயற்கை. படிப்படியாக மற்றவர்களுக்கும் இவ்வசதி கிடைக்கலாம். ஆனல் நிர்வாக காரணமாக ஏற்படும் தாமதம் எளிய தொழிலாளரை நஷ்டப்படுத்தாமல் பாதுகாக்க வேண்டும். ஏற்கெனவே இவ்விஷயமாக அதிக தாமதம் ஏற்பட்டு, தொழிலாளருக்குப் பெரிய நஷ்டம். இனியும் நஷ்டமேற்படாமல், எல்லாத்தோட்ட நிர்வாகமும், தங்களிடம் வேலை செய்யும் தொழிலாளருக்குத் தர வேண்டிய 'பிராவிடென்ட்' நிதிப் பங்குத் தொகையை வங்கியால் செப்டம்பர் முதலிலிருந்தாவது கட்டிவிடும்படி செய்யவேண்டும்.

முப்பது அல்லது நாற்பது வருடங்கள் வேலைசெய்து ஓய்வுபெற இருக்கும் தொழிலாளருக்கு இத்திட்டம் உதவாது. அவர்களுக்கும் நியாயம் வழங்க வேண்டும். இது வரை சேவை செய்த வருஷங்களுக்குத் த்க்கபடி அவர்களுக்கு 'பிராவிடென்ட்' நிதியைக் கணக்கிட்டுக் கொடுக்குமாறு அரசாங்கம் உத்தரவிடவேண்டும். மொத்தமாகக் கொடுக்க முனையாவிடில். பல தவணைகளில் செலுத்தவோ, மாதப்பென்ஷனகக் கொடுக்கவோ செய்யலாம். மனிதரைப் பொறுத்த இவ்விஷயத்தில் மனிதாபிமானத்துடன் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

நிபந்தனை வதந்தியைப் பலமாக ஆட்சேபித்தவர்கள் இவ்விஷயத்திலும் ஒரு முகமாகக் கிளர்ச்சி செய்தால், அம்முயற்சி வீண்போக முடியாது.

## கைலஞ்ச விசாரணை

சமீபத்தில் சுதந்திரம் பெற்ற தென்கிழக்கு ஆசிய நாடுகளில் எல்லாம் கைலஞ்சம் போன்ற ஊழல்கள் தலைவிரித்தாடுவதென்ற புகார் இருந்துவருகின்றது. இதனல் அரசாங்க நிர்வாகத்திறன் குன்றுவதுடன் சமூகத்தில் நல்லோர், பெரியார் என்ற பேச்சுக்கே இடமின்றி எல்லோரும் சுயநலத்தை மேற்கொள்ளும் இழிந்த நிலை உருவாகிக் கொண்டு வருகின்றது. சில வாரங்களுக்கு முன்னர் பிரதிநிதிகள் சபையிற் பேசியவர்கள் அரசாங்கத்திற் பொறுப்புள்ள பதவிகளை வகிப்பவர்களே கைலஞ்சம் பெறும் பெருச்சாளிகளாக விளங்குகின்றனர்எனக்குற்றஞ் சாட்டினர். இக் குற்றங்களை விசாரிப்பதற்கு அரசினர் ஒரு விசாரணைச் சபையை நியமித்திருப்பது வரவேற்கத்தக்கது. மந்திரியாயினும் சரி, எம். பியாயினும் சரி, அன்றேல் வேறு எந்த உயர்தர அரசாங்க ஊழியராயினும சரி, இவர்களில் எவருக்கு எதிராகவும் கைலஞ்சக் குற்றங்கள் ஏற்கப்படுமெனவும், உண்மையைத் தெரிவிக்க எவரும் அஞ்ச வேண்டியதில்லை யெனவும் கைலஞ்ச விசாரணைத் தலைவர் பொதுமக்களுக்குத் தெரிவித்திருக்கின்ருர். சாட்சியம் அளிப்பவர்களுக்குப் போதிய பாதுகாப்பு உதவப்படுமெனவும் தலைவர் வாக்குறுதி அளித்திருப்பதால், தக்க ஆதாரங்களைக் காட்டி கைலஞ்சம் பெறும் ஆசாடபூதிகளின் இழிசெயலை அம்பலப் படுத்த எவரும் தயங்கக் கூடாது. இத்தகைய விசாரணைச் சபையினர் விரிக்கும் வலையில் 'திமிங்கிலங்கள்' சிக்குப்படாமல் தப்பிக்கொள்வதும் 'சிறுமீன்கள்' அகப்பட்டுத் தத்தளிப்பதும் நாமறிந்த தொன்று. எனவே, கைலஞ்ச விசாரணைச் சபையினர் இதனைக் கருத்திற் கொண்டு பெரியஇடத்துத் தவறுகளையும் முறையாகக் கவனித்துத் தக்கதண்டனை அளிக்கத்தவற மாட்டார்கள் என எதிர்பார்க்கலாமா.?

## கேரளம்

கேரளத்தில், நிலைமை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டு வருகிறது. நிலைமை இப்படியே நீடிக்குமாயின், பலாத்கார சம்பவங்கள் அதிகரிப்பதுடன் பொதுமக்கள் நிம்மதியாக வாழ முடியாமலும் போய்விடும்.

பேச்சு வார்த்தைகள் மூலம் இதைத் தீர்த்துக்கொள்ளலாம் என்று கேரள முதல் மந்திரி நம்பூதிரிபாத் கூறுகிருர். ஆனல் இதை மற்றக் கட்சிகள் ஏற்காமல் நேரடி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன. ருஷியாவும், அமெரிக்காவுமே பேச்சு வார்த்தைகள் மூலம் தங்கள் வேற்றுமைகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டிய அவசியத்தை உணர்ந்திருக்கையில், பொதுமக்கள் நன்மையை முன்னிட்டு, அதே முறையை ஏன் கேரளத்தில் கைக்கொள்ள முடியாது?

நேருஜி கேரளத்துக்கு நேரில் சென்று பார்த்தும், நெருக்கடி தீரவில்லை. பொதுத் தேர்தல் நடத்துவதே பிரச்சினைதீர வழி என்ருர் நேருஜி. ஆனல் கம்யூனிஸ்ட் மந்திரி சபையோ, ராஜினமாச் செய்யவோ, பொதுத் தேர்தல் நடத்தவோ சம்மதிக்கவில்லை. இதற்கிடையே எதிர்ப்புக் கிளர்ச்சிகள் அதிகரித்துக்கொண்டு போகின்றன.

இச்சமயம் பொதுத் தேர்தல் நடந்தால், கம்யூனிஸ்ட் கட்சி தோற்றுவிடுமென்பது எதிர்க் கட்சிகளின் நம்பிக்கைபோலும். ஆனல் இதற்கு என்ன உத்தரவாதம்? வேலையில்லாக் கஷ்டமும், வறுமையும் கேரளத்தில் அதிகமிருப்பதால், கம்யூனிஸ்ட் செல்வாக்கு குறையுமென்று நம்புவதற்கில்லை. பொதுத் தேர்தல் நடைபெற்று கம்யூனிஸ்ட்டுகள் மீண்டும் அதிகாரத்துக்கு வந்துவிடுவதாக வைத்துக் கொள்வோம். அப்போது என்ன செய்வது? ஆகவே நேரடி நடவடிக்கையை நிறுத்தி பேச்சு வார்த்தைகள் மூலம், கூடுமானவரை சமரசமாகப் போவதே பொது மக்கள் நன்மைக்கும் ஜனநாயக முன்னேற்றத்துக்கும் உகந்ததாகும்.

## பார்லிமெண்ட் சபையில்

பல மாதங்களுக்குப்பின்னர், சென்ற செவ்வாயன்று பார்லிமென்ட் சபைக்குச் சென்றேன். அங்கே 'பட்ஜட்' விவாதமெல்லாம் எப்படி நடக்கிறது? அரசாங்கக் கட்சியின் நிலைமை என்ன? என்பதை நேரில் பார்க்க ஆவலாக இருந்தது.

நான் சென்ற சமயத்தில் புதிய தொழில் மந்திரி எம்.பி. டி. சொய்ஸா சிங்களத்தில் பேசிக்கொண்டிருந்தார். புரியவில்லை. பத்திரிகைக் கலரியிலே எனக்குப் பக்கத்தில் அவ்வப்போது மொழி பெயர்ப்பைக் கேட்கும் "இயர்போன்" இருந்தது. அதை எடுத்துக் காதில் வைத்துப் பார்த்தேன். ஒன்றுமே கேட்கவில்லை. அது ரிப்பேராம்! எவ்வளவு நாட்களாக ரிப்பேரோ தெரியவில்லை! ஆகவே காதிருந்தும் செவிடனகி விட்டேன்!

* * *

இந்த விவாதத்தில் மந்திரிகள் பேசுவதே இல்லை என்பது ஒரு புகார். அப்படி அபூர்வமாகப் பேசும் மந்திரியும் நமக்குத் தெரியாத சிங்களத்தில் பேசுவதாயின் என்ன செய்வது? எழுந்து வந்து விடலாமா? என்று தோன்றியது. ஆனலும் சற்றே பொறுமையாக இருந்து பார்த்தேன்.

பேசிய மந்திரியைத் தவிர வேறு ஒரு மந்திரியும் அங்கு இல்லை. அரசாங்கத்தரப்பில், நாற்காலிகளெல்லாம் அநேகமாகக் காலி. நியமன மெம்பர்கள் உள்ளிட்டுப் பத்துப்பேர்கள்தான் மூலைக்கு ஒருவராக இருந்தனர். எதிர்க் கட்சியில் 13 பேர். சில சமயம் குறைந்த அளவு 'கோர'மான (ஐந்தில் ஒரு பங்கு) 21 மெம்பர்கள்கூட சபையில் இல்லை. இருப்பவர்களும்மேசைமீது தலைவைத்துக் கண்ணை மூடிக்கொண்டு, 'தூங்காமல் தூங்கி' சுகம் பெற்றுக் கொண்டிருந்தனர்!

ஆனல் ஒன்று, முன் தடவை நான் செல்லுகையில், சபையில் காற்று இல்லாமல் ஒரே புழுக்கமாக இருக்கும். ஆனல் இப்போது குளிர் சாதனங்கள் வைத்திருப்பதால், சுகமாகத் தூக்கம் வருகிறது. ஆகவே பிரதமர் உள்ளிட்டுப் பலரும், சபையிலிருந்து தூங்குவதாயின் அதில் வியப்பில்லை.

* * *

'நாய்கள் குரைக்கட்டும்: பொதி மாடுகள் போய்க் கொண்டிருக்கும்' என்று முன்னர் பிரிட்டனில் இந்தியா மந்திரியாகஇருந்த சேர்சாமுவேல் ஹோர் கூறினர் (ஆனல் அந்த பிரிட்டிஷ் பொதி மாடுகள் பொதிகளைப் போட்டுவிட்டு இந்தியா, இலங்கை முதலிய இடங்களிலிருந்து வெளியேற வேண்டியதாகிவிட்டது). இலங்கை பார்லிமென்டில் எதிர்க்கட்சியைச் சேர்ந்த எட்மன்ட் சமரக்கொடி (ஆங்கிலத்தில்) பேசுகையில், 16 மந்திரிகளில் ஒருவர்கூட இல்லை! அவர் என்ன கத்தினலும், அரசாங்கப் பொதிமாடு போய்க் கொண்டிருக்குமென்ற எண்ணம் போலும்! வெறும் காலி நாற்காலிகளைப் பார்த்து அவர் பேசுவதைக் காணும்போது, இந்த விவாதமே வெறும் பொம்மலாட்டமென்றும், பயனற்றதென்றும் தோன்றியது.

எதிர்க் கட்சியினர் பேசுகையில், மந்திரிகள் சிலராவது இருந்து கவனிக்கவேண்டியது மரியாதை மட்டுமல்ல; கடமையுமாகும். ஆனல் இந்த ஏச்சும் பேச்சும் கேட்க விரும்பாமலோ அல்லது வேறு காரணத்தாலோ மந்திரிகள் மட்டுமன்று, அரசாங்கக் கட்சியில் பலரும் விவாதத்தின்போது சபையில் இருக்கவில்லை. பிரதமரையும் காணேம்!

நான்கு மணிக்குத் தேநீர் சாப்பிடச் சபை கலைந்தது. நானும் போதும்போதுமென்று வெளிவந்து விட்டேன்.

—ஐயாறன்

# உரிமைகள் தருக! இல்லையேல் வேலை நிறுத்தம்

யாழ்ப்பாணம்

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வேலை நேரம் போன்ற பல்வேறு உரிமைகளைப் பற்றிக் காட்டிவரும் அசிரத்தையே தம்மை வேலை நிறுத்தம் செய்யத் தூண்டுகின்றதென அகில இலங்கைச் சுகாதார சேவையாளரின் யாழ்ப்பாணக் கிளைக் கூட்டமொன்றில் அதன் தலைவரான திரு. பி. தேவராஜா குறிப்பிட்டார். இன்னும் சில காலத்துக்குள் உரிமைகள் அளிக்கப்படாவிடில், எல்லோரும் வேலை நிறுத்தம் செய்யத் தயாராக வேண்டுமென அவர் ஆஸ்பத்திரி வேலையாட்களைக் கேட்டுக்கொண்டார். சென்ற ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் திரு. பி. தேவராஜனின் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு.கு. வன்னியசிங்கம் எம்.பி., அகில இலங்கைச் சுகாதார சேவையாளர் சங்கத்தைச் சேர்ந்த திரு. எஸ். குணவர்த்தன, திரு. அனில்முனசிங்கா எம். பி. ஆகியோர் பேசினர்.

# கதிர்காம மடங்களை அகற்றக்கூடாது

## மடாதிபதிகள் சங்கத் தீர்மானம்

மகந்துசுவாமி ராமகிரியின் தலைமையில் கதிர்காமம் தெய்வானை அம்மன் கோவிலில், அங்குள்ள எல்லா மடங்களின் டிரஸ்டிகளின் கூட்டம் சமீபத்தில் நடைபெற்றது: "கதிர்காம மடாதிபதிகள் சங்கம்" அமைப்பதென்று ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேறியது.

கதிர்காமத்திலுள்ள மடங்கள் சமய முக்கியத்வம்வாய்ந்தவை என்றும், பல புனித சமாதிகள் அதில் இருப்பதாயும், கதிர்காம வழிபாடும், புராண படனமும், மடங்களில் நடப்பதாயும், இந்தச் சமாதிகளையும், தெய்வங்களையும் வேறு இடங்களுக்கு அகற்றுவது தர்மத்துக்கும் சாஸ்திரத்துக்கும் மாறுகுமென்றும், ஆகவே இம் மடங்கள் அப்படியே இருந்து வரவேண்டுமென்றும் அரசாங்கமும் பொதுமக்களும் ஒத்துழைக்கவேண்டுமென்றும் தீர்மானம் நிறைவேறியபின் பிரார்த்தனையுடன் கூட்டம் முடிந்தது.

# இளைஞர்களும் எழுத்தும்

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிடந்ததைக்கண்டு ஒரு பேச்சுமின்றி இருந்தார்கள் என வருத்தப்பட்டார். யார் எதைக் கூறினலும் கன்னித் தமிழுக்கு ஒரு தனிப் பண்பும் மரபும் இருக்கின்றதென்றும் காலதேச வர்த்தமானங்களுக்கேற்ப, மக்களுக்கான இலக்கியத்தை சமைக்கும் சக்தியும் திறனும் தமிழ் மொழிக்கு இருக்கவே இருக்கின்றதென்றும் கூறி இளம் எழுத்தாளரின் சிந்தனைக்கு விருந்தளித்திருந்தார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு. இ. மகாதேவன் (யாழ்ப்பாணம் தேவன்) பேசஎழுந்தாரோ இல்லையோ ஹாஸ்ய குண்டையே எடுத்து வீசி அமைதியாக இருந்த சபையைக் கலகலக்கச் செய்து விட்டார். இலக்கணப்புலிகளும் இலக்கிய மேதைகளும் தமது உயர்ந்த நிலையிலிருந்து இற(ர)ங்கி வரவேண்டுமெனவும் அதே வேளையில் இளம் எழுத்தாளர்கள் கொஞ்சம் ஏறிச் சென்று எழுத்துத் துறையில் ஒரு மத்திய பாதையை அமைக்க வேண்டுமெனவும் நகைச்சுவையுடன் வேண்டிக்கொண்டார்.

கட்டுரைப் போட்டிகளிற் பரிசு பெற்ற மாணவர்களுக்குத் திருமதி க. மகேஸ்வரி நவரத்தினம் பரிசில்களை வழங்கினர். செல்வன் பொ. சி. தவலிங்கத்தின் தலைமையில் நடைபெற்ற இவ்விழா மத்திய கல்லூரி ஆசிரியர்கள் தமிழ் வளர்ச்சியில் கொண்டுள்ள அபிமானத்தையும், மாணவர்களின் சலியாத ஊக்கத்தையும் எடுத்துக் காட்டும் வைபவமாகவும் விளங்கியது.

# இரத்தினக் கம்பளம்

பதுமன்

வரவு செலவுத்திட்ட விவாதம் பிரதிநிதிகள் சபையில் நடைபெற்றபோது பிரதம மந்திரியும் வேறும் சில எம்பீக்களும் நித்திரை கொண்டனர் எனப் பத்திரிகைகள் எழுதின. இதற்குக் காரணம் யாதாக இருக்கலாமென்று பதுமன் யோசித்தபோது எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா அதற்கான காரணத்தைக் கூறியிருக்கின்ருர். உப்புச் சப்பற்ற வரவு செலவுத்திட்டத்தைக் கீறிக் கிழித்தால் யாருக்குத்தான் தூக்கம் வராதென்பது டக்டர் பெரேராவின் கட்சி. டக்டர் இத்துடன் நின்றுவிடவில்லை. வரவுசெலவுத் திட்டம் உயிர் அற்ற வெறும் புள்ளிக் குவியல் எனவும், பத்து வருடத் திட்டம் மக்களை மோசடி செய்து ஏமாற்றும் ஒரு செப்படி வித்தை எனவும் அவர் எள்ளி நகையாடுகின்ருர். அப்படியானல் டக்டர் என். எம். பிரதமரானல் வெட்டிக் கிழித்துப் போடுவாராக்கும் என வாசகர்கள் முணுமுணுப்பதும் எனது காதிற் கேட்கின்றது. வியாதியையுங் கூறி மருந்தையும் சொல்லுகின்ருர் டக்டர். அவர் என்ன சொல்லுகிருர்: "நாம் நல்ல திட்டம் வகுத்துள்ளோம்; எங்கள் கட்சியிடம் திறமை இருக்கிறது; அறிவு இருக்கிறது; ஆற்றலும் இருக்கிறது. ஐயா, வாக்காளரே! எமக்கு ஒரு சந்தர்ப்பம் தாருங்கள். செயலில் காட்டுகிருேம்". பெரேரா மாத்தையா ஒரு பெரிய கூட்டத்தில் இப்படிக் கூறியிருக்கின்ருர்.

## 'டிங்கிரி டிங்காலே!'

ஈழநாட்டிலுள்ள சினிமாத் தியேட்டர்களின் நிர்வாகிகள், இரசிகர்கள் சௌகரியமாக இருந்து படம் பார்த்துவிட்டுப் போக வேண்டுமென்ற ஆசையினல் சில வசதிகளைச் செய்து வருகின்றனர். இது வரவேற்கத்தக்கதுதான். ஆனல் தியேட்டர் நிர்வாகிகளின் தயவிலே வியாபாரம் செய்யும் சில இளமட்டங்கள் இரசிகர்களுக்குத் தலைவலியூட்டுவதையே தொழிலாகக் கொண்டிருப்பது ஆத்திரமூட்டுவதாகும். படம் ஓடி இடைவேளை வருவதற்குச் சில நிமிஷங்களுக்கு முன்னதாகவே அந்தச் சில்வண்டுக் கூட்டத்தினர் தங்கள் சேட்டையை ஆரம்பித்துவிடுகின்றனர். சோடாப் போத்தல்களைக் கையிலே தூக்கிக் கொண்டு அவற்றை ஒன்ருேடு ஒன்றை உரோஞ்சி 'டிரிங்...டிரீங்...' என்ற அவலத் தொனியை அலறச் செய்யும்போது 'ஐயோ! கர்ணகடூரமாக இருக்கின்றதே' எனக் காதுகளைப் பொத்திப் பிடிக்கின்றனர், படம் பார்ப்பவர்கள். 'டிங்கிரி டிங்காலே!' கேட்டு அனுபவித்த காதுகளா இந்தச் சில்வண்டுச் சத்தத்தைக் கேட்டுச் சகித்துக்கொண்டிருக்கவேண்டும்.

தியேட்டர் நிர்வாகிகள் இந்த ஒழுங்கீனத்துக்கு விரைவில் ஒழுங்கான நடவடிக்கை எடுத்தேயாக வேண்டும்.

## தியேட்டரிலும் கூடலாம்!

சினிமாத் தியேட்டரைப் பற்றி எழுதும் போது எங்கள் பிரதிநிதிகள் சபைக் கட்டடத்தின் நினைவு ஓடோடியும் வருகின்றது. புதிதாக நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலுக்குப் பின் 151 எம். பீக்கள் வீற்றிருப்பதற்கு விசாலமான இடம் வேண்டும். இதற்காக சபைக் கட்டடத்தின் உட்புறத்தை மாற்றியமைக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த இடைக் காலத்தில் சனப் பிரதிநிதிகள் சபைக் கூட்டத்தைக் கொழும்பு நகரசபைக் கட்டடத்தில் நடாத்துவது பற்றி அரசாங்கம் ஆலோசித்து வருகின்றது. இந்தச் சின்ன விஷயத்துக்கு இவ்வளவு தூரம் அலைய வேண்டியதில்லை. படங்கள் ஓடாத பழைய தியேட்டர்களாய்ப் பார்த்து அங்கு கூடலாமே. அன்றேல் திறந்த வெளி அரங்குகளிலும் எம். பீக்கள் கூடிக் கொண்டாடலாம்.

# வடக்கு, கிழக்கு மாகாணங்களில் குடியேற்றம்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சு பொதுவாக வரவேற்கப்படுகிறது.

நாவலப்பிட்டி எம். பியான ஆர். ஈ. ஜயதிலகா, மேற்குறித்த யோசனையை முதல் முதலாக வெளியிட்டுள்ளதுடன், சமஷ்டிக் கொள்கையையும் ஆதரிப்பவர். ஆனல் இவ் விஷயமாகத் தமிழ் எம். பிக்கள், வெறும்பேச்சுடன் நில்லாமல் நாவலப்பிட்டிப் பிரதிநிதி போன்றவர்களுடன் கலந்து பேசி, காரியபூர்வமாக இந்த யோசனைக்குஆதரவுதேடுவதை மலைநாட்டுத் தமிழரும் வரவேற்பரென்று ஒரு கண்டித் தமிழ்த்தலைவர் என்னிடம் தெரிவித்தார்.

இன்று பார்லிமென்டிலே மலைநாட்டுத் தமிழருக்கு ஒரு பிரதிநிதியும் இல்லை. அவர்கள் பிரச்சினை என்ன என்பதே மற்றவர்களுக்குத் தெரியாது. பத்துலட்சத்துக்கு மேற்பட்ட தமிழர், உரிமை இழந்து, நாடற்றவராகத் தவிக்கின்றனர். அவர்கள் பிரச்சினையை மனிதாபிமானத்துடன் தீர்க்கச் சிறப்பாக வடக்கு, கிழக்கு மாகாணத் தமிழ்ப் பிரதிநிதிகள்தான் முன்வரவேண்டும். தேசிய சேமலாப நிதிவிஷயமாக சமஷ்டிக்கட்சித் தலைவர் மலைநாட்டுத் தமிழர் கட்சியை பலமாக ஆதரித்துப் பேசியது வரவேற்கத்தக்கதுடன், அவர்களது வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்ப்பதிலும் அவரும் அவரது கட்சியும் இனி அதிக ஊக்கம் காட்டும் என்று நம்பப்படுகிறது.

# ஜெனிவா மாநாடு அடுத்த புதன்கிழமை முடிவடையும்

ஜெனிவாவில் நான்கு வல்லரசுகளின் வெளிநாட்டு மந்திரிகள் மகாநாடு ஒன்பதாவது வாரமாக நடைபெறுகின்றது. ருஷிய வெளிநாட்டு மந்திரி திரு. குருேமிக்கோ சென்ற வாரம் பேர்லினில் ஒரு 'இடைக்கால ஒழுங்கு' நடைமுறையில் இருக்கும்போதும், தீர்வு காண்பதற்கு பேச்சு வார்த்தைகள் நடைபெறும்போதும் ருஷியா மேற்கு பேர்லினில் குறுக்கிடாது எனக் கூறினர்.

இவ்வாரத்தில் ஜெனிவா மகாநாட்டில் திரு. செல்வின் லோயிட் அதிக ஊக்கம் எடுத்து ஒரு தீர்வுகாண வழிவகுப்பார் என்றும், அடுத்த செப்டெம்பர் மாதத்தில் பெருந்தலைவர்களின் மாநாடு நடைபெறுவதற்கும் வகை செய்வார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜெனிவா மாநாடு சமரசத்தில் முடிந்தாலும் சரி, முடியாவிட்டாலும் சரி அடுத்த புதன்கிழமை மாநாட்டை முடித்துவிட ருஷியாவின் திரு. குருேமிக்கோவும், அமெரிக்காவின் திரு. ஹேர்ற்றரும் தீர்மானித்துள்ளனர்.

## உலக நிலை

### இந்தோனேஷியா

ஜனதிபதியின் ஆட்சியை இந்தோனேஷியாவின் பாராளுமன்றம் அங்கீகரித்துவிட்டது. அரசியல் கட்சிகளின் நடவடிக்கைகள்மீது 2-6-59 இல் விதிக்கப்பட்ட தடை உத்தரவு, கொள்கை அளவில் 1-8-59 தொடக்கம் நீக்கப்படும் என ஜனதிபதி சுகர்ணே அறிவித்திருக்கின்ருர். ஆனல் சுமாத்திரா, செலீபஸ் ஆகிய தீவுகளில் புரட்சிகள் அடங்காதபடியால் அங்கு தடை உத்தரவு நீடித்து வரும்.

### அமெரிக்க உபஜனதிபதி

ஐக்கிய அமெரிக்காவின் உபஜனதிபதியாகிய திரு. ரிச்சாட் நிக்ஸன் ருஷியாவுக்கு விஜயம் செய்து மாஸ்கோவில் அமெரிக்க தேசிய கண்காட்சியைத் திறந்து வைத்திருக்கின்ருர். போலந்துக்கும் விஜயம் செய்வாராம்.

# தமிழ் எழுத்தாளர் சங்கம் சென்னையில் மாநாடு

தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் ஏழாவது மாநாடு இன்றும் நாளையும் சென்னை இராஜாஜி மண்டபத்தில் நடைபெறும். திரு. மாஸ்தி வேங்கடேச ஐயங்கார் 1-8-59 மாலை 6மணிக்கு மாநாட்டைத் தொடங்கி வைப்பார். திரு. மீ. ப. சோமசுந்தரம் தலைமை வகிப்பார். திரு.சோ. சிவபாதசுந்தரம் வரவேற்புக்குழுத் தலைவராகப்பணியாற்றுகின்ருர் யாழ்ப்பாணத்திலிருந்து திரு. க. தி. சம்பந்தன் மாநாட்டுக்குச் சென்றுள்ளார்.

# வன்னிநாடும் வன்னியரும்

## வித்தியாலயத்தில் விரிவுரை

ஈழநாடு சரித்திர ஆராய்ச்சிக் கழகத்தின் ஆதரவில் 5-8-59 புதன்கிழமை மாலை 5 மணிக்கு வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் திரு. சி. எஸ். நவரத்தினம், 'வன்னி நாடும் வன்னியரும்' என்னும் பொருள் பற்றி ஒரு ஆராய்ச்சி விரிவுரை ஆற்றுவார்.

# இலங்கைக்குப் புதிய கவர்னர் ஜெனரல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அந்த விளம்பரங்கள் இரண்டு நாட்களாக அப்படியே உள்ளன. கொழும்பில் டட்லிக்கு ஆதரவு இருப்பதாயும், இன்றேல், இந்த விளம்பரம் முதல் நாளே கிழித்தெறியப்பட்டிருக்குமென்றும் கருதப்படுகிறது.

தமிழிலும் இந்த விளம்பரங்கள் இருந்தாலும், யு. என். பியின் மொழிக் கொள்கையில் மாறுதல்ஏற்பட்டதாகத் தெரியவில்லை. டட்லி தாராள மனப்பான்மையுள்ளவரென்றும், ஆனல் ஜே. ஆர். ஜயவர்த்தன யு. என். பியில் முக்கிய ஸ்தானம் வகிக்கும் வரையில், அதன் கொள்கை மாருதென்றும் ஒரு தமிழ்த்தலைவர் தெரிவித்தார்.

## கூட்டுப் பிரார்த்தனை ஆரம்பித்ததேன்?

"பாஸ்போர்ட்டுகள் என்பதே 25 வருஷங்களுக்கு முன்புதான் ஏற்பட்டன. அதற்கு முன் யார் எங்கு வேண்டுமானலும் செல்ல உரிமையுண்டு. ஆஸ்திரேலியாவில் முதலாவதாகச் சென்று யாரும் அங்கு கொடி போட்டு விடுவதால், அந்நாடு அவர்களுக்குச் சொந்தமாகி விடுமா? எல்லாநாடும் ஆண்டவனுக்கு அதாவது எல்லா மனிதருக்கும் சொந்தம்.

"பதினேழு வருஷங்களுக்கு முன் சுதந்திரம் கிடைத்தபோது, அரசியல் அதிகாரம் 'மெஜாரிட்டி' வகுப்பினர் கைக்கு மாறுவதாயும், அதனல் தமிழர் பிரார்த்தனை செய்து தெய்வத்திடம் உதவி கேட்க வேண்டுமென்றும் கொழும்பில் கூட்டுப் பிரார்த்தனையை ஆரம்பித்தோம். வலியவர்கள் கொடுமைப் படுத்தினல், மெலியவர்கள் பிரார்த்தனை செய்வதைத் தவிர வேறு வழியில்லை. சூரபதுமன் கொடுமை செய்து தேவர்களை சிறைப்படுத்திய போது, தேவர்கள் பிரார்த்தனை செய்தே விமோசனமடைந்தனர்என்றிவ்வாறுமதுரைமகா சன்னிதானம், கொழும்பு விவேகானந்தசபை அளித்த வரவேற்புக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டார். சேர் கந்தையா வைத்தியநாதன், திரு. கே. ஆழ்வாப்பிள்ளை இவர்கள் வரவேற்றுப் பாராட்டுரை கூறினர்.

## பார்லிமெண்டில் ஒலிப்பதிவு

இலங்கைப் பார்லிமெண்டில் எதிர்க்கட்சியில் முக்கியஸ்தர்கள் பேசுவதை ஒலிப்பதிவு செய்ய புதிய ஏற்பாடு செய்திருந்ததை எதிர்க்கட்சியினர் ஆட்சேபித்ததால் நிறுத்திவிட்டனர்.

சபை விவாதத்தின்போது மந்திரிகளும், அரசாங்கக்கட்சியினரும் சபைக்கு வருவதில்லை. நேரில் இருந்து ஏச்சும் பேச்சும் கேட்க விரும்பாமலே வருவதில்லை என்று ஒரு அரசாங்கக்கட்சிப் பிரதிநிதி தெரிவித்தார்.

சபை நடைமுறை விபரங்கள் 'ஹன்ஸார்ட்' முதல் பதிப்பின்மூலம் அறியவும் சற்றே தவக்கமாகும். உடனுக்குடன் தெரிந்துகொள்ள, ஒலிப்பதிவு பயன்படுமென்று கருதியே இந்த ஒழுங்கு செய்யப்பட்டது போலும். திரு. பீட்டர்கெனமன் பேசுகையில் ஒலிப்பதிவு செய்ததை மாலையில் டாக்டர் என். எம். ஆட்சேபித்ததாலே இது நிறுத்திவிடப்பட்டது.

## தலைமை ஆசிரியருக்குப் பாராட்டு

சென்ற பத்தாண்டுகளாகக் கொழும்பு விவேகானந்தவித்தியாலயத்தில் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றிய திரு.கே. வி. செல்லத்துரை, புங்குடுதீவு இந்துபோர்ட் பள்ளிக்கூடத் தலைமை ஆசிரியராக இடம் மாறிச் செல்கிருர். அவருக்கு விவேகானந்த சபையாரும், ஆசிரியர்களும் பிரியாவிடை விருந்துபசாரங்கள் நடத்திக் கௌரவித்தனர்.

# சுதந்திர மலாயாவில் தேர்தல் பரபரப்பு

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

மலாயா இந்தியர் காங்கிரஸ் தலைவர் திரு. வீ. தி. சம்பந்தன் 1954ல் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்று, ஆளும் கட்சியில் தொழில் மந்திரி பதவி வகித்து பிறகு சுகாதார மந்திரியாய் மாறியவர். இந்தத் தேர்தலில், ம. இ. காவுக்கு எத்தனை ஸ்தானங்கள் கிடைத்தாலும் போதும் என்ற போக்கில் நான்கே ஸ்தானங்களை வாங்கியிருக்கிறார். நெகிரி செம்பிலான் மாகாணத்தில் ம. இ. கா. ஆதரவில் நின்ற அபேட்சகர் திரு. ம. மஹிமாசிங், போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப் பட்டதை எண்ணி, பெருமையில் உப்பியிருக்கிறார் தலைவர் சம்பந்தன்.

தமது சொந்த ஊரான சுங்கை சிபுட் தொகுதியில் போட்டியிடும் மந்திரி சம்பந்தன் அவர்களை எதிர்த்து, மக்கள் முற்போக்குக் கட்சியைச் சேர்ந்த திரு. கா. அண்ணாமலை செட்டியாரும், ம. சீ. சங்கத்திலிருந்து பிரிந்த சுயேச்சை அபேட்சகரும் போட்டியிடுகிறார்கள்.

## சுதந்திரத் தந்தை

மலாயாவின் சுதந்திரத் தந்தையும், கூட்டணியின் ஐக்கியத்தை முன்னிட்டு, சில மாதங்களுக்கு முன் பிரதமர் பதவியை இராஜினமா செய்தவருமான துங்கு அப்துல் ரஹ்மான் தாம் பிறந்த மாகாணத்தில், கோலகெடா என்னுமிடத்தில் போட்டியிடுகிறார். அவரை எதிர்த்து, அகில மலாயா இஸ்லாமிய கட்சியைச் சேர்ந்த இஸ்லாமிய மதபோதகரே போட்டியிடுகிறார்.

மக்கள் முற்போக்குக் கட்சியின் பொதுக் காரியதரிசியும் மலாயாவின் பிரபல வழக்கறிஞரும், 97 அங்கத்தினர் கொண்ட சட்டசபையில், ஒரே ஒருஎதிர்க்கட்சிஉறுப்பினருமாயிருந்த திரு. டி.ஆர். சீனிவாசகம், பேரா மாகாணத்தின் தலைமைப் பட்டணம் ஈப்போவில், சோ. மு., கூட்டணி ஆகிய கட்சி அபேட்சகர்களுக்கு எதிராகப் போட்டியிடுகிறார். அவரது தமையனார் திரு. எஸ். பி. சீனிவாசகம் மெங்கிழம்பு (மகிழம்பு-ஆதியில் வந்த தமிழர்கள் இட்ட பெயர்) தொகுதியில் மேலே காணும் கட்சிக்காரர்களையே எதிர்த்துப் போட்டியிடுகிறார்.

சிலாங்கூர் மாகாணத்தின் பிரபல பங்சார்த் தொகுதியில், கோலாலம்பூர் நகரசபைக் கவுன்ஸிலரும், சிலாங்கூர் சட்டசபை அங்கத்தினரும், பிரபல தொழிற்சங்கவாதியுமான திரு. வி. டேவிட், சோ. மு. கட்சிசார்பிற் போட்டியிடுகின்றார். அவரை எதிர்த்து, கூட்டணி, ம. மு. க., சுயேச்சைக் கட்சிகளின் அபேட்சகர்கள் மூவர் போட்டியிடுகிறார்கள்.

### கட்சிகளின் விபரம்

| | | | |
|---|---|---|---|
| அம்னோ | — | ஐக்கியமலாயாதேசிய ஸ்தாபனம் | இவை மூன்றும் "கூட்டணி" |
| ம. இ. கா. | — | மலாயன் இந்தியர் காங்கிரஸ் | |
| ம. சீ. ச. | — | மலாயா சீனர் சங்கம் | |
| சோ. மு. | — | சோஷலிஸ முன்னணி. | |
| ம. மு. க. | — | மக்கள் முற்போக்குக் கட்சி. | |
| அ. ம. இ. க. | — | அகில மலாயா இஸ்லாமியக் கட்சி. | |
| ந. | — | நகரா கட்சி. | |
| சு. | — | சுயேச்சை. | |
| ம. | — | மலாயன் கட்சி. | |

## தேர்தல் கூட்டங்கள்

மொத்தத்தில், ஒவ்வொரு கட்சிக்காரரும், இரவுநேரங்களில் கூட்டங்கள் கூட்டி, தம் தம் பிரதாபங்களை விரிவாக விவரித்தும் ஒருவர் மற்றொருவரைத் தாக்கியும் பொது மக்களைத் திக்குமுக்காடச் செய்துகொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறாக, புதிதாகச் சுதந்திரம் அடைந்த மலாயாவின் பாராளுமன்றத் தேர்தல் ஒரே பரபரப்புடன் போய்க்கொண்டிருக்கிறது. எங்கே, எப்படிப் போய்முடியுமென்று அடுத்த கடிதத்தில் சந்தித்துப் பார்ப்போம்.






# இவ்வாரம் எப்படி?

—எம். எஸ். மகேஸ்வரன்—

| | | | |
|---|---|---|---|
| கே. | | | |
| | இவ்வாரக் கிரகநிலை | | சூரி புத. |
| | | | செ. வெ. |
| சனி | | வியா. | ராகு |

**இங்கு தரப்பட்டுள்ள இராசிகளின் பலன்கள் யாவும் பொதுப் பலன்களாதலால் இவற்றின் தன்மைகள் ஒவ்வொருவரின் தசா புத்திகளின் தன்மைக்கேற்றவாறு மாற்றம் அடைவனவாகும்.**

(1-8-59 — 7-8-59)

**மேடம்:** (அச்சுவினி, பரணி, கார்த்திகை 1-ம் பாதம்) இவ்வாரத்திற் புகழும் உத்தியோக உயர்வும் ஏற்படும். வழக்கத்திலும் பார்க்க வேலை கூடுதலாயிருக்கும். சிறு சுகவீனங்களுக்கு இடமுண்டு. மனச்சமாதானம் இருக்கமாட்டாது.

**இடபம்:** (கார்த்திகை 2, 3. 4-ம் பாதம், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2-ம் பாதம்) இவ்வார முற்பகுதியில் பண நஷ்டமும், சுகக்குறைவும் உண்டு. அன்னியர்களின் உதவிகளினால் வருமானம் அதிகரிக்கும். புதிய கருமங்கள் செய்வதால் இலாபம் ஏற்படும்.

**மிதுனம்:** (மிருகசீரிடம் 3, 4-ம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3-ம் பாதம்) பொது மக்களின் உதவியால் தொடங்கிய கருமங்கள் நிறைவேறும். குடும்பத்தில் நன்மையான கருமங்கள் நடைபெறும். பெண்களின் உறவு செலவுகளை அதிகரிக்கும்.

**கடகம்:** (புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயிலியம்) இவ்வாரத்தில் இனத்தவர்களுக்குள் சில சச்சரவுகள் தோன்றும். உத்தியோக மாற்றமும் இடமாற்றமும் ஏற்படும். மனத்தில் சோர்வு தட்டும்.

**சிங்கம்:** (மகம், பூரம், உத்தரம் 1-ம் பாதம்) இவ்வார முற்பகுதி மகிழ்ச்சியுடையதாக இருக்கும். கொடுக்கல் வாங்கல் மூலம் பகை ஏற்படலாம். தாயாரால் மனக்கவலைக்கு இடமுண்டு. நண்பர்கள் அதிக உதவியாய் இருப்பர்.

**கன்னி:** (உத்தரம் 2, 3, 4-ம் பாதம், அத்தம், சித்திரை 1, 2-ம் பாதம்) நினைத்த கருமங்கள் பிரயாசையின் பேரில் நிறைவேறும். தேகசுகம் சிறிது காலத்துக்குக் குறைவடையும். பெண்களின் நட்பினால் பொருள் அழிவு ஏற்படும்.

**துலாம்:** (சித்திரை 3, 4-ம் பாதம், சுவாதி, விசாகம் 1, 2, 3-ம் பாதம்) நண்பர் அல்லது இனத்தவருடன் விரோதம் ஏற்படக்கூடும். உத்தியோக உயர்வும் பெரியோர் மதிப்பும் கிடைக்கும். மங்களமான நிகழ்ச்சிகளிற் பங்குபற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** (விசாகம் 4-ம் பாதம், அனுஷம், கேட்டை) கொடுக்கல் வாங்கல் மூலம் மனக்கவலை ஏற்படும். புறங்கூறுபவர்களைப் பற்றிக் கவனமாயிருத்தல் வேண்டும். இடைஞ்சல்களிலிருந்து நீங்குவதில் சிரமப்படுவீர். கமத்தொழில் மூலம் இலாபம் ஏற்படும்.

**தனுசு:** (மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் பாதம்) அரச சேவையில் கஷ்டங்கள் தோன்றி மறையும். எதிர்பாராத முறையில் சில கருமங்கள் ஏற்படும். அன்னியர் நட்பு அதிகரிக்கும். தொழிற் பேறு உண்டாகும்.

**மகரம்:** (உத்தராடம் 2, 3, 4-ம் பாதம், திருவோணம், அவிட்டம் 1, 2-ம் பாதம்) இவ்வார முற்பகுதியில் எதிர்பாராத கருமங்கள் நடைபெறும். பெண்களினால் சில தொல்லைகள் தோன்றும். அன்னியர் நட்புக் கிடைக்கும். சத்துருக்களால் தீங்கு நேரிடினும் பின்னர் நன்மையே தரும்.

**கும்பம்:** (அவிட்டம் 3, 4-ம் பாதம், சதயம், பூரட்டாதி, 1, 2, 3-ம் பாதம்) புதிய கருமங்களில் ஈடுபடுவதால் நன்மைகள் ஏற்படும். முயன்றுழைப்பதோடு புதுப் பொறுப்புக்களையும் நீர் ஏற்க வேண்டி வரும். உத்தியோக முறையில் சில மாற்றங்களுக்கு இடமுண்டு. நண்பர்களும் உறவினரும் அன்புடன் உதவிபுரிவர்.


**மீனம்:** (பூரட்டாதி 4-ம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி) மகிழ்ச்சிகரமான கொண்டாட்டங்களில் ஈடுபடுவீர், நண்பர்கள் அதிக உதவியாயிருப்பர். களியாட்டங்களில் மனம் அதிகமாக ஈடுபடும். பகைவர் மூலம் சில தொந்தரவுகளுக்கு இடமுண்டு.

# சிறுவர் பகுதி

## தெரிந்து கொள்ளுங்கள் :



உலகத்தில் ஓர் இனமாக மனிதன் தோன்றியது சமீப காலத்திலேயாயினும், அவன் மற்ற இனங்களை யெல்லாம் அடிமைப்படுத்தி, நோய்களிற் பலவற்றை வென்றும் விட்டான். 20ஆம் நூற்றுண்டின் மத்திய பாகத்தில், 200,000 வருடங்களுக்குப்பின், மனித இனம் 2,000,000,000 தொகையினரைக் கொண்டுள்ளது. இன்னும் 30 வருடங்களில் இத்தொகை இரண்டுமடங்காகப் பெருகும். நவீன மருத்துவ சாஸ்திரமே இதற்குக் காரணமென நிபுணர்கள் கூறுகின்றனர்.



பியூனஸ் ஏயர்ஸ் என்னும் இந்நகரம் லத்தீன் அமெரிக்காவின் மிகப்பெரிய பட்டினமாகும். அத்துடன் நிலமத்தியவரைக்குத் தெற்கேயுள்ள பெரிய நகரமுமாகும். இதன் ஜனத்தொகை 5,000,000. 16ஆம் நூற்றுண்டில் இஸ்பானியரால் நிறுவப்பட்ட இந்நகரம் இப்பொழுது ஒரு முக்கிய வியாபார, கடற்றுறைப் பட்டினமாக விளங்குகிறது. இஸ்பானியரையும், இத்தாலியரையும் பிரதான இனங்களாகக் கொண்டுள்ள இந் நகரத்தில் ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர், ஜேர்மனியர், யூதர், யூகோஸ்லேவியர், போலாந்தியர், லெபானியர் முதலியோரும் உள்ளனர்.

## இயற்கை இன்பம்

நா. இரஞ்சிதமணி (ப. எண்: 109)

அதிகாலையில் கூவும் சேவல் நம்மை நித்திரையினின்றும் எழச்செய்கின்றது. காலைச் சூரியனின் பொற்கிரணங்கள் பலவித வர்ணங்களை எம் கண்களுக்குக் காட்சியாகத் தந்து எண்ணத்திலே இன்பமூட்டுகின்றன. குளங்களில் தாமரை மொட்டுக்கள் விரிந்து தம் சிவந்த முகத்திலை எம்மை வரவேற்கின்றன. என்னே இயற்கையின் வனப்பு! இதுமட்டுமா? பச்சைப் பசும் புல்தரைகள் மரகதக் கம்பளம் போலல்லவா காட்சி அளிக்கின்றன. பசுக் கூட்டங்கள் புல்தரைகளை நோக்கிச் செல்வதும், குயிலினங்கள் கூவுவதும், காகங்கள் பறப்பதும், வானம் பாடிகள் பாடுவதும் இயற்கையின் இன்பத்தைப் பன்மடங்காக்குகின்றனவே.

காலைக் காட்சி மட்டுமல்ல மாலைக் காட்சியும் மனத்திற்கு மகிழ்ச்சி யூட்டுகின்றது! சூரியன் தன்னுடைய பொற்கதிர்களுடன் கடலுள் மறைகிருன். கடல் கொந்தளிக்கிறது. சந்திரன் வெளிக் கிளம்புகிருன்; நிலவொளி பரவுகிறது. நட்சத்திரங்கள் "மினுக் மினுக்" கென்று மின்னுகின்றன. இவை கவிஞனின் இதயத்தில் இன்பக் கற்பனையை மூட்டுகின்றன.

மலைகளில் வழிந்தோடும் ஆறுகளும், கடல்களும் குளங்களும், காடுகளில் வசிக்கும் மிருகங்களும் இயற்கை வனப்பை அதிகரித்து விடுகின்றன. நெளிந்து வரும் மின்னலும், மழை பொழிந்த பின் இலைகளில் நின்று வைரம்போல் பிரகாசிக்கும் மழைத்துளிகளும் எம் கண்களுக்கு மிக அழகான காட்சியாகின்றன. ஆகவே "இயற்கைக் காட்சிகள்" மக்கள் தமது துன்பத்தை மறந்து இன்பம் அடையத் துணைபுரிகின்றன எனலாம்.

## புதிய மருமக்கள்

பெயர்களும், பதிவு எண்ணும்.

373. க. இந்திரகுமார்,
496, காங்கேசன் துறை வீதி,
யாழ்ப்பாணம்.

374. பூ. தேவராசா,
கலட்டி,
மாவிட்டபுரம்,
தெல்லிப்பளை.

375. ஏ. எல். எஸ். ஹமீது,
101/2 மீருனியா தெரு,
புதுக்கடை,
கொழும்பு 12.

376. ம. குணரஞ்சன்,
மே/பா பி. எஸ். அருளையா,
'கலாநிதி,'
சாவகச்சேரி.

செல்வக்குழந்தைகளே!

உங்களிற் சிலர் தொடர் கதைகள் எழுதி அனுப்பியிருக்கின்றீர்கள். உங்கள் ஆர்வத்தைப் பாராட்டுகின்றேன். ஆனல் கதைகள் நன்ருக இல்லாதபடியால் நான் அவற்றை வெளியிடுவதில்லை. சின்னஞ்சிறு கதைகளையும் கட்டுரைகளையும் எழுதப் பழகுவதே நல்லது.

நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் போட்டிக்குரிய விடைகளை இங்கு வெளியிட்டிருக்கின்றேன். அதிர்ஷ்டசாலிகள் யார் என்பதை அடுத்தவாரம் அறிவீர்கள்.

—சின்னமாமா

## 'ஈழநாடு' சிறுவர் போட்டி :1

விடைகள்

1. நெருப்பு
2. தெரு
3. சாக்கு
4. தலைமயிர்
5. தீக்குச்சி

* * *

பரிசுபெறுபவர்களின் பெயர்கள் ஈழநாடு 8-8-59 இதழில் வெளியாகும்.

## பொல்லாத சுப்பு நல்லவனுன விந்தை

க. முருகையா (ப. எண்: 52)

கண்ணப்பன் ஓர் ஏழைக் குடியானவன். அவனுக்கு சுப்பு என்ற ஒரு மகன் இருந்தான். அவன் பொல்லாத குணமுடையவனுக வளர்ந்து வந்தான். பாடசாலைக்குப் போவதாக அவன் வீட்டில் சொல்லிவிட்டு விளையாடச் சென்றுவிடுவான். அவனுடைய வகுப்பு ஆசிரியர் அவனைத் திருத்த எவ்வளவோ முயற்சி செய்தும் அவனைத் திருத்த முடியவில்லை. ஆசிரியருக்கு இது பெரும் கவலையாகி விட்டது.

ஒருநாள் அவருக்கு ஒரு யோசனை உதித்தது. அதன்படி அவர் ஒரு பிச்சைக்காரனைப்போல வேடம் தரித்து சுப்புவின் வீட்டுக்குப் போய் 'அம்மா, தாயே, நான் கையில்லாதவன் பிச்சைபோடுங்கள்' என்று கேட்டார். அப்போது சுப்பு சிறிதளவு அரிசியை எடுத்துவந்து போட்டான். போடும் போது அப்பிச்சைக்காரனின் கை ஊனமாயிருப்பதைக்கண்டு 'ஏய் பிச்சைக்காரா ஏன் உனக்குக்கை ஒன்று ஊனமாக இருக்கிறது' என்று கேட்டான். அதற்கு அவர் 'தம்பி நான் சிறுவயதில் மிகவும் பொல்லாதவனுக இருந்தேன், ஒழுங்காகப் பாடசாலைக்குப் போவதில்லை. விளையாட்டிலேயே காலத்தை வீணுகக் கழிப்பேன். ஒருநாள் நான் ஒரு மாட்டின் வாலைப்பிடித்து இழுத்தேன். அம்மாடு என்னைக் கொம்பால் இடித்து ஒரு பள்ளத்தில் தள்ளியது. அன்று தொடக்கம்தான் நான் இப்படி ஒரு கையிழந்து, ஒருகைநீட்டிப் பிச்சையெடுக்க வேண்டி வந்தது' என்ருர்.

இவற்றை எல்லாம் கேட்ட சுப்பு தனக்கும் அப்படி நேர்ந்துவிடுமோ என்ற பயத்தினல் அன்றிலிருந்து தன் பொல்லாத குணங்களை நீக்கி நல்லவனுக மட்டுமல்ல, வல்லவனுகவும் மாறினன்.

## சிலந்தி

—(அழகனுர்)—

[பதிவு எண் 127]

சின்னச் சின்ன நூல்இழை
சேர்த்துச் சேர்த்து நொடியிலே
சின்ன வீடு ஒன்றினை
சிலந்திப் பூச்சி கட்டுதாம்!

மண்ணும் கல்லும் இன்றியே
மாடி வீடு கட்டுதாம்;
எண்ணிப் பார்த்து வட்டமாய்
இனிய வீடு கட்டுதாம்!

வெண்மை யான நூலினல்
விந்தை வீடு கட்டுதாம்;
மண்ணில் உள்ள மானிடம்
மயங்கும் வண்ணம் கட்டுதாம்!

ஓடி ஓடி வேகமாய்
உயர்ந்த வீடு கட்டுதாம்;
கூடி வந்து நீங்களும்
கண்டே இன்பம் கொள்ளலாம்!

## 'ஈழநாடு' சிறுவர் பகுதி

★ ஈழநாடு சிறுவர் பகுதியில் ஆறு வயது தொடக்கம் பத்தொன்பது வயது நிரம்பிய அனைவரும் அங்கத்தவராகச் சேர்ந்து கொள்ளலாம்.

★ அங்கத்தவராகச் சேரவிரும்புவோர் இங்குள்ள விண்ணப்ப பத்திரத்தை நிரப்பி அனுப்பவேண்டும். இந்த இதழில் வெளியாகியுள்ள பத்திரம் 8-8-59க்குப் பின்னர்செல்லுபடியாகாது. ஒவ்வொரு வாரமும் இங்கு வெளியாகும் பத்திரத்தை அடுத்துவரும் சனிக்கிழமைக்குள் உபயோகித்துக் கொள்ளவும்வேண்டும். ஒருவர் ஒருமுறை அங்கத்தவர் பத்திரத்தை நிரப்பி அனுப்பினல் போதுமானது.

★ ஈழநாடு அலுவலகத்திலிருந்து அங்கத்தவர் பதிவுத்தாள் கிடைத்தபின்னர்தான் ஈழநாடு சிறுவர் பகுதிக்கு அங்கத்தவர் தங்கள் கதைகளையும், கட்டுரைகளையும், கருத்துக்களையும் அனுப்ப வேண்டும். அவற்றுள் நல்ல கதைகளும், கட்டுரைகளும் சிறுவர் பகுதி யில் வெளியிடப்படும்.

★ சிறுவர் பகுதி சம்பந்தமான சகல கடிதப்போக்குவரத்தும் பின்வரும் விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும்:

சின்ன மாமா,
ஈழநாடு சிறுவர் பகுதி,
தபாற்பெட்டி எண் 49,
யாழ்ப்பாணம், இலங்கை.

இங்கே வெட்டவும்

## ஈழநாடு சிறுவர் பகுதி

விண்ணப்பப் பத்திரம்

( 1-8-59 )

அன்புள்ள சின்னமாமா அவர்களுக்கு
வணக்கம்,

ஈழநாடு சிறுவர் பகுதியில் என்னை ஓர் அங்கத்தவராகச் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

பெயர்.

விலாசம்...

கையொப்பம்

பெற்ருர் அல்லது
ஆசிரியரின் கையொப்பம். வயது............

இங்கே வெட்டவும்

# பிரச்சினைகள் தீர்க்கப்பட்டால் வாழ்க்கை இனிமையாக இராது

## அரசியல் வாதிகள் வெறும் அப்பாவிகள்! அவர்கள் கவலை எல்லாம் கட்சி பற்றியதே

— வினோபாஜி —

பம்பாயிலிருந்து வந்த ஒரு பேராசிரியர் "பூதானத்தினால் எல்லாப் பிரச்சினைகளும் எவ்வாறு தீரும்?" என்று கேட்டார்.

சமுதாயத்தில் தீர்க்கப்படாத பிரச்சினைகள் இருந்தாலல்லது வாழ்க்கை இனிமையாகவே இராது. ஆகையால் சில பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருக்கத்தான் வேண்டும், இருக்கத்தான் செய்யும். பகவான் இராமச்சந்திரர் வந்தார், ஒருபெரிய பிரச்சினையைத் தீர்த்து விட்டுப் போனார்; ஆனால் மற்றவை யெல்லாம் அப்படியேதானிருந்தன. பிறகு கிருஷ்ணபகவான் அவதாரம் எடுக்க வேண்டியதாயிற்று, அவர் எவ்வளவோ பாடுபட்டும் சில பிரச்சினைகள் அவராலும் தீர்க்கப்படாமல் இருக்கவே செய்தன. புத்தபகவான் வந்தார்; நாற்பதாண்டுகள் சுற்றித் திரிந்து சில பிரச்சினைகளைத் தீர்த்தார். பிறகும் பல அப்படியே இருந்தன. இறுதியில் காந்தியடிகள் வந்து சில பிரச்சினைகளைத் தீர்த்துவிட்டுப் போய்விட்டார். பிறகும் பிரச்சினைகள் இருக்கவே செய்கின்றன. ஆகையால் எவரும் எல்லாப் பிரச்சினைகளையும் தாமே தீர்க்கப்போவதாகச் சொல்ல முடியாது. ஒருவர் அவ்வாறு சொன்னால், அது வெறும் அகந்தையினால் எழுந்த பேச்சு, அப்படி ஒன்றும் நடவாது என்று கருதவேண்டும்.

### எடுத்துக் கூறுகிறேன்

நான் ஏதோ பிரச்சினையைத் தீர்க்கப்போவதாக எண்ணியதே இல்லை. ஆனால் சமுதாயம் உள்ள நிலைமையை நான் எப்பொழுதும் கண்முன் நிறுத்திப் பார்ப்பதுண்டு. அப்பொழுது என்முன் தோன்றியவைகளை மக்களுக்கு எடுத்துச் சொன்னேன். இதனால் நான் ஏதோ நிலப் பிரச்சினையைத் தீர்க்கக் கிளம்பியிருப்பதாகக் கொள்ளக்கூடாது. நான் இங்கே (காஷ்மீரம்) வந்திருப்பதால் இவ்விடத்திய யாத்திரையை முடித்துக்கொண்டு பஞ்சாப் பிற்குத் திரும்புவது நிச்சயமா? இங்கிருந்து பஞ்சாப்பிற்கும் திரும்பலாம்; திபெத்திற்கும் போகலாம்; ருஷியாவிற்கோ, பாகிஸ்தானிற்கோ, நேரே மேலுலகத்திற்கே வேண்டுமானாலும் போகலாம். இந்தக் கடைசி ஊருக்குப் போனால் பிறகு எனக்குப் பிரச்சினையே இராது, எல்லாம் தீர்ந்துவிடும்! ஆகவே, நானாவது பிரச்சினையைத் தீர்ப்பதாவது! நான் செய்வதெல்லாம் மக்களுக்கு விஷயங்களை எடுத்துச் சொல்லுவதோடு சரி. நான் சொல்லுவதை விளங்கிக்கொள்கிறவர்கள் இதற்கு உதவ முன்வருகிறார்கள்.

### அன்பும் இணக்கமும்

நான் தொடங்கியிருப்பது நிலக்காரியமல்ல, நிலமென்பது ஒரு சாட்டு, நான் செய்யத் தொடங்கியிருப்பது, மக்களிடையே அன்பும் இணக்கமும் ஏற்படச்செய்யும் முயற்சி. ஓர் உருதுப் பத்திரிகை, "வினோபா இந்து—முஸ்லீம் ஒற்றுமைக்காகப் பாடுபட்டால் எவ்வளவோ பயனுண்டு" என்று எழுதியிருக்கிறது. "நான் ஏற்றுள்ள பணி ஒற்றுமையை, மன ஒருமையை உண்டாக்கும் பணியே" என்பதை அந்த ஆசிரியர் உணரவில்லை. நான் மக்கள் உள்ளங்களை இணைக்கவே விரும்புகிறேன். அதற்கென இக் காலத்திய தேவையும், அடிப்படையான விஷயமுமான நிலப் பிரச்சினையை எடுத்துக்கொண்டிருக்கிறேன். நான் இவ்வாறு செய்யாமல் ஆங்காங்கு சென்று, "சகோதரர்களே, சண்டை சச்சரவு வேண்டாம் எல்லோரும் அன்பாயிருங்கள்" என்று சொல்வதோடு நிறுத்திக் கொண்டிருக்கலாம். இவ்வாறு எவ்வளவோ பெரியார்கள் இதற்குமுன் தோன்றி உபதேசித்திருக்கிறார்கள்; இம்மாதிரியான உபதேசங்கள் மக்கள் காதில் எவ்வளவோ விழுந்திருக்கின்றன. நான் இவ்வாறு சொல்லுவதோடு நிறுத்தாமல் மக்கள் கேட்பதோடு நான் திருப்தியுறாமல் "உங்கள் அன்பிற்கு அறிகுறியாகக் காரியமும் செய்யுங்களே"ன்றும் சொல்லுகிறேன். மக்கள் தானம் செய்கையில் நான் சொல்லுவது அவர்களுக்குப் பிடித்திருக்கிறது, அவர்கள் மனதில் பதிந்துவிட்டது என்பது நிருபணமாகிறது.

இந்தியாவிலுள்ள முக்கிய பிரச்சினை மக்களின் உள்ளங்களை ஒன்றிணைப்பதே. இங்கே எத்தனையோ சமூகங்கள். அவை ஒவ்வொன்றிலும் எவ்வளவோ மதங்கள், சமயங்கள். இவை இவ்வாறு இருப்பதனால் ஏழு சுரங்களினால் இனிய இசை உருவாவதைப்போல் இந்திய வாழ்க்கை அழகுபெற்றுவிளங்க இடமிருக்கிறது. சுரங்கள் ஒன்றோடொன்று முரண்படாமல் இணைந்துபொருந்தி அமைய வேண்டும். அப்பொழுதுதான் இசை பிறக்கும். பல சமயங்களும், சமூகங்களும் இங்கேயிருப்பது நாட்டிற்குக் குறையல்ல, சிறப்புத்தான்.

### அரசியல் குழப்பங்கள்

இங்கே உலகெங்கிலிருந்தும் எத்தனையோ சாதியினர், வகுப்பார், இனத்தார் வந்து குடிபுகுந்திருக்கிறார்கள். லோகமான்யதிலகர் நம் முன்னோர் வடதுருவத்திலிருந்து இங்கே வந்தவர்கள் என்று சொன்னார். வடதுருவத்தில் ரிஷிகளின் தேசம் இருந்தது. அதுவே இப்பொழுது ருஷியா எனப்படுகிறது. இந்தக் காஷ்மீரம் காசியமுனி வாழ்ந்த இடம். இக் காஷ்மீரத்திலிருந்து அங்கே காஸ்பிய சமுத்திரம் வரை காசிய ரிஷியின் கொடி பறந்தது. இதே வகையில் தென்னிந்தியா முழுவதிலும் அகஸ்திய முனிவரின் ஆட்சி நிலவிற்று. உலகின் பல பகுதிகளிலிருந்தும் மக்கள் இங்கே வந்தார்கள். நாம் அவர்களையெல்லாம் நம்மோடு சேர்த்துக் கொண்டோம். வந்த புதிதில் சிறிது குழப்பம் இருக்கும், தகராறு நடக்கும். சிறிது காலத்தில் எல்லாம் மறந்துபோக ஒற்றுமையாய், அன்பாய் சேர்ந்து வாழத்தொடங்கிவிடுவார்கள். இங்கே கிறிஸ்தவர்கள் வந்தார்கள்; முஸ்லீம்கள் வந்தார்கள். ஆனால் அவர்கள் எல்லோருமே காலப்போக்கில் இந்தியர்கள் ஆகிவிட்டார்கள். இந்துக்களும், முஸ்லீம்களும், கிறிஸ்தவர்களும் சகோதரர்களைப்போல் வாழலானார்கள். ஆனால், பிறகு வந்த ஆங்கிலேயர் இங்கே சிண்டு முடிந்துவிடும் பணியில் ஈடுபடவே சண்டைகளும் சச்சரவுகளும் தலையெடுத்தன. அரசியல் குழப்பங்கள் தோன்றி மக்களின் உள்ளங்கள் பிளவுபட்டன.

### பாவம்! அப்பாவிகள்

நான் எவ்வளவோ அரசியல் வாதிகளுடன் பேசிப் பழகியிருக்கிறேன். இந்த அரசியல் வாதிகளைப்போன்ற அப்பாவிகளைப் பார்த்ததே இல்லை! அவர்கள் குறுகிய மனமுள்ளவர்கள். தொலைவிலுள்ளவை அவர்கள் கண்ணுக்குத் தெரிவதே இல்லை. அவர்களுக்குத் தம் தம் கட்சியின் கவலையே கவலை. அவர்கள் சிந்தனையெல்லாம் அதைப்பற்றியேதான். ஒருவர் இந்துக்களைப்பற்றியே எண்ணிக்கொண்டிருக்க, இன்னொருவர் முஸ்லீம்கள் நலனிலேயே கருத்தாயிருக்கிறார். இன்னொருவர், "ஆகா" மத்திய யுகத்தில் நாம் எவ்வளவு சிறப்பாக இருந்தோம்! என்று எண்ணியெண்ணி ஏங்குகிறார். அவர்களது அறிவில் இம்மாதிரியான எண்ணங்கள் நிரம்பியிருப்பதால் புதிய கருத்து எதற்கும் அங்கே இடமிருப்பதில்லை. சிறு பிள்ளைகள் பிடித்த பிடிவாதத்தை விட மறுப்பதைப்போல இவர்களும் தாம் பிடித்த முயலுக்கு மூன்றே காலென்று சாதிக்கப்பார்ப்பவர்கள்.

இவர்களை அறிஞர்கள் என்கிறார்கள். ஆனால் இவர்கள் அறிவு ஒரு வரம்பிற்குள் அடங்கியிருப்பதே.

# குடிசைக் கைத்தொழிற் காட்சி மக்களிடையே ஒரு புத்துணர்ச்சி

— நமது நிருபர் —

மட்டக்களப்பு

மட்டக்களப்பு மாவட்டத்திலே பல நூற்றாண்டுகளாக வளர்ந்து வந்த பல்வேறு குடிசைக் கைத்தொழில்கள் அந்நிய நாட்டுப் பொருள்களின் போட்டியாலும், கைத்தொழில் செய்வதிலிருந்த ஆர்வக் குறைவினாலும் பெரும்பாலும் அருகிவிட்டன என்றே கூறவேண்டும்.

இந்த வேளையில் இப்பகுதி மக்களை—நெசவு, கயிறு, தும்பு வேலைகள், களிமண் பொருள்கள் செய்தல், வெண்கல பித்தளைப் பொருள்கள் செய்தல் ஆகிய பல துறைகளில் ஊக்கப்படுத்த அரசாங்கம் சென்ற பத்தாண்டுகளாகச் செய்த முயற்சிகள் பெரும் பயனளித்துள்ளன என்பதை சென்ற வார இறுதியில் நடைபெற்ற குடிசைக் கைத்தொழிற் காட்சி நன்கு நிரூபித்துவிட்டது. இவ்விழாவை கிராமாபிவிருத்தி இலாகா அதிபர் திரு. சமரசிங்க அவர்கள் அரசினர் சிரேஷ்ட கல்லூரியில் ஆரம்பித்து வைத்தார்.

இக்காட்சியில் வைக்கப்பட்ட பொருள்களின் கலைநுட்பத்தை எவ்வளவு புகழ்ந்தாலும் தகும். உள்நாட்டு ஊதுபத்தி கூடக் காட்சியிலிருந்ததென்றால் கேட்பானேன்!

காட்சியில் பலவித பொருள்களைச் செய்யும் முறையையும் விளக்கி, மக்களிடையே ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத்தினார்கள்.

இவற்றுடன் சனி, ஞாயிறு, ஆகிய இரு தினங்களிலும் மட்டக்களப்பு நாட்டுக்கூத்துகளாலும், பாடசாலை மாணவிகளின் கிராமிய நடனங்களாலும் மக்களை மகிழ்வித்தார்கள்.

குடிசைக் கைத்தொழில் பகுதியாரும், கிராமாபிவிருத்தி உத்தியோகத்தர்களும் இவ்விழாவைச் சிறப்பிக்கச் செய்த முயற்சி பாராட்டுதற்குரியது.

### தமிழரசுக்கட்சிக் காரியாலயம்

சமீபத்தில் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்கள் தமிழரசுக் கிளைக்காரியாலயத்தை பெரிய வீதியில் திறந்து வைத்துப்பேசினார்கள். "ஐரிஷ் மக்களைப் போலத் தமிழர்களும் சுய உரிமைபெறப் போராட வேண்டும்" என்று குறிப்பிட்ட அவர் பிளவுபட்ட சிங்கள அரசாங்கத்தை எதிர்த்துப் போராடுவது கஷ்டமான காரியமல்ல வென்று சுட்டிக்காட்டினார்.

### தண்ணீர்த்தட்டுப்பாடு

வெயில் காலம் நீள, நீளத் தண்ணீர்ப் பஞ்சமும் நகரத்தில் அதிகரிக்க ஆரம்பித்திருக்கிறது. குழாய்களில் குறிப்பிட்ட சில மணித்தியாலங்களிலேயே நீர் பெறக்கூடியதாகவிருக்கிறது. இதனால் பொதுமக்கள் பெருங் கஷ்டத்திற்குள்ளாகி வருகின்றனர். இக்கஷ்டத்தைப் போக்கக் கடந்த மூன்றாண்டுகளிலும் எவ்வித நடவடிக்கைகளும் மத்தியஅரசாங்கத்தால் கையாளப்படவில்லை. இத்தொல்லை சகிக்க முடியாமல் பலர் கிணறு வெட்டும் முயற்சியில் இறங்கியிருக்கிறார்கள். இத் தண்ணீர்ப் பஞ்சத்துடன் கச்சாறும் தனது கைவரிசையைக் காட்ட ஆரம்பித்திருக்கிறது.

### அகில இலங்கைத் தமிழாசிரிய சங்கம்

அகில இலங்கைத் தமிழாசிரிய சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் அடுத்த மாதம் 8-ந் திகதி மட்டக்களப்பில் நடைபெறவிருக்கிறது. அக்கூட்டத்தில் அடுத்த ஆண்டுக்கான திட்டங்கள் தயாரிக்கப்படுவதுடன் புதுவருட உத்தியோகஸ்தர்களும் தெரிவு செய்யப்படுவார்கள். வழக்கம்போல் ஆசிரியமணிப் பட்டமளிப்பு வைபவமும் இடம் பெறுமெனத் தெரிகிறது.


## யாழ்ப்பாணம் ஐக்கிய இலாப நிதி

— 1918-ஆம் ஆண்டு தாபிதமானது —

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 616313,00
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

**பங்குப்பணங்கட்டுமுறை**

மாதமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100-00 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்றுவரவு**

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமாகில் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்**

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்**

கொழும்பிலுள்ள 'நாஷனல்' வங்கியிலும் 'இம்பீரியல்' வங்கியிலும், இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும்வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

**கடன்**

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

எஸ். கனகசபை
சிறுப்பர்

Std. 14.

அருள்வழி

# "நீர் ஆடல் பாடலும் வல்லீரோ ?"

— பொ. கிருஷ்ணன் —

பொன்னையே அடித்து அழகுறத் தகடாக்கியது போலத் தோற்றும் ஐந்து இதழ்களைக் கொண்டது கொன்றை. அந்த ஐந்து பொன்னிதழ்களூடே வளைந்து தோன்றும் பூந்தாதைத் தாங்கும் கம்பிகளை உற்றுப்பார்ப்பவர்க்கு ஓங்காரத்தின் நினைவு எழும். கொன்றை உச்சி முதல் அடிவரை கொம்பர்களிலெல்லாம் சரஞ்சரமாகப் பூத்துக்குலுங்குங் காட்சி, பரம்பொருளை நினைவுறுத்துவதனை ஆனய நாயனர் சரிதம் எடுத்துக் காட்டுகின்றது. கொன்றைப் பூவின் வடிவும், பொலிவும், நிறச்சிறப்பும் நோக்கி அதனைப் 'பொற்கொன்றை' என்பர் பெரியோர். கொன்றையின் உயர்ந்த தன்மை பற்றி அதனை இறைவன் மகிழ்ந்து அணிந்திருப்பதினல் ஒளவைப் பிராட்டியார் சிவபிரானுரை "கொன்றை வேந்தன்" எனக் கூறுகின்ருர். கொன்றை வேய்ந்திருப்பவன் கொன்றை வேந்தன் தானே. பொன்னினியல்பை நன்கு காட்டும் கொன்றை அணிந்தவனைச் 'செல்வன்' என்று கொன்றை வேந்தன் காப்பிலே மூதாட்டியார் செல்லமாக மொழிகிருர்.

### தனி முதல்வன்

சிவன் உயர்ந்த கொன்றைப் பூவின் பக்கலில் இழிந்த எலும்பு மாலையையும் அணிந்துள்ளான். இறந்த பிரமவிஷ்ணுக்களின் எலும்பாலாகிய மாலையஃதாகும். படைப்பவனும், காப்பவனுமிறக்கவும் துடைப்பவனுகிய தானே என்றும் அழிவின்றி நிற்கும் தனி முதல்வனென்பதற்கடையாளமாக அதனைச் சிவனணிந்துள்ளான். சுடலையிடத்தே காணப்படுவதாகிய இழிந்த எலும்பை உயர்ந்த கொன்றையினேடு அணிந்துள்ள சிவனை நோக்கித் திருப்பைஞ்ஞீலித் திருப்பாடலொன்றிற் செந்தமிழ் கைவந்த சுந்தரர் வினு நிகழ்த்துகிருர். 'ஏடுலாமலர்க் கொன்றை சூடுதிர் என்பெலாம் அணிந்தென் செய்வீர்?' செல்வக் கொன்றையின் பக்கலிலே புல்லிய என்பினையணிதல் தகுமா என்பது அவர் வினு. திருப்பைஞ்ஞீலியில் இறைவன் இருந்தருளினும் அவன் சொந்த இடமோ காடுதான் எனச்சுந்தரர் கண்டு மேலுமவனை விளித்து வினு நிகழ்த்துகின்ருர். பற்றற்ற பரங்கருணைத் தடங்கடலாகிய அவன் ஆசாபாசங்கள் அழித்தொழித்து நீருகிய சுடுகாட்டில் ஆடுதல் பொருத்தமானதே. இது பற்றியே சம்பந்தப் பிள்ளையாரும் 'காடலால வாயிலாய்' (வீடாகச் சுடுகாடு தவிர வேறு அவாவற்றவன்) என்று அவனை விளித்துக்கூறுகின்ருர். சுடுகாட்டிலே திருமேனியில் எலும்பும், கையிலே ஓடுங்கொண்டு நிற்கும் சிவம் தம்மை வணங்கும் அடியாருக்கு வழங்குவது யாதோ என்ற வினு சுந்தரர் அகத்திடையெழ அவர் அதை இறைவனிடமே கேட்டுவிடுகின்ருர். "அப்பா! உன்னை அடைந்த அடியார்க்கு நீ உன்னிடமுள்ளவற்றையே ஈவாய். ஆகவே நின்னடியார் பெறுவன சுடுகாடும், ஓடுந்தானு?" சுந்தரர் கேள்வி, பாட்டின் இரண்டாமடியிலே "காடு நும்பதி யோடுகையது காதல் செய்பவர் பெறுவதென்?" என இடம் பெறுகின்றது.

### அருட்பா

எலும்பணிந்து தானே முழுமுதற் பொருளெனு மாற்றைக் காட்டும் சிவன் திருமுன்னிலையில்—அவன் எல்லையிலா ஆற்றலின்முன் — சுந்தரர் ஆண்தன்மையொழிந்து நாயகியாகி அவன்தாளைத் தலைப்பட விழைகின்ருர். அதனுல் அவனுடன் சொல்லாட அவர் மனம் அவாவுகிறது. தனது திருப்பதி திருப்பைஞ்ஞீலிதான் எனச் சிவம் கூறிய விடையை வைத்துக்கொண்டு சுந்தரக் காதலி சொல்லாடும் சந்தர்ப்பத்தை மேலும் ஆக்கிக்கொள்ளுகிருள். இறைவனே தமது பதியை அழகுற அடைபுணர்த்தி 'பாடல் வண்டிசை ஆலுஞ் சோலைப் பைஞ்ஞீலி' என்று கூறி நிற்கின்ருன். அதனைக் காதலி திரும்பக் கூறுகிருள். "பாடிப்பாடி ஆடியசைந்து செல்லும் வண்டு மொய்க்கும் சோலை உமது திருப்பதியைச் சூழ இருக்குமாயின், அப்பதியின் சூழலின் தன்மையும் உம்மிடமிருக்கு மல்லவா?" என்ற பாவனையில் மேலும் கேள்வியை யடுக்கிப் பேசிக்கொள்வதற்கு வழியைப் பெருக்குகிருள் காதலி. வண்டு பாடி ஆடும் சோலையிலுள்ள நீரும் அங்ஙனமே ஆடிப்பாடும் இயல்புடையவரோ எனக் காதலி "ஆடல் பாடலும் வல்லீரோ" என்று பொருத்தமாகக் கேட்கின்ருள். அவனுடன் உரையாடத் தன்மனம் விழைவதனைக் காதலி 'சொலும்' என்னும் சொல்லாற் பெற வைக்கின்ருள். "உயர் கொன்றையோடு இழிந்த என்பையும் வைக்கும் நீர் இழிந்தவளாகிய என்னையும் உம்முடன் சேர்க்கலாகாதா? சேர்க்கலாம் தானே!" என்ற பொருள் படும்படி ஓராம் அடியை நலம்பெற அமைக்கிருள். காதலரிருவரதும் உரையாடலை வெளிப்படுத்தும் அகந்தழுவிவரும் அருட்பாவின் முழு உருவமும் வருமாறு:—

ஏடுலாமலர்க் கொன்றை
சூடுதி ரென்பெலாம் அணிந்
தென்செய்வீர்
காடுநும்பதி யோடுகையது
காதல் செய்பவர்
பெறுவதென்
பாடல்வண்டிசை ஆலும்
சோலைபைஞ் ஞீலியென்
னென்று நிற்றிராற்
ஆடல் பாடலும் வல்லிரோசொலு
மாரணீய விடங்கரே

[ஆரணிய விடங்கர் — திருப்பைஞ்ஞீலித் தலத்துள இறைவன் திருநாமங்களுள் ஒன்று. பைஞ்ஞீலி—பச்சை வாழையை உடையதலம்.]

இழிந்தோரையும் தன் கருணையால் உயர்த்தும் இறைவன் இயல்பையும், அவனது முழுமுதற்றன்மையையும், தன்னடியாரை ஆசையறுத்துப் பாசம் நீக்கிச் சிவமாக்கும் பண்பையும், வலிந்து, வலிந்து ஆன்மாக்களை ஆட்கொள்ளுமவன் எளிமையையும் சுந்தரர் தந்த இச்சந்தத்திருப் பாடல் புலப்படுத்துகிறது.

இங்கே வெட்டவும்

ஈழநாடு
சிவன்கோவில் மேலை வீதி,
தபாற்பெட்டி எண். 49
யாழ்ப்பாணம் (இலங்கை)

ஈழநாடு வார இதழுக்கு என்னை ஒரு சந்தாதரராகச் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன். அதற்குரிய ஆண்டுச் சந்தா ரூபாய் பத்து (10/-) இதனுடன் மணிஓடர் / செக் மூலம் அனுப்பி வைக்கின்றேன்

..............................
கையொப்பம்.

பெயர்: ..............................

விலாசம்: ..............................

இங்கே வெட்டவும்

# சமுதாயச் சீரமைப்புக்கு மனிதாபிமானம் நிறைந்த

## கலாச்சார மலர்ச்சி முக்கியம்

பம்பாய் உயர்நீதி மன்றத்தைச் சேர்ந்த நீதிபதி திரு. வி. எம். தார்க்குண்டே சமீபத்தில் 'ஸ்ரீ என். எம். ஜோஷி சமூகப் பயிற்சி வகுப்புகள்' என்ற வகுப்புக்களை ஆரம்பித்து வைக்கும் போது, இந்திய சமூகத்தில் சீர்திருத்தங்கள் செய்வதாயின் அவை மனிதாபிமானத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு கலாச்சாரப் புத்துணர்ச்சியிலேயே தங்கியுள்ளன எனக் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசியதாவது:

பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் முதலிய கல்வி நிலையங்களில் கல்வி பெற்றவரில் அநேகர் சாதி, மத வேறுபாடுகளுக்கு இலக்கானவர்களென்பது எல்லோருக்கும் தெரிந்ததே. கலாச்சாரக் கல்வி என்பது மனிதனின் சிறப்பியல்புகளைப்பற்றிய கல்வியேயாகும். சமூகத்தில் நிலவிவரும் இயல்புகளை அலசி ஆராய்தலும் இக்கல்வியுடன் தொடர்புடையதாகும்.

ஒரு காலத்தில் வளம் நிறைந்த, முன்னேற்றமான நாடாகத்திகழ்ந்த இந்தியா பின்னர் எதற்காக வளம் குறைந்த, பிற்போக்கான நாடாகியது? அதற்குக் காரணம் உண்டு. எட்டாம் நூற்றுண்டில் இந்தியாவில் தோன்றிய "மறுவுலகில் சஞ்சரிக்கும்" மனப்பான்மையும், தோல்வி மனப்பான்மையுமே அந்நாடு பின்தங்கி நிற்பதற்குக் காரணமாகும். இந்தியாவில் எட்டாம் நூற்றுண்டு தொடக்கம், பிரிட்டிஷார் தங்கள் அதிகாரத்தை நிலைநாட்டிய 19 ஆம் நூற்றுண்டு வரை விஞ்ஞானம், கைத்தொழில் என்பவற்றில் எவ்வித விருத்தியுமில்லாதிருந்தது. இது தற்செயலாக நடந்த காரியமல்ல. இந்நூற்றுண்டுகள் இந்தியச் சரித்திரத்தில் ஓர் இருள் சூழ்ந்த காலமாகும். ஐரோப்பாவும் இத்தகைய இருள்சூழ்ந்த காலங்களைக் கடந்துள்ளது. இந்த இருளிலிருந்து ஐரோப்பாவை விடுவித்து, அதை விஞ்ஞானம், பொருளாதாரமாகிய துறைகளில் முன்னேறச் செய்தது கலாச்சாரப் புத்துணர்ச்சியேயாகும். இக்கலாச்சாரப் புத்துணர்ச்சியின் முக்கிய அம்சங்களாகத் தோல்வி மனப்பான்மைக்கு மாருக மனிதாபிமான உணர்ச்சியும், கண்மூடித்தனமான நம்பிக்கைக்கு மாருக பகுத்தறிவும், கட்டுண்ட ஒரு சமுதாயத்திற்கு மாருகத் தனித்துவமும் விளங்கின. இத்தகையதோர் இயக்கம் இந்திய கலாச்சாரத் துறையில் நடைபெருததே இந்தியாவின் பிற்போக்கான நிலைக்குக் காரணமாகும். இந்தியாவின் அரசியல், பொருளாதார, சமூகச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு இத்தகைய கலாச்சாரப் புத்துணர்ச்சியும் அதனைச் சீர்தூக்கிப் பார்க்கும் ஆற்றலும் அவசியமாகின்றது. மனிதாபிமான இயல்புகளைக் கொண்டவர்களே அத்தகையவொரு விழிப்புணர்ச்சியை உண்டாக்க முடியும்.

# தமிழ் மறைக் கழகம்

## அகில இலங்கைத் தமிழ்மறைத் தேர்வு

தமிழ்மறைக் கழகம் ஆண்டுதோறும் நடத்தும் அகில இலங்கைத் தமிழ் மறைத் தேர்வு 1960 இல் மார்ச்சு மாதம் இரண்டாம் சனிக்கிழமை நடைபெறும் எனவும் 1-10-1959 க்கு முன் தேர்வுக்கு விண்ணப்பங்களை அனுப்பவேண்டுமெனவும் தமிழ்மறைக் கழகம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்ட செய்திகளாவன;

### தேர்வுப் பிரிவுகள் :

தொடக்கப்பிரிவு, கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு என நான்கு பிரிவுகளாகத் தேர்வு நடைபெறும். தொடக்கப் பிரிவுக்கு 10 வயதுக்கு மேற்படாதவர்களும் கீழ்ப்பிரிவுக்கு 15 வயதுக்கு மேற்படாதவர்களும் மத்தியபிரிவுக்கு 20 வயதுக்கு மேற்படாதவர்களும் தோற்றலாம். மேற்பிரிவுக்கு வயதுக் கட்டுப்பாடு இல்லை.

**தொடக்கப்பிரிவுக்குத்** திருக்குறளில் முதற் 15 அதிகாரங்களும், **கீழ்ப்பிரிவுக்கு** அறத்துப்பாலும், **மத்தியபிரிவுக்கு** அறத்துப்பாலும் பொருட்பாலும், **மேற்பிரிவுக்குத்** திருக்குறள் முழுவதும் தேர்வுக்குரிய பாடப் பகுதிகளாகும்.

### 17 பதக்கப் பரிசுகள் :

ஒவ்வொரு பிரிவிலும் முதல் இடத்தைப் பெறுபவர்களுக்குத் தங்கப் பதக்கமும் இரண்டாம் மூன்ரும் நாலாம் இடங்களைப் பெறுபவர்களுக்கு வெள்ளிப் பதக்கங்களும் வழங்கப்படும். தொடக்கப்பிரிவுக்குத் தோற்றுபவர்களுள் 50 சதவீதத்துக்குக் குறையாமற் புள்ளிபெறும் மிகக் குறைந்த வயதுடையவருக்கு ஒரு வெள்ளிப் பதக்கமும் உண்டு. புத்தகப் பரிசில்களும் பல உள. 50 சதவீதத்துக்குக் குறையாமற் புள்ளி பெறும் **ஒவ்வொருவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும். விபரங்களுக்கு தமிழ்மறைக் கழகம், 58, 34 ஆம் ஒழுங்கை, வெள்ளவத்தை. எனும் முகவரிக்கு எழுதுக.**

## வண. பிதா. பிலிப் அந்தோனிப்பிள்ளை

### ரோமாபுரியிலிருந்து திரும்பினர்

சென்ற நான்கு ஆண்டுகளாக ரோமாபுரியில் வேதசாஸ்திரம் கற்று, 1958 ஆம் ஆண்டில் டிசம்பர் மாதம் குருப்பட்டாபிஷேகம் பெற்ற வண. பிதா. பிலிப் அந்தோனிப்பிள்ளை ஓ. எம். ஐ. அண்மையில் கொழும்பு வந்துசேர்ந்தார். இவருடைய முதற் பூசை யாழ்ப்பாணம் பரிசுத்த புதுமைமாதா தேவாலயத்தில் சனிக்கிழமை (1-8-59) அன்று நடைபெறும். அன்று மாலை ஆலய முன்றலில் தேநீர் விருந்துபசாரமும் நடைபெறும்.

# சமய நெறியில் மாணவர்களைப் பயிற்றல் வேண்டும்

## அளவெட்டி சதானந்த வித்தியாசாலைப் பரிசளிப்பு விழாவில் அறிவுரை

நவீன கல்வி முறைகளுக்கெல்லாம் முக்கியத்துவம் கொடுத்து வருவதுடன் சமய வளர்ச்சியிலும் இப்பாடசாலை பெரும்பங்கு எடுத்துவருவதை நான்அறிந்துமகிழ்கிறேன். சமய நெறியில் நம்பிக்கையுள்ளவர்களாக மாணவர்களைப் பயிற்றுதலே சாலச்சிறந்ததாகும். இவ்வாறு அளவெட்டி சதானந்த வித்தியாசாலைப் பரிசளிப்பு விழாவில் தலைமை தாங்கிய வடபெரும்பாக வித்தியாதரிசினி திருமதி ஆர். ஆர். நவரத்தினம் தமது தலைமையுரையில் கூறினர்கள்.

பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு. அ. பொன்னுத்துரை தமது அறிக்கையில் தொழிற்கல்விக்கே முக்கியத்துவம் கொடுத்துப் பயிற்றி வருவதாகவும், பகிரங்க பரீட்சைகளுக்கெல்லாம் தொழிற்துறைப் பாடங்களைக் கட்டாய பாடங்களாக்கினுல் பல்வேறு தொழிற்கல்வியையும் மாணவர் தாமே வலிந்து கற்றுக் கொள்வர் என்றும் குறிப்பிட்டார்.

திரு. அ. சு. சுந்தரராசன் அவர்கள் "கம்பர் காட்டும் ஒழுக்க நெறி" என்பது பற்றிப் பேசினர். பலாலி அரசினர் ஆசிரிய கலாசாலை அதிபர் தமது சொற்பொழிவிலே "பெற்ருேர்கள் தம்பிள்ளைகளுக்கு முன்மாதிரியாக நடந்து காட்ட வேண்டும்" எனக் கூறினர்.

பாடசாலை முகாமைக்காரர் அவர்கள் பரிசில்களை வழங்கினர்கள்.

விளையாட்டுப் பகுதி

# கல்லூரிகளின் 2ம் வடபிரிவு விளையாட்டுப் போட்டி

# 22 அடி 2 அங். பாய்ந்த எஸ். ஏ. பெனடிக்ட்

## 15 மேற்பிரிவு நிகழ்ச்சிகள்: 8 கீழ்ப்பிரிவு நிகழ்ச்சிகள்

15 மேற்பிரிவு நிகழ்ச்சிகள், 8 கீழ்ப்பிரிவு நிகழ்ச்சிகள் அடங்கிய 2-ம் பிரிவுப் பாடசாலைகளின் விளையாட்டுப் போட்டி சென்ற் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. வண. அதனேஸியஸ் (தலைவர், இலங்கைக் கல்லூரிகள் விளையாட்டுச் சங்கம்) அவர்களின் தலைமையில் இப்போட்டி நடைபெற்றது. ஹாட்லி கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி, சென்ற் ஹென்றிஸ் கல்லூரி, சென்ற்ஜோன்ஸ் கல்லூரி, சென்ற் பற்றிக்ஸ் கல்லூரி, சேக்றெட் ஹாட் கல்லூரி, சென்ற் அந்தோனிஸ் கல்லூரி, சென்ற் ஜோசப் கல்லூரி ஆகிய 8 கல்லூரிகளிலிருந்து 160 விளையாட்டு வீரர்கள் இப்போட்டியில் கலந்துகொண்டனர். நீளப்பாய்தல்(மேற்பிரிவு), முப்பாய்ச்சல் (மேற் பிரிவு), அஞ்சலோட்டம் (கீழ்ப்பிரிவு) ஆகியவற்றில் புதிய சாதனைகள் நிறைவேறின. சென்ற்பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த எஸ். ஏ. பெனடிக்ட் நீளப்பாய்தலில் 22 அடி 2 அங். பாய்ந்தது மிகவும் பாராட்டக் கூடியதாகும். இலங்கைக் கல்லூரிகளின் சிறந்த சாதனைக்கு சமமாகப் பாய்ந்துள்ள இவ்வீரர் இவ்வருடம் ஒரு புதிய சாதனையை அங்கும் நிறைவேற்றுவார் என எதிர்பார்க்கலாம்.

**முதலிடம் பெற்றவர்களும் அவர்களுடைய சாதனைகளும்**

**மேற்பிரிவு:**

100 யார்: எஸ்.ஏ.பெனடிக்ட் சென்ற் பற்றிக்ஸ் 10·9 விளுடி, 220 யார்: எஸ். திருநாவுக்கரசு யாழ்ப்பாணகல்லூரி 25·3விளுடி 440 யார்: எஸ். திருநாவுக்கரசு யாழ்ப்பாண கல்லூரி55·3விளுடி 880 யார்: ரி. வர்ணலிங்கம் சென்ற் ஜோன்ஸ் 2 நி. 12·7 விளுடி, ஒரு மைல்: ரி. வர்ணலிங்கம், சென்ற் ஜோன்ஸ் 4 நி. 59·2 விளுடி, உயரப் பாய்தல்: எஸ். ரேரச், சென்ற் பற்றிக்ஸ் 5 அடி 7 அங். நீளப் பாய்தல்: எஸ். ஏ. பெனடிக்ட் சென்ற் பற்றிக்ஸ் 22 அடி 2 அங். ஈட்டி வீசுதல்: ஜே. ஜேசுதாசன் சென்ற் ஜோன்ஸ் 138 அடி 1 அங், தட்டெறிதல்: எஸ். எஸ். சண்முகராசா சென்ற்ஜோன்ஸ் 105 அடி 6 அங், குண்டெறிதல்: எஸ். எஸ். சண்முகராசா சென்ற் ஜோன்ஸ் 40 அடி 4அங், 120 யார் தடையோட்டம்: எம். தவயோகராசா யாழ்ப்பாணக் கல்லூரி 18·1 விளுடி, தடியூன்றிப் பாய்தல்: எஸ். ரேரச் சென்ற் பற்றிக்ஸ் 10 அடி 1 1/4 அங், அஞ்சலோட்டம் 4 × 440 யார்: யாழ்ப்பாணக் கல்லூரி 3நி. 49·7 விளுடி.

**கீழ்ப்பிரிவு:**

100 யார் ஏ. சி. மதனராசா யாழ்ப்பாணக் கல்லூரி 12·2 விளுடி, 220 யார் எஸ். எம். ராசநாயகம் சென்ற் அந்தோனிஸ் 26·6 விளுடி, உயரப்பாய்தல் வி. ராஜதுரை ஹாட்லி 4 அடி 11 அங், நீளப்பாய்தல் எஸ். எம். ராசநாயகம் சென்ற் அந்தோனிஸ் 17 அடி 9 1/2அங். தட்டெறிதல் ரி. இ. ஆனந்தராசா ஹாட்லி 98 அடி 2 அங். குண்டெறிதல் எஸ். பரராஜசேகரம் யாழ்ப்பாணக் கல்லூரி 31அடி 10அங். 80 யார் தடையோட்டம் எஸ். சபாநாதன் யாழ்ப்பாணக் கல்லூரி 12·7 விளுடி. அஞ்சலோட்டம் 4 × 110 யார் ஹாட்லி கல்லூரி 50·8 விளுடி.

# உடுவில் பெண்கள் பாடசாலை விளையாட்டுப் போட்டி

சென்ற வாரம் திரு. கே. கனகரத்தினம் அவர்கள் தலைமையில் உடுவில் பெண்கள் பாடசாலை விளையாட்டுப் போட்டி நடைபெற்றது. ஸ்ரீமதி கனகரத்தினம் பரிசில்களை வழங்கினர்.

**யாழ்ப்பாணம் விளையாட்டுச் சங்கம் விளையாட்டுப் போட்டி**

யாழ்ப்பாணம் விளையாட்டுச் சங்கமானது விளையாட்டுச் சங்கங்களுக்காக நடத்தும் 2வது விளையாட்டுப் போட்டி அக்டோபர்2-ம்3-ம்திகதிகளில்யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களால் கல்லூரி மாணவருக்காக நடாத்தப்படும் கனிஷ்ட விளையாட்டுப் போட்டி (3வது) செப்டம்பர் 25, 26-ந் திகதிகளில் நடைபெறுமெனவும் தெரிகிறது.

**யாழ்ப்பாணக் கல்லூரிகள் விளையாட்டுச் சங்கம்**

இச் சங்கத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நேற்றும், முன்தினமும் இன்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

---

## கண்டி வென்றது

கண்டிக்கும், திருக்கோணமலைக்கும் இடையில் நடைபெற்ற உதைபந்தாட்டத்தில் கண்டி ஒரு கோலால் வென்றது. கண்டி 2 கோல்களும் திருக்கோணமலை 1 கோலும் இட்டன.

# உண்மைக் கதைகள்: 'சூகர்' றே றெபின்சன் V







**தோல்விகள்:** 1951 ஆம் ஆண்டின் முற்பாகத்தில் றெபின்சன் 'உலகமத்திய நிறைக் குத்துச்சண்டை வெற்றிவீரர்'க்கான போட்டியில் பங்கு பற்றி வெற்றி பெற்ருன். ஜுலை மாதத்தில் அப்பட்டத்தை அவன் இழந்தான். பின் திரும்பவும் அவன் வெற்றி ஈட்டிக் கொண்டான். பின்னர் அவன் போட்டிகளிலிருந்து விலகி, ஓய்வு பெற்றுக் கொண்டான். 126 தடவைகள் போட்டியிட்ட அவன், இரண்டேஇரண்டு முறைதான் தோல்வியுற்ருன். ஆனல், வியாபாரத்துறையில் ஏற்பட்ட தோல்விகள் அவனைத் திரும்பவும் போட்டிகளில் ஈடுபடச் செய்தன. அவனுடைய தீர்மானத்திற்கு அவன் மனைவி பக்க பலமாக விருந்தாள்.

**போட்டிச் சண்டைகள்:** "சூகர்" றே திரும்பவும் போட்டிகளில் ஈடுபட்டான். அவனுடைய முதற் போட்டிகளில் அவன் அவ்வளவு திறமையுடன் விளங்கவில்லை. அவனது நண்பர்கள் அவனைப் போட்டிகளினின்றும் விலகச் சொன்னுர்கள். ஆனல், கடவுளின் மீதுள்ள நம்பிக்கையும், மனைவியின் ஆதரவும் அவனைக் கைவிடாது காப்பாற்றின. ஈற்றில் 'பழைய' றெபின்சனுகவே மாறி, 1955 ஆம் ஆண்டில், தான் 1952 ஆம் ஆண்டில் இழந்த 'வெற்றி வீரர்' பட்டத்தைத் திரும்பவும் பெற்றுக் கொண்டான்.

**இன்றைய றெபின்சன்**— இன்று, தனது 38 ஆவது வயதில், றெபின்சன் உலக மத்திய நிறைக் குத்துச் சண்டை வெற்றி வீரனுகவே திகழ்கிருன். இந்தப் பட்டத்தை அவன் ஐந்து தடவைகள் தாங்கியுள்ளது அவனது தனிப் பெரும் சாதனையாகும். இப்பொழுதும் போட்டிகளில் ஈடுபட்டாலும், றெபின்சன் சிறப்பாக ஒரு காட்சியாளனுகவே செயலாற்றுகிருன். றெபின்சன் தனது எதிர்காலம் பற்றித் திடமான நம்பிக்கை கொண்டுள்ளான்-கடவுளின் மீதுள்ள நம்பிக்கையின் பயனுக.

★

# முதலிடம் பெற்ற இளங்கோ இல்லம்

## ஒரு புள்ளியினுல் ஒதுக்கப்பட்ட வள்ளுவர் இல்லம்

"இளமையில் விளையாட்டுக்களில் ஈடுபடுதல் பிற்கால வாழ்வுக்கு எவ்வளவோ உபயோகமாகிறது" என்று நடேஸ்வராக் கல்லூரி விளையாட்டுப் போட்டிக்குத் தலைமை தாங்கிய யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி திரு. பி. ஸ்ரீஸ்கந்தராசா தமது தலைமையுரையில்குறிப்பிட்டார். தம்முடைய இளமை நாட்களை ஞாபகமூட்டும் வகையில் களிப்பூட்டுவதாக அப்போட்டி அமைந்திருந்ததாகவும் கல்லூரியின் தரம் உயர்த்தப்பட்ட பிறகு நடைபெறும் முதல் போட்டிக்குத் தலைமை தாங்குவதுபற்றித் தாம் மகிழ்வதாகவும் அவர் கூறினர். ஆண்களுக்கும், பெண்களுக்கும் ஆக மொத்தம் 61 நிகழ்ச்சிகள் இப்போட்டியில் இடம் பெற்றன. விளையாட்டு நிகழ்ச்சிகளோடு நிறுத்திக் கொள்ளாது விநோத உடைப்போட்டி, தடை ஓட்டம், சங்கீதக் கதிரைகள், பெட்டி இழைத்தல், தலையணைச் சண்டை போன்ற நூதன நிகழ்ச்சிகளும் புகுத்தப்பட்டிருந்தன. ஸ்ரீமதி ஸ்ரீஸ்கந்தராசா பரிசுகளை வழங்கினர்.

**முக்கிய முடிவுகள்:**

விநோத உடை 1. எஸ். பத்மநாதன் (வள்ளுவர்), 2. எஸ். பார்வதிதேவி (வள்ளுவர்), 3. எஸ். சத்தியவதி (கம்பர்)

கயிறு இழுத்தல் 1. கம்பர் இல்லம், 2. இளங்கோ இல்லம், 3. வள்ளுவர் இல்லம்.

**அணிவகுப்பு**

1. இளங்கோ இல்லம், 2. வள்ளுவர் இல்லம், 3. கம்பர் இல்லம்.

**பந்தல் அலங்காரம்**

வள்ளுவர் இல்லம்.

**கட்டுப்பாடு:**

வள்ளுவர் இல்லம்.

**உத்தியோகத்தர் ஓட்டம்**

திரு. கே. எஸ். சிதம்பரநாதன், செல்வி.எம். செல்லையா.

**பிரத்தியேக வெற்றி வீரர்**

ஆண்கள்: கீழ்ப்பிரிவு எஸ். செல்வரத்தினம் (கம்பர்), மத்திய பிரிவு எஸ். என் இராஜரத்தினம் (இளங்கோ), மேல் பிரிவு ஆர். கலியுகவரதன் (கம்பர்)

பெண்கள்: எஸ். புனிதகிளி (பாரதி) எம். கருணைகிளி (இளங்கோ) கே. லங்காதேவி (வள்ளுவர்)

**இல்லங்களின் இறுதிநிலை**

1. இளங்கோ 205 1/2 புள்ளிகள், 2. வள்ளுவர் 204 1/2 புள்ளிகள், 3. கம்பர் 188 புள்ளிகள், 4. பாரதி 177புள்ளிகள்.

# வடமாகாண ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகள்

## விளையாட்டுப் போட்டி

"இப்போட்டியை ஏற்பாடு செய்தவர்கள் ஒன்றன்பின் ஒன்ருக நிகழ்ச்சிகள் ஒழுங்காக அலுப்புத்தட்டாத வகையில் அமைந்திருந்தது பாராட்டுக்குரியது" என்று வடமாகாண ஆசிரியபயிற்சிக் கலாசாலைகள் விளையாட்டுப் போட்டிக்குத் தலைமைதாங்கிய மாவட்ட அதிபர் திரு. ம. ஸ்ரீகாந்தா குறிப்பிட்டார். அவர் எம். எச். எம். கரீம் போன்றவர்கள் வேறு எவருக்கும் விளையாட்டுக்களில் சளைத்தவர்களல்ல என்றும், மூன்று வருடங்களாக அடுத்து வெற்றி பெற்று கொழும்புத்துறை சென்ற்ஜோசப் பயிற்சிக் கலாசாலையை ஒரு புள்ளியால் தோற்கடித்த பலாலி பயிற்சிக் கலாசாலை விசேஷ வகுப்பினர் பாராட்டுக்குரியவர்கள் என்றும் உடலைப் பேணினுல் தான் நாகரிகம், பண்பாடு, மொழி ஆகியவற்றைக்காப்பது சாத்தியமாகுமென்றும் குறிப்பிட்டார். தலைவர் வண. பிதா தி. யோகுப்பிள்ளையவர்கள் அனைவரையும் வரவேற்றுப்பேசினுர். திருமதி ம. ஸ்ரீகாந்தா பரிசில்களை வழங்கினர். 5 ஆண்கள் மைதான நிகழ்ச்சிகள், 4 ஆண்கள் ஓட்டப்பாதை நிகழ்ச்சிகள், 1 பெண்கள் மைதான நிகழ்ச்சி, 3பெண்கள் ஓட்டப்பாதை நிகழ்ச்சிகள், 2 ஆண்கள் கோஷ்டி நிகழ்ச்சிகள், 2 பெண்கள் கோஷ்டி நிகழ்ச்சிகள் என மொத்தம் 17 நிகழ்ச்சிகளும் அணிவகுப்பும் இப் போட்டியில் இடம் பெற்றன. பெண்கள் 1 புதிய சாதனையையும் ஆண்கள் 5 புதிய சாதனைகளையும் நிறுவினர். இப்போட்டிகளில் 38 ஆண்களும் 20 பெண்களும் கலந்து கொண்டனர். முடிவுகள் பின்வருமாறு:-

கைப்பந்து: கொழும்புத்துறை.

வலைப்பந்து: கோப்பாய் மகளிர்.

220 யார் ஆண்கள்: எம். எச். எம். கரீம் 26 விளுடி (பலாலி விசேஷ வகுப்பு)

100 யார் ஆண்கள்: எம். எச். எம். கரீம் 10. 8 விளுடி (பலாலி விசேஷ வகுப்பு)

நீளப்பாய்தல் ஆண்கள்: எம். எச். எம். கரீம் 19' 4 1/2" (பலாலி விசேஷ வகுப்பு)

குழு ஓட்டம் ஆண்கள்: பலாலி விசேஷ வகுப்பு 26. 55 விளுடி.

அஞ்சலோட்டம் ஆண்கள்: பலாலி விசேஷ வகுப்பு 51.9 விளுடி.

அஞ்சலோட்டம் பெண்கள்: திருநெல்வேலி 65.8 விளுடி சிறந்தசாதனைக்கிண்ணம் ஆண்கள்.

எம். எச். எம். கரீம் பலாலி விசேஷ வகுப்பு.

சிறந்தசாதனைக்கிண்ணம் பெண்கள்.

எஸ். சிவபாக்கியரத்தினம் திருநெல்வேலி.

### இறுதிநிலைகள்

**ஆண்கள்**

பலாலி விசேஷவகுப்பு 42 புள்ளிகள்.

கொழும்புத்துறை 41 புள்ளிகள்.

நல்லூர் 15 புள்ளிகள்.

திருநெல்வேலி 10 புள்ளிகள்.

பலாலி சாதாரண வகுப்பு 3 புள்ளிகள்.

**பெண்கள்**

திருநெல்வேலி 32 புள்ளிகள்.


நல்லூர் 15 1/2 புள்ளிகள்.

கோப்பாய் 11 புள்ளிகள்.

பலாலி விசேஷ வகுப்பு 7 1/2 புள்ளிகள்.


முருகன் (ஜிந்துப்பிட்டியா) ஓடியன் (மவுண்ட் லவினியா) ராணி (யாழ்ப்பாணம்) லிபேர்ட்டி (வதுளை) ஜோதி (திருக்கோணமலை)

முதலிய படமாளிகைகளிற் நூற்றுக்கணக்கான மக்கள் கண்டு களிகொள்கின்றனர்!



எஸ். எஸ். ராஜேந்திரன்
பி. சரோஜாதேவி
எஸ். வி. சகஸ்ரநாமம்
டி. ஆர். ராமச்சந்திரன்
வி. ஆர். ராஜகோபால்
டி. பாலசுப்பிரமணியம்





டைரக்ஷன்: பீம்சிங்

மற்றும் பலர் திரம்பட நடித்த

நடனம்: சாயி - சுப்புலெட்சுமி

சாவித்திரி பிக்சர்ஸ்

# பிரஸிடெண்ட் பஞ்சாட்சரம்

பின்னணி:
டி. எம். சௌந்தரராஜன்
எஸ். ஸி. கிருஷ்ணன்
எம். எல். வசந்தகுமாரி
பி. லீலா பி. சுசீலா

''சபாஷ் மீனா'' வுக்குப்பின் தமிழ்த்திரையில்
சிறந்த ஹாஸ்ய விருந்தாக ஒளி வீசும்
இப்படத்தைப் பார்க்கத் தவறுதீர்கள்!

சங்கீதம்: ஜி. ராமநாதன்

---

மகத்தான 2-வது வாரம்

இப்பொழுது திரையிடப்படுகிறது!

செல்லமஹால் (கொழும்பு)

தினசரி
மாலை 6, இரவு 9-30 மணி

# ஸ்ரீ ராம பக்த ஹனுமான்

(தமிழ்)

- எழுத்துக்கு அப்பாற்பட்ட இராமாயணத்தின் அற்புதங்களைக் கண்டுகளியுங்கள்.
- கண்ணைக்கவரும் பல வர்ணக்காட்சிகள் நிறைந்த ஓர் அற்புத ஓவியம்!

---

இப்பொழுது திரையிடப்படுகிறது!

சிலோன் தியேட்டர்ஸ் தாபனத்தாரின் குதூகல வெளியீடு!

கெயிட்டி திரையில்

என். டி. ராமராவ், அஞ்சலிதேவி, ராஜசுலோசனா, ரேலங்கி

மற்றும் பலர் திறம்பட நடித்த

# பச்சைமலைக் குறத்தி


(தமிழ்)

பார்த்தோர் உள்ளத்தைப் பரவசமூட்டும் பாங்கான திரை ஓவியம்.

## திரைவானிலே ஒரு மறுமலர்ச்சி
### ஜூலை 31-ந் திகதி வெள்ளி முதல்

**கிங்ஸ்லி** (கொழும்பு) **பிளாஸா** (வெள்ளவத்தை) **நவா** (கொம்பனித் தெரு) **வெலிங்டன் - மனோகரா** (யாழ்ப்பாணம்) **விஜயா** (மட்டக்களப்பு) **வெம்பிளி** (கண்டி)

**ஸ்ரீ கிருஷ்ண** (திருக்கோணமலை) **விஜிதா** (மஸ்கேலியா) **மொடர்ன்** (பதுளை) **ஜோதி** (களகா)



தற்காலத் திரைப்படங்களின் நிலை தங்களுக்குத் திருப்தி அளிக்க வில்லையே என்று மனம் வாடி வரும் ரசிகர்களின் உள்ளங்களைத் திரும்பவும் தட்டி, தயங்காதீர்கள் தரணியிலே தலைசிறந்த தீந்தமிழ் திரை ஓவியங்களும் இல்லாமல் இல்லை என்பதுக்கோர் எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது "சம்பூர்ண ராமாயணம்"



- கவர்ச்சி அளிக்கும் கருத்தோடு பூத்த கதை!
- உள்ளத்தோடு உறவாடும் உணர்ச்சி மிகுந்த சம்பவங்கள் !!
- கண்ணைக்கவரும் வண்ண நடனங்கள் !!!
- கேட்போரை மெய்மறக்கச் செய்யும் கலைப்பண்பு செறிந்த தீஞ்சுவைக் கீதங்கள்!!!!

★ சிவாஜி கணேசன்
★ என். டி. ராமராவ்
★ டி. கே. பகவதி
★ வி. நாகையா
★ பீ. வீ. நரசிம்மபாரதி
★ வி. கே. ராமசாமி
★ ஓ. ஏ. கே. தேவர்
★ கே. நடராஜ்
★ பத்மினி
★ ஜீ. வரலெக்ஷ்மி
★ எம். என். ராஜம்
★ புஷ்பவல்லி
★ எஸ். டி. சுப்புலெக்ஷ்மி
★ சந்தியா
★ சீ. டி. ராஜகாந்தம்
★ பேபி உமா
★ பேபி இந்திரா

மற்றும் பலர் நடித்த



பின்னணி:
சீ. எஸ். ஜெயராமன்,
டி. எம். சௌந்தரராஜன்,
சீர்காழி கோவிந்தராஜன்,
திருச்சி லோகநாதன்,
எஸ். சீ. கிருஷ்ணன்,
ஜிக்கி, கே. ராணி,
எம். எஸ். ராஜேஸ்வரி,
ஏ. பி. கோமளா, பாலசரஸ்வதி,
வுடுத்தா.

டைரக்ஷன்:
கே. சோமு

வசனம்:
ஏ. பி. நாகராஜன்

சங்கீதம்:
கே. வி. மகாதேவன்

பாடல்கள்:
மருதகாசி

தயாரிப்பு:
எம். ஏ. வேணு

ஸ்ருடியோ:
ரத்ன (சேலம்)

# சம்பூர்ண ராமாயணம்

பார்ப்போர் உள்ளத்தை விட்டு என்றும் நீங்காத பாங்கான பைந்தமிழோடு கூடிய தீந்தமிழ் திரை ஓவியம்.
அனைத்தும் ஒன்றிய கற்பனை குன்றாத கலைச் சித்திரம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கலாநிலையப் பதிப்பகத்தில் 'ஈழநாடு' பத்திரிகையின் சொந்தக்காரருக்காக பாலசுப்பிரமணியம் சிவானந்தன் அவர்களால் அச்சிடப்பெற்று, எஸ். எம். யோசவ் வில்பிறட் அவர்களால் 1959-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 1-ந் திகதி வெளியிடப்பெற்றது.